DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan, Broker
Joy H. Selvanayagam, Broker

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
முதல் தரம் வீடு வாங்குபவர்களுக்கான அரசாங்க சலுகைகள் பற்றி அறிய என்னை அழையுங்கள்
Selva Karthigesu B.com (Hons), Sales Representative
416-648-9757
CENTURY 21

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA Mortgage Solutions Inc
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
# உதயன்
Member of National Ethnic Press and Media Council of Canada
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1320 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 23, 2021

# கனடா ஸ்காபுறோ நகரில் தமிழ் மக்களுக்கான ஒரு சமூக மையம் 32 மில்லியன் டாலர்கள் செலவில் அமைக்கப்படவுள்ளது

(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)

* மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு - 14.3 மில்லியன். மாகாண அரசின் நிதி ஒதுக்கீடு- 12 மில்லியன்: மிகுதி நிதி கனடிய சமூகம் திரட்டவேண்டியது.

* தமிழர் சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு எமது அரசாங்கம் எப்போதும் தயாராகவுள்ளது - *ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட்*

* தமிழ்க் கனடியர்களின் நீண்ட நாள் கனவு நிறைவேறும் நாள் மிக அருகில் - *ஹரி ஆனந்தசங்கர் எம். பி*

* சவால்களை எதிர்கொள்ளும் சமூகமாக தமிழர் வெற்றிகளை ஈட்டி வருகின்றார்கள் - *லோகன் கணபதி,மாகாண சபை உறுப்பினர்*

* தமிழ்க் கனடியர்களின் வெற்றியானது அவர்களது கனவு மட்டுமல்ல, கடின உழைப்பிலும் தங்கியிருக்கின்றது *- விஜேய் தணிகாசலம், மாகாண சபை உறுப்பினர்*

* கனடாவின் மூன்று வகை அரசுகளும் இணைந்து தமிழ்க் கனடியர்களுக்கு தமிழர் சமூக மையத்தை பரிசளித்துள்ளன *-கிறிஸ்ரினா பிரிலாண்ட்- கனடிய பிரதிப் பிரதமரும் நிதி அமைச்சரும்*

* தமிழ் மொழியின் பண்டைய சிறப்புக்களை அறிந்து நான் வியப்படைந்தேன் - *ஜோன் ரோரி- ரொறன்ரோ நகர பிதா*






*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)*

# மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்கான நாவன்மை நிகழ்ச்சி — 2021



கனடா உதயன் பத்திரிகை ஏற்பாட்டில் கனடிய வர்த்தகப் பிரமுகர்கள் திருவாளர்கள் சங்கர் நல்லதம்பி மற்றும் பாஸ்கரன் சின்னத்துரை ஆகியோரின் ஆதரவில் நடைபெறுகின்றது

கனடா உதயன் பத்திரிகையின் வெள்ளிவிழாவை முன்னிட்டு தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் மலேசியா தேசத்தில் வாழும் தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்கான நாவன்மை நிகழ்ச்சி-2021 எதிர்வரும் 25-07-2021 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறுகின்றது.

*(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)*

DAWN TRANSPORTS & SERVICES
FREE ESTIMATES
மூவிங் & டெலிவெறிஸ்
26 FEET CARGO VAN
உங்கள் DELIVERY தேவைகளுக்கு
இலவச மதிப்பீடு Tel: 416-452-2251
We do packaging, wrapping, Moving to storage, Junk removal, Express Services Available

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line Visit
(416) 489-2000 GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 — 905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905 794 4404

# ஏதிர்வரும் ஆகஸ்ட் 6 திகதி வெள்ளியன்று மலர்கிறது...

உதயன் UTHAYAN www.uthayannews.ca வெள்ளி விழா 25th ANNIVERSARY

## "உதயன்" வெள்ளிவிழா ஆண்டுச் சிறப்பிதழ்

- உங்கள் அபிமானத்திற்குரிய பத்திரிகையின் வெள்ளி விழா ஆண்டுச் சிறப்பிதழ் எதிர் வரும் **06-08-2021** வெள்ளிக்கிழமை வெளிவருகின்றது.
- தமிழ் பேசும் நல்லுலக நாடுகளிலிருந்து சிறப்புக் கட்டுரைகள், இலக்கியப் படைப்புக்கள், வாழ்த்துச் செய்திகள் ஆகியவற்றோடும் அதிக பக்கங்களோடும் வாசகர்களையும் வர்த்தக அன்பர்களையும் எழுத்தாள நண்பர்களையும் மகிழ்விக்க மலர்கிறது.
- சிறப்பிதழில் தங்கள் படைப்புக்கள் இடம்பெற விரும்பும் எழுத்தாளர்கள் கவிஞர்கள் வரவேற்கப்படுகின்றார்கள். தங்கள் வர்த்தக நிறுவனங்களின் விளம்பரங்களை பிரசுரித்து ஆதரவளிக்கவும் வாழ்த்தவும் விரும்பும் அன்பர்கள் தொடர்பு கொள்ளவும்.

VJ-Colombo

**416 732 1608** அல்லது **416 752 1524** | மின்னஞ்சல்:- **uthayannews@yahoo.com**



# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
**416.298.FOOT (3668)**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு, இந்தியாவில் மாத்திரமே குடியுரிமை அந்தஸ்த்து நிராகரிக்கப்படுகின்றது?

இலங்கையில் இடம்பெற்ற இன முரண்பாடுகள் மற்றம் அரசிற்கு எதிரான ஆயுதப்போராட்டம் ஆகியவை காரணமாக, உலகின் பல நாடுகளுக்குச் சென்ற இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு பெரும்பாலான மேற்குலக நாடுகளில் நிரந்தர வதிவுரிமை அந்தஸ்த்து வழங்கப்பெற்று பின்னர் சில ஆண்டுகளின் பின்னர் குடியுரிமை அந்தஸ்த்து வழங்கப்பெறுகின்றது. இவ்வாறு அகதிகளாகச் சென்றவர்கள் மேற்குலக நாடுகளில் அரசியல் மற்றும் நிர்வாகத் தளங்களில் உயர் நிலைக்குச் சென்றுள்ளார்கள்.

ஆனால் அயல் நாடு என்று எமது இலங்கைத் தமிழர்கள் அன்போடு அழைக்கும் இந்தியாவில் மாத்திரமே எம்ம க்களுக்கு குடியுரிமை அந்தஸ்த்து தொடர்ச்சியாக நிராகரிக்கப்பட்டு வருகின்றமை நீண்ட கால வடுக்களாய் அவர்கள் மனங்களில் பதியப்பட்டுள்ளது.

உலகின் ஏனைய நாடுகளுக்கு விமானங்கள் மூலமாகப் பறந்து சென்ற எமது இலங்கைத் தமிழர்கள் அந்தந்த நாடுகளில் தகுந்த முறையில் உள்வாங்கப்பெற்று பின்னர் உரிய விசாரணைகள் முடிவுற்ற பின்னர் அரசியல் அந்தஸ்த்து பெற்ற அகதியாக மேலும் உள்வாங்கப்படுகின்றார்கள். ஆனால் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக அந்த இந்திய மண்ணில் தமிழரசு என்ற தமிழ்நாட்டில் வாழந்து வந்தாலும் உரியவர்களால் எமது இலங்கைத் தமிழ் அகதிகளின் வலிகள் தொடர்பான கதைகள் கேட்கப்படவில்லை. வள்ளங்களில் பல ஆபத்துக்களைத் தாண்டி தமிழ்நாட்டுக் கரைகளை அடைந்த எமது மக்கள் இன்னும் அழுகையோடும் துயரங்களோடும் காலங்களைக் கடந்து சென்ற வண்ணம் உள்ளனர்.

இலங்கையில் போர்ச் சூழலின் நடுவே தங்களது உடைமைகளைக் கைவிட்டு, உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் ஒரே நோக்கத்துடன் இந்தியாவில் கரையேறிய காலகட்டம், தமிழர் வரலாற்றில் துயரம் படிந்த அத்தியாயம். தொண்ணூறுகளை ஒட்டிய ஆண்டுகளில் இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்குச் சென்ற அகதிகள் ஒரே மொழி, ஒரே வாழ்க்கை முறை ஆகியவை அளிக்கும் பாதுகாப்புணர்வின் காரணமாக அங்கேயே தங்கிவிட்டார்கள். இப்போது இலங்கை என்பது அவர்களுக்குப் பெரிதும் இளம் பிராயத்து நினைவுகள் மட்டுமே. இந்தியாவிலேயே பிறந்து வளர்ந்த இரண்டாவது தலைமுறையும் உருவாகிவிட்டது. இந்நிலையில், அவர்கள் இலங்கைக்குத் திரும்பிச்செல்லும் பட்சத்தில், அங்கு ஒரு புதிய வாழ்க்கையைத் தொடங்குவதற்கான எந்த ஆதாரமும் அவர்களிடம் இல்லை.

தமிழ்நாட்டில் உள்ள 100-க்கும் மேற்பட்ட அகதிகள் மறுவாழ்வு முகாம்களில் சுமார் ஒரு இலட்சம் இலங்கைத் தமிழர்கள் தங்கியிருக்கலாம் என்று மதிப்பிடப்படுகிறது. மாவட்ட நிர்வாகத்தை அணுகி, தங்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பிலும் அகதிகளின் குடியுரிமைக் கோரிக்கைகள் கருணையுடன் பரிசீலிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் குடியுரிமை பெற்றால் மறுவாழ்வு முகாம்களிலிருந்து பிற ஊர்களுக்குச் சென்று வேலைவாய்ப்புகளை எளிதில் பெற முடியும் என்பது அவர்களின் எதிர்பார்ப்பு. 2019-ம் ஆண்டின் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், வங்கதேசம் ஆகிய நாடுகளிலிருந்து வந்த இந்துக்களைப் போலத் தங்களுக்கும் குடியுரிமை வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்பது அவர்களது வருத்தமாகவும் இருக்கிறது.

இலங்கையில் பூர்விகத் தமிழர்கள் சிறுபான்மையினராக இருந்தத காரணத்தாலேயே, அவர்கள் அரசியல் பிரதிநிதித்துவத்தை இழந்தனர். அதுவே போர்ச் சூழலை நோக்கியும் தள்ளியது.

இவ்வாறான சூழ்நிலையில் தங்களுக்கு பிறந்த நாட்டுக்கு செல்வதற்கு போதிய பலமற்றவர்களாக இருப்பதால் இந்திய குடியுரிமையைப் பெற்றுக் கொள்ளத் துடிக்கும் எம்மவர்களுக்கு அவசியம் இந்தியாவின் குடியுரிமை அந்தஸ்த்து வழங்கப்பட வேண்டும் என்பதையே நாமும் வலியுறுத்துகின்றோம்.

இந்தியாவின் 2019-ம் ஆண்டின் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், வங்கதேசம் ஆகிய நாடுகளிலிருந்து சென்ற இந்துக்களைப் போலத் தங்களுக்கும் குடியுரிமை வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்பது இலங்கைத் தமிழர்களின் இதயங்களில் பதிந்த வலியாகவும் வருத்தமாகவும் உள்ளன என்பதே கண்கூடு.

# ஆர்ப்பாட்டம் செய்த காரணத்தால் கைது செய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் மீண்டும் போர்க்கொடி



கடந்த வாரம் இலங்கைப் பாராளுமன்றம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்த காரணத்தால் கைது செய்யப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மற்றும் முக்கிய உறுப்பினர்கள் மீண்டும் போர்க்கொடிகளை உயர்த்தியுள்ளார்கள் என்பது தெரியவந்துள்ளது இலங்கையில் பாடசாலை அதிபரகள் மற்றும் ஆசிரியர்களின் சம்பள பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்பாக ஜனாதிபதியுடனும் செவ்வாய்கிழமை கல்வி அமைச்சருடனும், பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதாக ஜனாதிபதி செயலக அதிகாரிகள் நேற்று தெரிவித்ததாக அண்மையில் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இன்று வெள்ளிக்கிழமை காலை தெரிவித்தார்.

அதேவேளை, பேச்சுவார்த்தைகளில் ஈடுபட தயார் என்ற போதிலும், எங்களது பிரச்சினைகளுக்கான நிரந்தர தீர்வு வழங்கப்படும் வரை பணிப் பகி'கரிப்பு போராட்டத்தை கைவிடப்போவதில்லையென்றும் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, ஜனாதிபதி செயலக அதிகாரிகளுடன் நடைபெற்ற சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி செயலக அதிகாரிகளுடன் நீண்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதன் போது கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தொலைபேசியூடாக கலந்துரையாடினார். எமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான சகல முயற்சிகளையும் நாம் முன்னெடுத்துள்ளோம்.

கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்கள் ஐவர் கொண்ட குழுவின் அறிக்கை காணப்படுகிறது. அதிபர் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கள் தொடர்பான வழக்கு தீர்ப்பு , அமைச்சரவை பத்திரம், அரசாங்கத்தின் கொள்கை பிரகடனம் என்பனவும் உள்ளன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் திங்களன்று அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்.






# காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும் ஒரு நம்பிக்கையான நிறுவனம்

## FREE CLASSES

To Become RESP & INSURANCE ADVISORS

MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED

LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE



**Sritharan Thurairajah**

Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist

Direct: 416.918.9771

Business: 416.321.2500

MDRT Member of Million Dollar Round Table

Life100 INSURANCE & INVESTMENTS INC.

- digi Media -

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6

Web: www.life100.ca, E-mail: info@life100.ca

La Capitale | IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. | Assumption Life | BMO Insurance

Are you getting Million Dollar advice?


# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

## சமையல் வல்லுனர்கள் (Cook) தேவை

ஸ்காபுறோவில்
**Danforth & Eglinton East**
சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள பிட்சா உணவகத்தில் டெலிவரி ட்ரைவர்கள்
மற்றும் சமையல் வல்லுனர்கள் **(Cook)** ஆகியோர் உடனடியாகத் தேவை.

**Call: : (416) 659-0483**

## House For Sale in Ratmalana Sri Lanka

Two storied house on 9.5 perches
300 meters from Galle Road.
Seaside.Maliban Junction.
Rs 20 million.
Please email cansri1986@gmail.com

**Call: 416 739 9107**

## அலுவலக வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் அமைந்துள்ள சிறிய அலுவலகம் ஒன்றுக்கு பகுதி நேர அலுவலக உதவியாளர் உடனடியாகத் தேவை. போதிய ஆங்கில அறிவு, கொம்பியூட்டரில் வேலை செய்த அனுபவம் மற்றும் அடிப்படை Book Keeping அனுபவம் ஆகியன அவசியம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:

**416 732 1608**

## அறை வாடகைக்கு உண்டு

**Eglinton / McCowan** சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள வீடொன்றில் (43 Blue Lagoon Crt) அறை வாடகைக்கு உண்டு.
**Parking spot provided.**
**Close to GO Train, NoFrills, Walmart & many convenient stores.**
**Rent: $650 (Utilities included)**

**Call: : (416) 235-6130**

## வேலை வாய்ப்பு

**PAINTERS WANTED**

**Nasser Painting Decorating**
**Facebook: Nasser Decorating & Painting**

**Email: spantexco1@gmail.com**

**Phone: (226) 503-6119**

**Name: Abdalnasser Muqedi**

## COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: (416) 894-6244**

## காரைக்குடி செட்டிநாடு உணவகத்தில் வேலை வாய்ப்பு

ஸ்காபுறோவில் கென்னடி - லோறன்ஸ் சந்திப்புக்கு அருகில் அமைந்துள்ள காரைக்குடி செட்டிநாடு உணவகத்திற்கு தோசை மற்றும் பரோட்டா தயாரிக்க வல்ல சமையல் வல்லுனர்கள் உடனடியாகத் தேவை.
சிறிது அனுபவம் விரும்பத்தக்கது.
தகுந்த சம்ளம் வழங்கப்படும்.

**Call: (416) 701-0003**

## இரண்டு உணவகங்களில் வேலை வாய்ப்பு

ரொரன்ரோ மாநகரில்
**Yonge & St.Clair, Danforth & Woodbine**
சந்திப்புக்களுக்கு அருகில் அமைந்துள்ள இரண்டு வெவ்வேறு உணவகங்களுக்கு முழு நேர, பகுதி நேர வேலையாட்கள் தேவை.

1. **Cook (Canadian or Thai Food) -** இரண்டு வருட அனுபவம் தேவை
2. **Kitchen Helper** (அனுபவம் தேவையில்லை)

**தொடர்புகளுக்கு: (416) 999-7015**
**அல்லது மின்னஞ்சல்: rasiah@live.ca**

## TUTORING AVAILABLE

**French and English tutoring available. An Ontario Certified teacher is offering online tutoring to help you improve your writing, reading and speaking skills in French and/or English.**
**Prepare for next school year with a teacher who has experience with the Ontario curriculum.**
**Homework help and test preparation provided.**

***Call: (416) 723-7287***

## TAKE-OUT & CATERING PALACE for SALE

**Markham** நகரில்
**Steel & Woodbine** சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள
**Take-out & Catering Palace**
விற்பனைக்கு உண்டு.

**Call: AMAR (416) 988-9518**

## DZ DRIVERS WANTED

DZ driver wanted for GTA & surrounding areas.

**Call NATHAN: (416) 520-1324**

Email: Sentax72@gmail.com

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா ஸ்காபுறோ நகரில் தமிழ் மக்களுக்கான ஒரு சமூக மையம் 32 மில்லியன் டாலர்கள் செலவில் அமைக்கப்படவுள்ளது

## ** மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு - 14.3 மில்லியன் மாகாண அரசின் நிதி ஒதுக்கீடு - 12 மில்லியன்: மிகுதி நிதி கனடிய சமூகம் திரட்டவேண்டியது

**** தமிழர் சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு எமது அரசாங்கம் எப்போதும் தயாராகவுள்ளது - ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட்**

**** தமிழ்க் கனடியர்களின் நீண்ட நாள் கனவு நிறைவேறும் நாள் மிக அருகில் - ஹரி ஆனந்தசங்கர் எம். பி**

**** சவால்களை எதிர்கொள்ளும் சமூகமாக தமிழர் வெற்றிகளை ஈட்டி வருகின்றார்கள் - லோகன் கணபதி, மாகாண சபை உறுப்பினர்**

**** தமிழ்க் கனடியர்களின் வெற்றியானது அவர்களது கனவு மட்டுமல்ல, கடின உழைப்பிலும் தங்கியிருக்கின்றது - விஜேய் தணிகாசலம், மாகாண சபை உறுப்பினர்**

**** கனடாவின் மூன்று வகை அரசுகளும் இணைந்து தமிழ்க் கனடியர்களுக்கு தமிழர் சமூக மையத்தை பரிசளித்துள்ளன - கிறிஸ்ரினா பிரிலாண்ட் - கனடிய பிரதிப் பிரதமரும் நிதி அமைச்சரும்**

**** தமிழ் மொழியின் பண்டைய சிறப்புக்களை அறிந்து நான் வியப்படைந்தேன் - ஜோன் ரோரி - ரொறன்ரோ நகர பிதா**










கனடாவில் தமிழ் மக்களது நீண்ட நாள் கனவாகவும் பெரும் முயற்சியாகவும் நீண்ட காலமாக இருந்த "தமிழர் சமூக மையம்" இன்னும் சில வருடங்களில் கம்பீரமாக எழுந்து நிற்கும் நாளை தமிழ் மக்கள் வரவேற்க காத்திருந்தார்கள். கடந்த வெள்ளிக்கிழமை 16ம் திகதி தமிழர் சமூக மையம் அமைவதற்கான உறுதியான முடிவுகள் எடுக்கப்பெற்று அதற்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான அறிவிப்புக்களும் அன்றைய தினமே வெளியிடப்பெற்றன.







அந்த அறிவிப்புக்களின் படி கனடாவின் மத்திய அரசின் நிதியாக 14.3 மில்லியன் டாலர்களும், ஒன்றாரியோ மாகாண அரசின் நிதியாக 12 மில்லியன் டாலர்களும் ஒதுக்கப்பட்டுள்ளதாக, நேற்றைய தினம் உத்தியோக பூர்வமான முறையில் அறிவிக்கப்பெற்றது. அத்துடன் இந்த "தமிழர் சமூக மையம்" அமைவதற்கான காணியை ரொறன்ரோ நகரசபை இலவசமாக வழங்கியுள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.







கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு ஸ்காபுறோ நகரில் தமிழர் சமூக மையம் அமையவுள்ள 311 ஸ்டெயின்ஸ் வீதி என்னும் விலாசத்தில் பரந்த காணியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. பலர் குறிப்பிட்டது போன்று, அன்றைய நிகழ்வில் முன்னெப்போதும் இல்லாத வகையில், ஒரு தமிழர் நிகழ்விற்கு கனடாவின் மூன்று வகை அரசுகள் சார்ந்த மக்கள் பிரதிநிதிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், கனடிய தமிழ்ச் சமூகத்தையும் பாராட்டி, பெருந்தொகையான நிதி ஒதுக்கீட்டை தமிழர் சமூக மையம் அமைவதற்கு ஒதுக்கும் அறிவிப்பை பகிரங்கமாக விடுத்தது என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

நேர்த்தியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில், திருமதி கீர்த்தனா தமிழர் சமூக மையத்திற்காக அமைக்கப்பெற்ற குழுவின் சார்பாக முதலில் உரையாற்றினார்.

தமிழர் சமூக மையத்திற்காக தமிழ்மக்களால் நியமிக்கப்பெற்ற குழுவில் பத்துக்கு மேற்பட்டவர்கள் பணியாற்றி வருகின்றார்கள். அவர்களின் கடின உழைப்பினால் தான் இவ்வளவு பெரும் நிதி எமது தமிழ்ச் சமூகத்திற்கு கிடைத்துள்ளது என்று பலரும் கருத்துத் தெரிவித்தனர்.

தொடர்ந்து மத்திய மாகாண மற்றும் நகராட்சி ஆகிய மூன்று வகையான அரசுகளின் சார்பில் பலர் உரையாற்றினார்கள்.

திருமதி. ஃப்ரீலேண்ட், கனடாவின் துணை பிரதமரும் மத்திய நிதி அமைச்சரும், திரு. பில் பிளேயர், பொதுப்பாதுகாப்பு மற்றும் அவசரகாலத் தயார்நிலைக்கான மத்திய அமைச்சர் - திருமதி. மேரி எங் மத்திய சிறு வணிக ஏற்றுமதி மேம்பாடு மற்றும் சர்வதேச வர்த்தகத்தின் மத்திய அமைச்சர், திரு. ஹரி ஆனந்தசங்கரி, முடியரசுக்கும் பூர்வகுடிகளுக்குமான உறவுகள் அமைச்சரின் நாடாளுமன்றச் செயலாளரும், ஸ்காபரோ-ரூஜ் பார்க் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும்.

திரு. டக் ஃபோர்டு ஒன்றாறியோவின் முதல்வர் மற்றும் கிங்கா சுர்மா - ஒன்றாரியோவின் உட்கட்டுமான அமைச்சர், திரு. விஜய் தணிகாசலம் - ஸ்காபரோ-ரூஜ் பார்க் தொகுதி மாகாண சபை உறுப்பினரும் ஒன்றாரியோ போக்குவரத்து அமைச்சின் பாராளுமன்றச் செயலாளரும், திரு. லோகன் கணபதி - மார்க்கம்-தோர்ன்ஹில் தொகுதி மாகாண சபை உறுப்பினர், திரு. ஜோண் டோரி - ரொரன்ரோ மாநகர முதல்வர். மற்றும் திருமதி. ஜெனிபர் மெக்கெல்வி ஸ்கார்பாரோ-ரூஜ் பார்க் நகரசபை அங்கத்தவர் ஆகியோர் அங்கு சிறந்த உரைகளை ஆற்றினார்கள்.

அனைவரது உரைகளும் உண்மைத் தன்மை கொண்டவையாகவும் தமிழ் மக்கள் மீது கொண்ட நேசத்தையும் மரியாதையையும் பிரதிபலிப்பன ஆகவும் அமைந்திருந்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்களுக்காக அமையவுள்ள இந்த "தமிழர் சமூக மைய"த்திற்கு தேவையான மிகுதி நிதியை கனடா வாழ் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து திரட்டப்பட வேண்டும் என்பதும் இங்கு முக்கியமான ஒரு அம்சம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வு இடம்பெற்று "தமிழர் சமூக" மையத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து கனடா வாழ் தமிழ் மக்கள் மிகுந்த உற்சாகத்தோடு தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து வருகின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இங்கே காணப்படும் படங்கள் அங்கு எடுக்கப்பட்டவையாகும்.

**(ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)**


TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல் | All Pain & Aches, Arthritis Asthma, Sinusitis, Rhinitis Allergies Stress, Migraine & All Types of Headaches Diabetes, Gastric Pain, Ulcer Menstruation Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கோட்டாபாயவின் பௌத்த சிங்கள மனோபாவத்திற்கு மற்றுமொரு உதாரணம் வடக்கிற்கான பிரதம செயலாளர் நியமனம்

தற்போதைய இலங்கை ஜனாதிபதி கோட்டாபாயவின் பதவிப் பிரமானத்திற்குப் பின்னர் பல ஊடகவியலாளர்கள் அவர் ஒரு "ராஜபக்ச" இராஜ்ஜியத்தை உருவாக்குவதில் முழுக் கவனத்துடன் செயற்படுவார் என்ற குறிப்பிட்டார்கள். ஆனால் பலர் அதை ஏற்றுக்கொள்ளவே இல்லை. கோட்டாபாய தனது ஆட்சிக்காலத்தில் இலங்கையை ஒரு பொன்விளையும் நாடாக மாற்றுவார்கள் என்றெல்லாம் எழுதினார்கள்.

இவ்வாறான பௌத்த சிங்கள மனோபாவத்தைக் கொண்ட அவரது தற்போதைய இனவாதப் போக்கிற்கு மற்றுமொரு உதாரணம் வடக்கின் பிரதம செயலாளர் நியமனம் தான் என்று யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்த முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வடக்கு மாகாண தனித்துவமாக ஒரு தமிழர்களுக்குரிய மாகாணமாகவே பார்க்கப்படுகின்றது ஆனால் அதன் பிரதம செயலாளராக எஸ். எம்.சமன்பந்துலசேன என்னும் ஒரு பௌத்த சிங்களவரை நியமித்துள்ளார் கோட்டாபாய.

இவ்வாறு நியமனம் செய்யப்பட்டுள்ள அவர் இதற்கு முன்னர் வவுனியா மாவட்ட அரச அதிபராக பதவி வகித்தார். சமன்பந்துலசேன ஜனாதிபதி கோட்டபாயவால் இன்று நியமிக்கப்பட்டுள்ளார். இது வடக்கு மாகாண தமிழ் மக்களுக்கு ஒரு பாரிய அடியாகும்.

வடக்கு மாகாணத்தின் பிரதம செயலாளராக பணிபுரிந்த அ.பத்திநாதன் கடந்த 4 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்ற நிலையில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டது. இந்த நியமனத்தின் மூலம் இலங்கையின் 9 ஆவது மாகாணமாக யாழ்ப்பாணத்திற்கும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரையே பிரதம செயலாளராக ஜனாதிபதி நியமித்துள்ள விவகாரம் இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் வித்தியாசமாக கண்ணோட்டத்தில் பார்ப்பதாக அறியப்படுகின்றது.



இந்தியா செய்திகள்
India News

# பேனர் வைக்கும் திமுகவினர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்கிறார் ஆர்.எஸ்.பாரதி



திமுக வின் மக்கள் தொடர்பு அதிகாரி திரு ஆர். எஸ். பாரதி பின்வரும் அறிக்கையை அவசியம் கருதி வெளியிட்டுள்ளார்.

"பேனர் கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்" என்று கழகத் தலைவர் தளபதி அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். ஆனால் இன்னும் கூட ஆங்காங்கே கழகத்தினரும் - கழக நிர்வாகிகளும் பேனர்களை வைப்பது தொடர்கிறது. போக்குவரத்திற்கு இடையூறாகவும், பொதுமக்களுக்கு ஆபத்தை உருவாக்கும் வகையிலும் தமிழ்நாட்டில் சென்ற அ.தி.மு.க. ஆட்சியில் கடைப்பிடிக்கப்பட்ட பேனர் கலாச்சாரத்தால் மரணங்களும், விபத்துக்களும் நிகழ்ந்த நிலையில் - "எங்கள் கட்சியின் சார்பில் பேனர்கள் வைக்கமாட்டோம்" என்று முதன் முதலில் உயர்நீதிமன்றத்தில் கழகத் தலைவர் அவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சத்தியப் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தது என்பதைக் கழகத்தினர் அனைவரும் அறிவீர்கள்.

அதன்பிறகு, கழகத்தினர் பெரும்பாலானோர் பேனர் வைக்கும் பழக்கத்தைக் கைவிட்டுள்ளனர் என்றாலும், ஒரு சிலர் இன்னும் பேனர்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற நடவடிக்கைகளைக் கழகம் ஒருபோதும் அனுமதிக்காது.

"ஆகவே அனுமதியின்றி பேனர்கள் ஏதும் இனி வைக்கவே கூடாது என்று கழகத்தினர் அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். கழகத் தலைவர் அவர்களின் ஆணையை மீறுவோர் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தலைமைக் கழகம் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்".

இவ்வாறு தெரிவித்துள்ளார் திமுக வின் மக்கள் தொடர்பு அதிகாரி திரு ஆர். எஸ். பாரதி.

# பதவியில் அமர்ந்து குறுகிய காலத்திலேயே இந்தியாவின் தலைசிறந்த முதலமைச்சர் என்ற பெயரைத் தட்டிக்கொண்ட மு.க.ஸ்டாலின்

பதவியில் அமர்ந்து குறுகிய காலத்திலேயே இந்தியாவின் தலைசிறந்த முதல்-அமைச்சர் என்ற பெயரைத் தட்டிக்கொண்ட மு.க.ஸ்டாலின் அவர்களை தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்கள் பலர் பாராட்டியுள்ளார்கள்.

பதவியேற்றது முதல் தீவிர மக்கள் பணி, இந்தியாவின் தலைசிறந்த முதல்-அமைச்சராக மு.க.ஸ்டாலின் இருப்பதாக தனியார் நிறுவனம் நடத்திய ஆய்வு தெரிவித்துள்ளது.

தமிழக முதல்-அமைச்சராக மு.க.ஸ்டாலின் கடந்த மே மாதம் 7-ந் தேதி பொறுப்பேற்றுக்கொண்டார். அது முதல் பல்வேறு மக்கள்நலப் பணிகளை அவர் தீவிரமாக மேற்கொண்டு வருகிறார்.

கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க பம்பரமாக சுழன்று குறுகிய காலத்தில் அதை கட்டுக்குள் கொண்டு வந்தார். மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப ஸ்டாலின் எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் அவருக்கு நன்மதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இதன் காரணமாக இந்தியாவின் தலைசிறந்த முதல்-அமைச்சர் என்ற இடத்தை அவர் பிடித்துள்ளார்.

"ஓர்மாக்ஸ்" என்ற நிறுவனம் மாதந்தோறும் இந்தியாவில் உள்ள முதல்-அமைச்சர்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து அவர்களில் யார் சிறந்த முதல்-அமைச்சர் என்று பட்டியலிட்டு வருகிறது.

அந்த அடிப்படையில் கடந்த மாதம் (ஜூன்) இந்த நிறுவனம் நடத்திய ஆய்வு முடிவில் இந்தியாவின் தலைசிறந்த முதல்-அமைச்சராக ஸ்டாலின் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த முறை முதல்-இடத்தில் கேரள முதல்-மந்திரி பினராயி விஜயன் இருந்தார். அப்போது ஸ்டாலின், ஒடிசா முதல்-மந்திரி நவீன் பட்நாயக் ஆகிய இருவரும் 2-வது இடத்தில் இருந்தனர். தற்போது பினராயி விஜயனை பின்னுக்குத் தள்ளி ஸ்டாலின் முதலிடத்தைப் பிடித்துள்ளார். 2-வது இடத்தில் பினராயி விஜயனும், 3-வது இடத்தில் நவீன் பட்நாயக்கும் உள்ளனர்.

கடந்த மே மாதம் 62 சதவீத மக்களின் நன்மதிப்பை ஸ்டாலின் பெற்றிருந்ததாகவும், ஜூன் மாதம் அது 6 சதவீதம் உயர்ந்து 68 சதவீதமாகி உள்ளதாகவும் அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

பினராயி விஜயனை பொறுத்தவரை கடந்த மே மாதம் அவருக்கு மக்களின் நன்மதிப்பு 11 சதவீதம் உயர்ந்தநிலையில், ஜூன் மாதம் அந்த விகிதம் குறைந்து வெறும் 2 சதவீதமே உயர்ந்திருப்பதாகவும் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கு வங்காள முதல்-மந்திரி மம்தா பானர்ஜி, தலைசிறந்த முதல்-அமைச்சருக்கான பட்டியலில் 5-வது இடத்தில் இருப்பதாக இந்த ஆய்வு கூறுகிறது.

கடந்த மே மாதம் 4-வது இடத்தில் இருந்த மம்தா பானர்ஜி தற்போது 5-வது இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் ஆய்வு முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தை ஒட்டிய மாநிலங்களின் முதல்-மந்திரிகளான ஆந்திர முதல்-மந்திரி ஜெகன்மோகன் ரெட்டி 9-வது இடத்திலும், கர்நாடக முதல்-மந்திரி எடியூரப்பா 13-வது இடத்திலும், தெலுங்கானா முதல்-மந்திரி சந்திரசேகரராவ் 14-வது இடத்திலும் இருப்பதாக இந்த ஆய்வு தெரிவிக்கிறது.



எரிபொருள் விலைகள் அதிகரிப்பு மக்களை பாதிக்கும் என்பதனை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் அதேவேளை அரசாங்கம் மக்களுக்குத் தேவையான மானியங்களை வழங்கியுள்ளதென வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சர் உதயகம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்க்கட்சியானது யோசனையொன்றை கொண்டு வரும் போது அதில் அர்த்தம் இருக்க வேண்டும். ஆனால் எதிர்க்கட்சியினரின் நம்பிக்கையில்லா பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை பார்க்கும் போது அமைச்சர் தவறு செய்யவில்லை என்பதை காட்டுகிறது. இதனால் இது அரசியல் ரீதியலான தீர்மானமே. அமைச்சரவையின் உபகுழுவின் தீர்மானத்தையே அவர் அறிவித்துள்ளார். இதனால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை எந்தவித அடிப்படையும் இல்லாதது.

மிகவும் அநீதியான வகையில் பிரேரணையை கொண்டு வந்துள்ளனர். எதிர்க்கட்சியிலேயே ஒரே நிலைப்பாட்டில் யாரும் இந்த தீர்மானத்தில் இல்லை. எமது நாட்டின் பொருளாதார நிலைமையில் எரிபொருள் விலையை அதிகரித்தால் வாழ்க்கைச் செலவுக்கு பாதிப்பு ஏற்படும். ஆனால் அரசாங்கம் தேவையான மானியங்களை மக்களுக்கு வழங்கியுள்ளது. தற்போது உலகிலாவிய தொற்று நிலைமையில் மக்களுக்கு தேவையான மானியங்களை மக்களுக்கு வழங்கியுள்ளது. நாங்கள் சாவல்களுடன் மிகவும் வெற்றிகரமாக செல்ல முடியுமாக இருக்கின்றது என்றார்.

# வடக்கின் பிரதம செயலாளராகச் சிங்களவர் ஒருவரை நியமித்தமை பேரினவாத ஒடுக்குமுறையின் இன்னுமொரு வடிவம்

- பொ. ஐங்கரநேசன் கடுங்கண்டனம்



**வ**டக்கு மாகாணத்தின் பிரதம செயலாளராக ஜனாதிபதியால் வவுனியா மாவட்டச் செயலாளராகப் பதவிவகித்த எஸ்.எம். சமன் பந்துலசேன நியமனம் செய்யப்பட்டுள்ளார். வடக்கின் பிரதம செயலாளராகப் பணியாற்றுவதற்கு இலங்கை நிர்வாக சேவையில் உயர்தகைமை பெற்ற தமிழ் அதிகாரிகள் பலருள்ள நிலையில் அவர்களைப் புறமொதுக்கி இந்நியமனம் இடம்பெற்றுள்ளது. தமிழ் மாகாணமான வடக்கில் பிரதம செயலாளராகச் சிங்களவர் ஒருவரை நியமித்துள்ளமை இலங்கை அரசாங்கத்தின் பேரினவாத ஒடுக்குமுறையின் இன்னுமொரு வடிவமாகும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

வடக்கின் பிரதம செயலாளராக வவுனியா மாவட்டச் செயலர் எஸ்.எம். சமன் பந்துலசேனவுக்கு ஜனாதிபதியால் நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இலங்கை ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்திரம் பெற்ற காலம் தொடக்கம் சிங்களப் பேரினவாதத்தால் தமிழ் மக்கள் இன ரீதியாகவும் மொழி ரீதியாகவும் தொடர் ஒடுக்குமுறைகளுக்கு ஆளாக்கப்பட்டதன் காரணமாகவே தமிழ் மக்கள் அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்தத் தலைப்பட்டனர். தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் வலுப்பெற்றதன் விளைவாகவே இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாகாண சபை முறைமை தோற்றம் பெற்றது. தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட மாகாணசபைக்குப் பிரதம செயலாளராகச் சிங்கள இனத்தவர் ஒருவரை நியமித்திருப்பது மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டதற்கான அடிப்படைக் காரணங்களையே நிராகரிக்கும் ஓர் இனவாதச் செயற்பாடாகும்.




மாகாண சபைகளுக்கான 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் பிரதம செயலாளரை நியமிப்பது ஜனாதிபதிதான் எனினும் அந்நியமனம் மாகாண முதல்வரின் உடன்பாட்டுடனேயே செய்யப்படல் வேண்டும். வடக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் 2018ஆம் ஆண்டு முடிவடைந்த உடனேயே மாகாணசபைத் தேர்தலை நடாத்தியிருக்கவேண்டிய அரசாங்கம் பல்வேறு காரணங்களைக் காட்டிக் கபடநோக்கங்களுடன் தேர்தலைப் பிற்போட்டு வருகின்றது. தேர்தலுக்கு முன்பாக மாகாணசபைக்கூடாக தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய மிகக் குறைந்தபட்ச அதிகாரங்களையும் பிடுங்கிவிட வேண்டும் என்பதில் குறியாகச் செயற்பட்டு வருகின்றது.

இலங்கைத் தீவில் தனித்துவமான மொழி, பண்பாடு, பாரம்பரிய வாழிடம், ஆள்புலம் என்பனவற்றைக் கொண்டதன் அடிப்படையில் தமிழ் மக்கள் தனியானதொரு தேசம் ஆகும். ஆனால், இதனை நிராகரித்து "ஒரே நாடு ஒரே தேசம்" என்று முழக்கமிட்டு வரும் பேரினவாதம் தற்போது "ஒரே நாடு ஒரே நிர்வாகம்" என்று ஒடுக்குமுறையின் அடுத்த கட்டத்துக்குள் பிரவேசித்திருக்கின்றது. இலங்கை அரசாங்கத்தின் சூழ்ச்சிகரமான இத்தகைய திட்டங்களைப் புரிந்துகொண்டு அதற்கான சரியான எதிர்வினைகளை ஆற்றுவதற்குக் கட்சி அரசியலுக்கு அப்பால் தமிழ்த் தேசியத்தின் மீது பற்றுறுதி கொண்ட அனைவரும் ஓரணியில் திரளவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.




# பெருகும் குடும்ப ராஜ்ஜியம்... சர்வாதிகாரப் பிடியில் இலங்கைத் தமிழர்கள்? ஜூனியர் விகடனில் தீபச்செல்வன்



ராஜபக்சே குடும்ப ராஜ்ஜியம்

**அரசியலைப் பொறுத்தவரை குடும்ப ஆட்சி என்பது அடிப்படையில் நேர்மையற்றுப் போகவும், ஊழல் பெருகுவதற்குமே வாய்ப்பாக அமைகிறது. பெரும்பாலும் மைய ஆட்சியில் இருப்பவர்கள் குடும்ப ஆதிக்கத்தைக் கொண்டுவரும்போது, மிகப்பெரிய வீழ்ச்சிக்குள் அந்த நாடு தள்ளப்படுவதைத் தொடர்ந்து பார்த்துவருகிறோம். இலங்கையிலும் ராஜபக்சே குடும்ப ஆட்சி ஏற்படுத்தும் விளைவுகள் மிக மோசமானவையாகவே இருக்கின்றன.**

குடும்ப ஆட்சி, சர்வாதிகாரம், ஊழல் ஆகிய காரணங்களால் 2015-ம் ஆண்டு நடந்த தேர்தலில் மகிந்த ராஜபக்சே தோல்வியடைந்த பிறகு, 2019-ம் ஆண்டு கோத்தபய ராஜபக்சே பெற்ற வெற்றி, இலங்கையில் மீண்டும் குடும்ப ஆட்சிக்கு வழிவகுத்தது. இலங்கை அதிபராகப் பதவியேற்ற கோத்தபய ராஜபக்சே தன் அண்ணனும், முன்னாள் அதிபருமான மகிந்த ராஜபக்சேவை பிரதமராக நியமித்தார். இலங்கையின் ஆட்சி மீண்டும் ராஜபக்சே குடும்பத்தின் வசமானது.



சமல் ராஜபக்சே, நாமல் ராஜபக்சே, சசீந்திர ராஜபக்சே

### சமல் முதல் சசீந்திர வரை...

சிங்கள அரசியல்வாதியான டான் ஆல்வின் ராஜபக்சேவுக்கு ஒன்பது பிள்ளைகள். அவர்களில் நான்கு பிள்ளைகள் இலங்கை அரசின் அதிகாரக் கட்டிலில் அமர்ந்து கோலோச்சுகிறார்கள். இரண்டாவது பிள்ளையான சமல் ராஜபக்சே, தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். இவர் கடந்தகால ராஜபக்சே ஆட்சியில் சபாநாயகராகவும் அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார். மூன்றாவது பிள்ளையான மகிந்த ராஜபக்சே இலங்கையின் பிரதமராகவும், ஐந்தாவது பிள்ளையான கோத்தபய ராஜபக்சே அதிபராகவும் பதவிவகித்து வருகின்றனர். தற்போது இந்த வரிசையில் ஆறாவது பிள்ளையான பசில் ராஜபக்சேவும் அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

ராஜபக்சே சகோதரர்கள் மட்டுமல்ல, மகிந்த ராஜபக்சேவின் மகன் நாமல் ராஜபக்சேவும், சமல் ராஜபக்சேவின் மகன் சசீந்திர ராஜபக்சேவும்கூட அமைச்சர் பதவி வகித்துவருகிறார்கள். இப்படி ஒற்றைக் குடும்பம் மட்டுமே இலங்கை அரசியலின் ஒட்டுமொத்த அதிகாரங்களையும் அனுபவித்து வருகிறது. இது இலங்கை அரசியலில் எப்படியான விளைவுகளைத் தரப்போகிறது என்பதுதான் பலரது கேள்வியாக உள்ளது.

### தொடரும் சர்வாதிகாரமும்... தமிழர் புறக்கணிப்பும்!

கடந்தகாலத்தில் ஈழத்தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புப் போரில் ராஜபக்சே குடும்பத்தினரின் ஒன்றிணைவு பெரும் செல்வாக்கைச் செலுத்தியது. அப்போது இன்றைய அதிபர் கோத்தபய ராஜபக்சே, போருக்குப் பொறுப்பான பாதுகாப்பு அமைச்சரின் செயலாளராக, அரச அதிகாரியாகப் பணியாற்றினார். மிக மோசமான வகையில், போர் அறங்களை மீறி தமிழர்களுக்கு எதிராகப் பாரிய இனப்படுகொலையைச் செய்வதற்கு ராஜபக்சேவினர் ஒன்றிணைந்து முன்னெடுத்த சர்வாதிகார ஆட்சியும், அதன் வழியிலான போருமே அடிப்படையாக அமைந்தன.

இவர்கள் மீண்டும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த பிறகு, ஈழத்தமிழர்களின் எதிர்காலம் மென்மேலும் கேள்விக்குறியாகியுள்ளது. தற்போதைய அதிபர் கோத்தபய ராஜபக்சே, தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் எந்த எண்ணமும் இல்லாமல் ஆட்சி நடத்திவருகிறார். இந்தியா வலியுறுத்தினாலும், ஈழத்தமிழர்கள் அதிகம் வசிக்கும் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் 13-வது திருத்தத்தைக்கூட நடைமுறைப்படுத்த ராஜபக்சேவினருக்கு மனம் இல்லை. இப்படி ராஜபக்சேவினரின் குடும்ப ஆட்சியின் விரிவாக்கமும் சர்வாதிகாரமும் தமிழர்களுக்கு எதிராக அமையும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

### நெருக்கும் சர்வதேச அழுத்தம்!

ஆனாலும், இன்று பன்னாட்டுச் சமூகம் இலங்கையின் சர்வாதிகாரக் கழுத்தை நெரித்துவருகிறது. அமெரிக்க காங்கிரஸ் கட்சி, இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறது. கனடாவில் இன அழிப்பு நினைவேந்தலை அனுசரிக்கும் உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை அரசு, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாததால், ஜி.எஸ்.பி வரிச்சலுகையை நீக்கப்போவதாக ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்துள்ளது. இது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டுள்ள தீர்மானத்துக்கு ஆதரவாக 628 உறுப்பினர்கள் வாக்களித்திருப்பதே பாரிய சர்வதேச அழுத்தத்தின் விளைவைக் காட்டுகிறது. எதிர்வரும் காலத்தில் ஐ.நா அவையிலும்கூட இலங்கை தொடர்பான விவாதங்கள் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் உருவாகியிருக்கின்றன.



தீபச்செல்வன்

இன்னொரு பக்கம் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் போரில் கொல்லப்பட்டவர்களின் நீதிக்காகவும், தமிழர் தாயக உரிமைக்காகவும் ஈழ மக்கள் போராடிவருகிறார்கள். தமிழர் விடுதலையை ஐ.நா அங்கீகரிக்க வேண்டும் என்பதையும் தமிழர் தேசம் தொடர்ந்து வலியுறுத்திவருகிறது. ஈழத்தில் நடந்த இன அழிப்புக்கு நீதி வழங்க வேண்டும் என்பதே எம் மக்களின் வேட்கை. இன அழிப்பைக் குடும்பமாகச் செய்தவர்கள், மீண்டும் ஆட்சி அதிகாரத்தை விரிவுபடுத்திவருகிறார்கள்.

ஆனாலும், இன அழிப்பின் நீதிக்கான பொறுப்புக்கூறலிலிருந்து அவர்கள் தப்பவே முடியாது!


## ஸ்ரீவெங்கடேஸ்வரா ஸ்ரீஅபிராமி திருமணமாலை

**முன்கட்டணம் $30**

**கனடா பெண்கள்**
- **12-01-1979 திருவாதிரை** - bank job
- **23-12-1982 அவிட்டம்** - Bachelor Degree
- **28-08-1983 அச்சுவினி** - Store Manager
- **18-03-1984 ஹத்தம்** - Software job
- **23-10-1993 திருவோணம்** - Master of Science
- **15-06-1993 ரேவதி** - Master Degree

**கனடா** Divorce **பெண்கள்**
- **23-01-1991** R.C. Bachelor of Science
- **03-12-1989 திருவோணம்** - Master of Science

**கனடா** Divorce **ஆண்கள்**
- **06-11-1982 புனர்பூசம்** - Engineer

**இலங்கை ஆண்கள்**
- **26-08-1987 உத்திரம்** - Technical Officer
- **07-06-1983 அச்சுவினி** - Electrician

UK **பெண்கள்**
- **18-01-1973 புனர்பூசம்** - Bachelor Degree
- **16-02-1974 கேட்டை** - Bank, Senior Manager

**தலைவரின் வழியைப் பின்பற்றி தமிழர்களின் தாகத்தைத் தீர்க்கப் பாடுபடும் நாம் தமிழர் சீமானின் கைகளைப் பலப்படுத்துவோம் - நன்றி**

**கனடா ராம் அலெக்ஷாண்டர்** Tel: **416-720-8975**

கனடிய செய்திகள்
Canadian News


# கனடாவின் பசுமைக் கட்சித் தலைவர் பதவியை அன்னமி போல் தொடர்ந்து வகிக்க உடன்பாடு காணப்பட்டது

கடந்த பல மாதங்களாக கனடாவின் பசுமைக் கட்சிக்குள் இடம்பெற்ற உள் முரண்பாடுகள் மற்றும் கசப்பான மோதல்களிலிருந்து தற்போது கட்சியும் அதன் தலைமைப் பீடமும் விடுபட்டுள்ளதாகவும் தற்போது அதன் தலைவி அன்னமி போல் அவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுகள் அனைத்தும் ஓய்ந்து விட்டதாகவும் கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு கட்சியின் உயர் மட்ட அலுவலர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் கட்சியின் தற்போதைய தலைவர் அன்னமி போல் அவர்களது தலைமைப் பதவியானது, பாதுகாப்பானது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்றும் மேலும் அவரது பதவிக்கு அச்சுறுத்தல்கள் தடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். கடந்த ஆண்டின் தலைமைப் போட்டியில் அன்னமி போல் அவர்களோடு எதிர்த்துப் போட்டியிட்ட பிரதான போட்டியாளரின் தொந்தரவுகளும் குழப்பங்களுமே இந்த முரண்பாடுகளுக்கு காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரொறன்ரோவில் நேற்று இடம்பெற்ற ஒரு செய்தியாளர்கள் மாநாட்டில் அவர்கள் போல் உரையாற்றும் போது பின்வருமாறு கூறினார்: "கட்சிக்கு வெளியே தவறான விடயங்கள் எதுவும் பேசப்படலாம். ஆனால் இதுதான் முடிவு என்று நான் நிச்சயமாக நம்புகிறேன், ஆனால் அந்த உத்தரவாதத்தை நான் உங்களுக்கு வழங்க முடியாது".

"அடுத்த தேர்தலுக்கு நான் எங்கள் கட்சி உறுப்பினர்களையும் கட்சியையும் வழிநடத்த விரும்புகிறேன்," என்று அவர் கூறினார். "எனது உறுப்பினர்களுக்கும் கனடாவிற்கும் எனது சேவையை வழங்க விரும்புகிறேன், இல்லையென்று உணர்ந்தவர்கள் ஒரு நடவடிக்கை எடுக்க மிகவும் பொருத்தமான நேரம் வரும் வரை காத்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்".



கனடாவில் மத்திய அரசியல் சார்ந்த அல்லது மத்திய பாராளுமன்றம் சார்ந்த ஒரு கூட்டாட்சி கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் கறுப்பினத் தலைவருக்கான எதிர்ப்பு நடவடிக்கை நாடகத்தின் சமீபத்திய திருப்பம் இப்போது அமைப்பின் உயர்மட்ட ஆளும் குழுவான பசுமைக் கட்சியின் மத்திய குழுவினால் தலைவருக்கு எதிராக வாக்கெடுப்பு தவிர்க்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அந்த வாக்கெடுப்பு அன்னமி போல் அவர்களை பதவி நீக்கம் செய்வதற்கான செயல்முறையைத் தூண்டக்கூடும். சபை உறுப்பினர்கள் 75 சதவீதம் பேர் அவரை வெளியேற்ற வாக்களித்திருந்தால், ஆகஸ்ட் 21 அன்று நடைபெறும் அடுத்த பொதுக் கூட்டம் வரை அன்னமி போல் தனது தலைமைப் பதவியை தொடரலாம் என்று கட்சியின் உறுப்பினர்கள் முடிவு செய்திருப்பார்கள் எனவும் அறியப்படுகின்றது. வாக்களிப்பு ரத்து செய்யப்பட்டதாக கட்சி திங்கட்கிழமை காலை அறிவித்தது,

# அம்பாறை தம்பிலுவில் கிராமத்தில் வறிய குடும்பங்களுக்கு கனடா வாழ் சமூகத் தொண்டர் விசு கணபதிப்பிள்ளையின் நிவாரண உதவி

இலங்கையில், அம்பாறை மாவட்டத்தில் உள்ள தம்பிலுவில் கிராமத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு கனடா வாழ் சமூகத் தொண்டர் விசு கணபதிப்பிள்ளை அவர்களின் நிதி அன்பளிப்பில் நிவாரண உதவிகள் அண்மையில் வழங்கப்பெற்றன.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கனடாவின் பிரம்டன் மாநகரில் வாழ்ந்து வருபவரும், சில வருடங்களுக்கு முன்னர், பிரம்டன் மாநகரத்தின் நகரபிதாவிடமிருந்து சிறந்த தொண்டுச் சேவைக்கான சிறப்பு விருதைப் பெற்றவருமான மேற்படி விசு கணபதிப்பிள்ளை அவர்களின் நிதி அன்பளிப்பில் நிவாரண உதவிகள் வழங்கப்பெற்றன.

தம்பிலுவில் கிராமத்தில் உள்ள சமூக நேயம் கொண்ட இளைஞர்களின் வேண்டுகோளிற்கிணங்க, விசு கணபதிப்பிள்ளை அவர்கள் தனது சொந்த நிதி யிலிருந்து ஒரு தொகையை அண்மையில் அனுப்பி வைத்தார்.



அவரது நிதி அன்பளிப்பில் கொள்வனவு செய்யப்பெற்ற உலர் உணவுப் பொருட்கள் அடங்கிய நிவாரண உதவிகள் வழங்கப்பெற்றன.







மனித நேயம் கொண்ட விசு கணபதிப்பிள்ளை அவர்களுக்கு ரொறன்ரோ மனித நேயக் குரல் அமைப்பின் இயக்குனர் சபை, வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது.

**(படங்கள் மற்றும் செய்தி: சத்தியன்)**

உலக செய்திகள்
World News

# மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்கான நாவன்மை நிகழ்ச்சி – 2021

**கனடா உதயன் பத்திரிகை ஏற்பாட்டில் கனடிய வர்த்தகப் பிரமுகர்கள் திருவாளர்கள் சங்கர் நல்லதம்பி மற்றும் பாஸ்கரன் சின்னத்துரை ஆகியோரின் ஆதரவில் நடைபெறுகின்றது**

கனடா உதயன் பத்திரிகையின் வெள்ளிவிழாவை முன்னிட்டு தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் மலேசியா தேசத்தில் வாழும் தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்கான நாவன்மை நிகழ்ச்சி - 2021 எதிர்வரும் 25-07-2021 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறுகின்றது.

கனடா உதயன் பத்திரிகை ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்ச்சிக்கு கனடிய வர்த்தகப் பிரமுகர்கள் திருவாளர்கள் சங்கர் நல்லதம்பி மற்றும் பாஸ்கரன் சின்னத்துரை ஆகியோர் நிதி அன்பளிப்புகளை வழங்கியுள்ளனர். அவர்களது ஆதரவில் இந்த நிகழ்ச்சியில் நாவன்மை திறனை காட்டவுள்ள மாணவ மணிகளுக்கு சன்மானமும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. அத்துடன், அவர்கள் இருவரது உரைகளும் அன்றைய தினம் இடம்பெறவுள்ளன.




மேற்படி நாவன்மை நிகழ்ச்சியை இரண்டாவது தடவையாக நடத்துவதற்கு பிரபல மலேசியாப் பாடகரும் சமூக சேவையாளருமான ரவாங் ராஜா அவர்கள் முன்னின்று உழைத்து வருகின்றார். அவரோடு இணைந்து மலேசியாவில் ஓய்வுபெற்ற கல்லூரி அதிபராக விளங்கும் இராஜேந்திரம் பெருமாள் அவர்களும் பல விடயங்களைக் கவனித்து வருகின்றார்.

அன்றைய தினம் உலகெங்கும் வாழும் தமிழ் ஆர்வலர்களுக்கு தங்கள் நாவன்மை திறனைக் காட்ட இருப்பவர்கள் செல்வன் ஜெஷ்வின் அசோக் செல்வம், செல்வி தனுஷசியா பார்த்திபன், செல்வி மகேஸ்வரி ஜகஜிவேன்திரம், செல்வி நெரோசா மணியரசு, மற்றும் செல்வி நர்மதா ஸ்ரீ ரகுராம் ஆகியோர் ஆவார். இவர்களை இந்த நிகழ்ச்சியில் பங்கெடும் வகையில் செயற்பட்டவர்கள் அவர்களது பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கலைமதி இரமேஷ் (ஆசிரியை மற்றும் அறிவிப்பாளர்) மற்றும் உகனேசுவரி முத்து (ஆசிரியை மற்றும் அறிவிப்பாளர்) ஆகியோர்.

இவர்கள் அனைவருக்கும் கனடா உதயன் நிறுவனம் தனது நன்றியைத் தெரிவிக்கின்றது.

**நிகழ்ச்சி நடைபெறும் திகதி: 25-07-2021**
**நேரம்: கனடிய நேரம் காலை 7.00 மணி**
**மலேசிய நேரம் இரவு 7.00 மணி**

இந்த நேரத்திற்கு ஏற்ப ஏனைய நாடுகளிலும் உள்ள நேரத்தை தயவு செய்து கணிக்கவும்.

*இங்ஙனம்,*
**நாகமணி லோகேந்திரலிங்கம்**
நிறுவனர், பிரதம ஆசிரியர்
கனடா உதயன் வார இதழ்



# பஸிலிடம் மந்திரக்கோல் எதுவும் இல்லை?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

இலங்கைத் தீவில் ஒரு ஆட்சி மாற்றத்தை கொண்டு வரலாமா என்று மேற்கு நாடுகள் திட்டமிடுகின்றன. அதேசமயம் உள்நாட்டில் ஐந்து ராஜபக்சக்கள் ஆட்சியை நிர்வகிப்பதில் வெற்றி பெறாத காரணத்தால் ஆறாவது ராஜபக்சவை அதாவது பசிலை உள்ளே இறக்க வேண்டி வந்திருக்கிறது என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. அரசுக்கு எதிராக ஆங்காங்கே சிறிய அளவிலான போராட்டங்களை எதிர்க்கட்சிகள் முன்னெடுத்து வருகின்றன.

அமெரிக்கா வழங்கிய மிலேனியம் சலேன்ச் உதவித்தொகையை நிராகரித்த ராஜபக்சவின் அரசாங்கத்தில் அமெரிக்காவின் இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்ட பசில் ராஜபக்ச நிதியமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதை அகமுரண் என்று எடுத்துக் கொள்வதா? அல்லது மேற்கு நாடுகளோடு சுதாகரித்துக்கொள்ளும் ஓர் உத்தி என்று எடுத்துக் கொள்வதா?

கடந்த சில வாரங்களாக இலங்கை அரசாங்கம் மேற்கு நாடுகளைச் சமாளிக்கும் விதத்தில் சில நகர்வுகளை முன்னெடுத்து வருகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்றம் பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்தாவிட்டால் அல்லது அகற்றாவிட்டால் ஜிஎஸ்பி பிளஸ் வரிச்சலுகை கிடைக்காது என்ற தொனிப்பட எச்சரிக்கும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அதைத்தொடர்ந்து இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை மீள்பரிசீலனை செய்வதற்கு ஒரு குழுவை நியமித்தது. இது முதலாவது கட்டம்.

இரண்டாவது கட்டம் பலவிதமான ஊகங்களின் மத்தியில் அமெரிக்காவிற்கு சென்று திரும்பிய பசில் ராஜபக்சவுக்கு நிதி அமைச்சு வழங்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் இரட்டை பிரஜாவுரிமை பெற்ற ஒருவரை இவ்வாறு நிதியமைச்சராக நியமித்ததன்மூலம் அரசாங்கம் மேற்கு நாடுகளுக்கு சாதகமான ஒரு சமிக்ஞையைக் காட்டுவதாக ஒரு கருத்து நிலவுகிறது. மேற்கு நாடுகள் ஓர் ஆட்சி மாற்றத்திற்காக காத்திருக்கும் ஒரு பின்னணியில் ஆட்சி மாற்றத்திற்கு பதிலாக ராஜபக்சக்கள் ஓர் ஆளை மாற்றியிருக்கிறார்களா?

ஆனால் பஸில் வந்து என்ன செய்யப்போகிறார்? ஏற்கனவே ஐந்து ராஜபக்சக்கள் செய்யாத எதை அவர் செய்வார் என்று எதிர்பார்ப்பது? மூத்த மூன்று ராஜபக்சக்களில் பசில் ராஜபக்ச ஒரு ராஜதந்திர ஆளுமை என்று வர்ணிக்கப்படுகிறார். ஒரு புறம் அவரை 10 வீதம் கமிஷன் எடுப்பவர் என்று எதிர்க்கட்சிகள் விமர்சிக்கின்றன. இன்னொருபுறம் திரை மறைவில் காய்களை நகர்த்தி காரியங்களை கச்சிதமாக முடிப்பவர் என்று அவரைப் பற்றி ஒரு பிம்பம் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது. இவ்வாறானதொரு பின்னணியில் பஸில் நிதியமைச்சராக வந்ததனால் சரிந்து விழும் பொருளாதாரத்தை நிமிர்த்தக் கூடியதாக இருக்குமா?

நிச்சயமாக இல்லை. ஏனெனில் இலங்கைத்தீவின் பொருளாதாரம் எப்பொழுது சரியத் தொடங்கியது? இலங்கைத் தீவில் இனங்களுக்கிடையே அமைதியின்மை ஏற்பட்டபோதுதான் அந்தச் சரிவு ஏற்படத் தொடங்கியது. இச்சிறிய தீவை ஒரு பெரிய இனமும் ஒரு பெரிய மதமும் தமக்கு மட்டும் உரியது என்று சொந்தம் கொண்டாடும் ஒரு நிலைமை தோன்றியபோதே இச்சிறிய தீவின் பொருளாதாரம் சரியத் தொடங்கியது.

1960களில் சிங்கப்பூரை விட முன்னிலையில் நின்ற ஒரு தீவு இப்பொழுது பங்களாதேசிடம் கடன் வாங்கும் ஒரு நிலைமை வந்திருக்கிறது என்று சொன்னால் அதற்கு முழுக்க முழுக்க காரணம் இனப்பிரச்சினைதான். தென் ஆசியாவில் முதன் முதலாக நாட்டை திறந்த சந்தை பொருளாதாரத்துக்கு திறந்து விட்டவர் ஜே.ஆர் ஜெயவர்த்தனதான். ஆனால் 78ஆம் ஆண்டு திறந்த சந்தைக்கு திறந்துவிடப்பட்ட இலங்கைத்தீவு கிட்டத்தட்ட 43 ஆண்டுகளின் பின் எங்கே நிற்கின்றது? திறந்த சந்தை பொருளாதாரத்தை ஏற்றுக் கொண்ட ஏனைய வறிய நாடுகள் முன்னேறிய அளவுக்கு இலங்கைதீவினால் முன்னேற முடியவில்லை. காரணம் மிகவும் எளிமையானது. இனப் பிரச்சினைதான் அடிப்படைக் காரணம். தீர்க்கப்படாத இனப்பிரச்சினையே எல்லாப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் காரணம்.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழும் இனப்பிரச்சினை பொருளாதார பிரச்சினையின் மீது பிரதிபலித்ததா? அல்லது பொருளாதார பிரச்சினை இனப்பிரச்சினையின் மீது பிரதிபலித்ததா?

பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் அடைந்தபின் இலங்கையை ஆண்ட ஆட்சியாளர்கள் இரண்டு விடயங்களில் தோல்வியடைந்தார்கள். ஒன்று பல்லினத்தன்மை மிக்க ஒரு தீவை கட்டியெழுப்புவது. இரண்டாவது சுதேச நோக்கு நிலையிலிருந்து பொருளாதாரத்தை கட்டி எழுப்புவது. அதாவது காலனித்துவ நோக்கு நிலையிலிருந்து கட்டியெழுப்பப்பட்ட பொருளாதாரத்திற்கு மாற்றீடாக இலங்கை நோக்கு நிலையில் இருந்து ஒரு சுதேச பொருளாதாரத்தை கட்டி எழுப்புவது.

இவை இரண்டிலும் அடைந்த தோல்விகளின் விளைவே ஜேவிபியின் முதலாவது ஆயுதக் கிளர்ச்சியாகும். பொருளாதார பிரச்சினைகளை எதிர் கொள்வதற்காக ஜெயவர்த்தனா 1978இல் நாட்டை திறந்த சந்தை பொருளாதாரத்திற்கு திறந்துவிட்டார். ஆனால் அது கெடுபிடிப் போர்க்காலம். மேற்கின் விசுவாசியான ஜெயவர்த்தனா நாட்டை மேற்கை நோக்கித் திறந்துவிட அதற்கு எதிராக சோவியத் சார்பு இந்தியா இனப்பிரச்சினையில் தலையிட்டது. இதன் விளைவாக இனப்பிரச்சினை யுத்தம் என்ற வளர்ச்சியை அடைந்தது. இனப்பிரச்சினையின் வளர்ச்சியோடு பொருளாதாரம் முற்றாகப் படுத்துவிட்டது. இனப்பிரச்சினை உள்ளவரை பொருளாதாரப் பிரச்சினையை தீர்க்க முடியவில்லை.

அப்படி என்றால் 2009இல் போர் முடிவுக்கு வந்த பின் பொருளாதாரம் செழித்திருக்க வேண்டும். ஆனால் அது நடக்கவில்லை. மாறாக 2009க்கு பின்னர் தான் நாடு சீனாவின் கடன் பொறிக்குள் விழுந்தது. அப்படி என்றால் என்ன நடந்தது? அங்கேயும் மிக எளிமையான ஒரு விடை உண்டு. இனப்பிரச்சினை தான் காரணம். 2009இல் தோற்கடிக்கப்பட்டது ஆயுதப் போராட்டமதான். அது ஒரு காரணம் அல்ல. அது ஒரு விளைவு. காரணம் இன ஒடுக்குமுறை தான். இன ஒடுக்குமுறையின் விகார வடிவம்தான் ஆயுதப்போராட்டத்தை தோற்கடித்தது. ஓர் இனப்படுகொலை மூலம் ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப்பட்டது. அதாவது இன ஒடுக்குமுறை அதன் உச்ச வளர்ச்சி பெற்ற காரணத்தால்தான் ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப்பட்டது. எனவே 2009 இல் அவர்கள் பெற்ற யுத்த வெற்றி என்பது அதன் இயல்பிலேயே ஓர் அரசியல் வெற்றியாக மாற்ற முடியாத ஒன்றாக இருந்தது. ஏனெனில் அது இனப்படுகொலையில் இருந்து பிரிக்கப்படவியலாத ஒரு வெற்றியாகும்.

இவ்வாறு யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்ற முடியாத ராஜபக்சக்கள் அந்த யுத்த வெற்றியை ஒரு தேர்தல் முதலீடாக மாற்றினார்கள். அதுதான் யுத்த வெற்றி வாதம். இங்கிருந்துதான் 2009க்குப் பின்னரான பொருளாதாரத் தோல்விகள் தொடங்கின. யுத்த வெற்றியை ஓர் அரசியல் வெற்றியாக மாற்றினால்தான் அந்த அரசியல் வெற்றியை ஒரு பொருளாதார வெற்றியாக மாற்றலாம். அரசியல் ஸ்திரம் இல்லையென்றால் வெளியிலிருந்து முதலீடுகள் வராது. பொருளாதாரத்தை நிமிர்த்த முடியாது. இதுதான் கடந்த 12 ஆண்டுகளாக நடந்து வருகிறது.

ராஜபக்சக்களால் யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்றவே முடியாது. மாறாக அதை ஒரு தேர்தல் முதலீடாக மாற்றி ஒரு வம்ச ஆட்சியை அவர்கள் ஸ்தாபித்தார்கள். எனவே தீர்க்கப்படாத இனப்பிரச்சினை காரணமாக நாட்டில் அரசியல் ஸ்திரமின்மையை ஏற்படுத்த முடியவில்லை. இனப்பிரச்சினைக்கு தீர்வு இல்லை என்றால் இனங்களுக்கு இடையே அமைதி ஏற்படாது. இனங்களுக்கு இடையே அமைதி ஏற்படவில்லை என்றால் அரசியல் ஸ்திரத்தன்மை இருக்காது. அரசியல் ஸ்திரத்தன்மை இல்லை என்றால் முதலீட்டாளர்கள் இலங்கைத்தீவை நோக்கி வரமாட்டார்கள். இதுதான் பொருளாதாரம் தொடர்ந்தும் சரியக் காரணம்.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் ஈஸ்டர் குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. அதுவும் பொருளாதாரத்தை பாதித்தது. முஸ்லிம்களை தவிர்த்துவிட்டு இலங்கைத் தீவின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது. ஈஸ்டர் குண்டு வெடிப்பானது. முஸ்லிம்களோடு இணைந்து பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதில் வரையறைகளை ஏற்படுத்தியது. அதன்பின் வைரஸ் தொற்று ஏற்பட்டது.அது பொருளாதாரத்தை அடுத்த கட்டத்திற்கு வீழ்த்தியது. இப்பொழுதும் இலங்கை தீவு ஒருபுறம் வைரஸ் இன்னொருபுறம் கடன் பொறி இரண்டுக்குமிடையே சிக்கியிருக்கிறது. இந்த சிக்கலிலிருந்து இலங்கைதீவை விடுவிக்க ஒரு மீட்பராக பஸில் உள்ளே கொண்டு வரப்படுவதாக ஒரு தோற்றம் கட்டி எழுப்பப்படுகிறது. ஆனால் ஒரு பஸில் என்ன ஆயிரம் பசில்கள் வந்தாலும் சரிந்து விழும் பொருளாதாரத்தை நிமிர்த்த முடியாது.

ஏனென்றால் பொருளாதாரத்தை நிமிர்த்துவது என்பதை எங்கிருந்து தொடங்க வேண்டும் என்றால் யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்றுவதில் இருந்துதான். அதை ராஜபக்சக்கள் செய்வார்களா? நிச்சயமாக முடியாது. ஏனென்றால் பசில் ராஜபக்சவை உள்ளே கொண்டு வந்ததன் பிரதான நோக்கமே வம்ச ஆட்சியை பாதுகாப்பதுதான். மகிந்த ராஜபக்ச உடல்ரீதியாக பலங்குன்றும்போது பிரதமர் பதவியை பசிலுக்கு வழங்கி குடும்ப ஆட்சியை அடுத்தகட்டத்துக்கு பாதுகாப்பதே பசிலை உள்ளே கொண்டு வந்ததன் பிரதான நோக்கமாகும். ராஜபக்களைப் பொறுத்தவரை குடும்ப ஆட்சியை பாதுகாப்பது என்பது யுத்த வெற்றி வாதத்தை அடுத்தகட்டத்துக்கு அப்டேட் பண்ணுவதுதான். யுத்த வெற்றி வாதத்தை அப்டேட் பண்ணுவது என்பது யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்றத் தயாரற்ற ஓர் அரசியல்தான். எனவே பசிலைக் கொண்டு வந்து அரசியல் அற்புதங்களை நிகழ்த்த முடியுமா?

மாறாக பசிலின் வருகையால் ஒரு மாற்றம் நிகழ்கிறது என்ற தோற்றத்தை கட்டியெழுப்பும் நோக்கத்தோடு ராஜபக்சக்கள் அரசியல் ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் சில சமயோசிதமான சுதாகரிப்புக்களைக் குறித்து சிந்திக்கக்கூடும். குறிப்பாக ஐநாவின் நிலைமாறுகால நீதிப் பொறிமுறை தொடர்பில் அவர்கள் உள்நாட்டு வடிவிலான ஒரு நிலைமாறுகால நீதிப் பொறிமுறை குறித்து சுதாகரிப்புக்கள் எதையாவது செய்யக்கூடும். ஏற்கனவே அப்படிப்பட்ட சுதாரிப்புக்கான வாய்ப்புகளை அவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள். நிலைமாறுகால நீதியின் கீழ் உருவாக்கப்பட்ட காணாமல் போனோருக்கான அலுவலகமும் இழப்பீட்டு நீதிக்கான அலுவலகமும் தொடர்ந்தும் இயங்குகின்றன. எனவே நிலைமாறுகால நீதிக்கான வாய்ப்புக்களை அவர்கள் பொய்யாகவேனும் பேணி வருகிறார்கள். அதை வைத்துக்கொண்டு அந்த வழியில் அவர்கள் புதிய முன்னேற்றங்களை காட்டக் கூடும்.

ஆனால் என்னதான் முன்னேற்றங்களைக் காட்டினாலும் வரும் செப்டம்பர் மாதம் உருவாக்கப்பட்டிருக்கும் இலங்கைக்கான ஆதாரங்களையும் தகவல்களையும் திரட்டும் பொறிமுறையை அவர்களால் தடுத்து நிறுத்த முடியுமா? அது கடந்த ஜெனிவாத் தீர்மானத்தின் பிரகாரம் உருவாக்கப்பட விருக்கும் ஒரு பொறி முறையாகும். அந்த பொறிமுறையை இப்பொழுது அவர்கள் முனைப்பு காட்டும் அரசியல் மற்றும் இராஜதந்திர நகர்வுகளின் மூலம் தடுத்து நிறுத்த முடியாது என்பதே இலங்கை பொறுத்து ஐநாவின் யதார்த்தம் ஆகும். எனவே அந்த பொறிமுறை வரும் செப்டம்பர் மாதம் இயங்கத் தொடங்கும்.

அது கொழும்பில் மேற்கு நாடுகளுக்கு எதிரான உணர்வலைகளை நொதிக்கச் செய்யும். தமது யுத்த வெற்றி நாயகர்களை குற்றவாளிகளாக்கக் கூடிய ஆதாரங்களை திரட்டப்போகும் ஒரு பொறிமுறையாகவே அதனை ராஜபக்சக்கள் பார்ப்பார்கள். அவ்வாறுதான் அதை சிங்கள மக்களுக்கும் உருப்பெருக்கி காட்டுவார்கள். அதன் மூலம் நாட்டில் ஐநாவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் எதிரான உணர்வலைகளை அதிகப்படுத்தலாமே தவிர தணிக்க முடியாது. எனவே இப்பொழுது ராஜபக்சக்களின் முன் இருக்கும் தெரிவுகள் மிகவும் குறைந்தவையே. என்னதான் காய்களை நகர்த்தினாலும் அதற்கு வரையறைகள் உண்டு. ஏனென்றால் யுத்த வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்றுவதுதான் பொருளாதார வெற்றிக்கான முக்கிய முன்நிபந்தனை ஆகும். அதைச் செய்ய ராஜபக்சக்களால் முடியாது.

மற்றது, நிலைமாறுகால நீதி தொடர்பில் மிகவும் பிந்தி ஏதும் சுதாகரிப்புக்களை செய்தாலும்கூட அது ஐநா வரும் செப்டம்பர் மாதம் உருவாகவிருக்கும் பொறிமுறையை தடுத்து நிறுத்த போவதில்லை. எனவே மாற்றத்தின் முகமாக அல்லது ராஜதந்திர முகமாக பசில் ராஜபக்சவை விளையாட்டு மைதானத்துள் இறக்கிய போதிலும் விளையாட்டின் போக்கில் பெரிய திருப்பங்களை ஏற்படுத்தலாமா என்பது சந்தேகமே.

# அரசின் பயங்கரவாதம் – பிரபாகரனின் பயங்கரவாதம்

- எழுதியவர் ரெஹான் பெர்னாண்டோ

*சென்ற வாரத் தொடர்ச்சி...*

*(இந்தத் தலைப்பில் ரெஹான் பெர்னாண்டோ என்பவர் **Colombo Telegraph** என்ற இணையதளத்தில் ஆங்கிலத்தில் ஒரு கட்டுரையை வரைந்திருந்தார். பெர்னாண்டோ போன்ற சில முற்போக்கு எழுத்தாளர்களே நடந்து முடிந்த போர் பற்றி நடுநிலையோடு எழுதுகிறார்கள். பெரும்பாலான படித்த சிங்கள அறிவுப் பிழைப்பாளர்கள் போரையும் போருக்கான காரணிகளையும் திரித்து ஒருதலைப் பட்சமாக எழுதுகிறார்கள். அரச பயங்கரவாதமே வி.புலிகளின் ஆயுதப் போராட்டத்துக்கு வித்திட்டது என்பது வரலாற்று உண்மை. பிரபாகரனை "பயங்கரவாதி" என்றும் ஈழப்போர் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்றும் பொருள்பட காட்டமாக எழுதுகிறார்கள். இப்போதும் எழுதுகிறார்கள். அவர்களது வாயை அடைப்பது போல் இந்தக் கட்டுரை அமைந்துள்ளது. அதன் முக்கியத்துவம் மற்றும் கனதி கருதி அதனை மொழிமாற்றம் செய்து வெளியிடுகிறோம். தமிழாக்கம் கனடா - நக்கீரன்.)*

தற்போதைய சிக்கல்கள்



இந்த நாட்டில் சுதந்திரம் என்று அழைக்கப்படுவதற்கு மோசமாகக் கையாளப்பட்ட ஆயுதப் போராட்டம் 2009 இல் முடிவடைந்தது. இது வெறுமனே ஒரு இனச் சிக்கல் மற்றும் அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்காக உருவாக்கப்பட்ட உள்நாட்டுப் போர் ஆகும். பல்வேறு அரசாங்கங்களும், சில இடதுசாரிக் கட்சிகளும் கூட, தேசியவாதத்திற்கான உள்கட்டமைப்பை நிறுவி, "பயங்கரவாதம்" என்று அழைக்கப்படும் வெளிப்புற சக்திகளிடமிருந்து சிங்கள தேசத்தைக் காப்பாற்றுவது பற்றிய தோற்றத்தை அளித்தன. இருப்பினம், உண்மையில், பயங்கரவாதம் நாட்டில் நிறுவப்பட்டு அதனை ஒவ்வொரு மத்திய அரசாங்கத்தாலும் ஊக்குவிக்கப்பட்டது. நவ-காலனித்துவ கொள்கைகள், குறைந்த கல்வித் தரம், நாட்டில் தேசியவாதம், வறுமை, அரசாங்கத்தின் உறுதியற்ற தன்மை, பொருளாதாரம் மற்றும் கலாச்சார அபிவிருத்தி, மத அடிப்படைவாதம், மேலாதிக்கம் மற்றும் மேன்மை, மொழி மற்றும் கலாச்சார மேலாதிக்கம் ஆகியவற்றால் தேசிய உற்பத்திகள் மறுக்கப்படுகின்றன. மேலும் இன்று நாட்டில் பயங்கரவாதத்திற்கான சில வடிவங்கள் உள்ளன. வரலாற்றில், விடுதலைப் புலிகள் இயக்கம் எங்கிருந்தோ வெளிப்பட்டது, ஆனால் அது தேசியவாதம் என்று அழைக்கப்படுபதற்குள் நன்கு உருவாக்கப்பட்டது. பல முறை பிரபாகரன் நடவடிக்கைகளுக்கு இந்த நாட்டின் சில நிறைவேற்று சனாதிபதிகள் ஆதரவு தெரிவித்தனர். அப்படியானால் எப்படி பிரபாகரன் மீது மட்டுமே பயங்கரவாதம் மற்றும் அனைத்து வகையான பயங்கரவாதத்திற்கும் பின்னணியில் உள்ள மனிதர் என்று குற்றம் சாட்டமுடியும்?

மேலும் ஒரு விடயத்தைப்பற்றி விரிவாகக் கூறுவது பொருத்தமானது. இலங்கையில் அரசின் பயங்கரவாதம் சில நேரங்களில் சில படித்த நபர்களால் நன்கு பராமரிக்கப்பட்டு வந்தது, அதே நேரத்தில் பல பயனற்ற மற்றும் அர்த்தமற்ற முடிவுகளை தேசியவாதிகளால் எடுக்கப்பட்டனர். தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் தொடக்கத்தில் ஆயுதப் போராட்டம் அல்ல. மகாத்மா காந்தியின் அகிம்சை எதிர்ப்பாலும் இது வடிவமைக்கப்பட்டது. எனவே, பிரபாகரன் ஆயுதப் போராட்டத்தையும் கொரில்லா சண்டைகளையும் தேர்ந்தெடுக்கும் வரை தமிழர் போராட்டம் அமைதி வழியில் இருந்தது. எவ்வாறெனினும், ஆயுதப் போராட்டங்கள் இப்போது முடிந்துவிட்டன அது முற்றிலும் முடிந்துவிட்டது என்று அர்த்தமல்ல (ஆயுதங்கள் மூலம் ஒரு இன மோதலுக்கான சாத்தியம் இன்னும் உள்ளது), ஆயினும் கூட இன்று பல்வேறு வகையான தேசியவாதத்தின் மூலம் அரசால் ஊக்குவிக்கப்படும் மோதல்கள் பயங்கரவாதத்திற்கு போதுமான ஆதாரங்களை வழங்குகின்றன.

மத பயங்கரவாதம்

மத பயங்கரவாதம் மகாத்மா காந்தி இந்தியாவின் விடுதலைப் போராட்டத்திற்காக சத்தியாகிரகத்தை உருவாக்கினார். காந்தி ஒரு துறவியோ அல்லது மதப் பாதிரியோ அல்ல, ஆனால் அவர் ஒரு புதிய ஆன்மீகத்தை நோக்கி, குறிப்பாக இந்தியாவுக்கான சுதந்திரத்தை நோக்கிய அவரது போராட்டத்தின் வளாகத்திற்குள் அவரை வழிநடத்தக்கூடிய ஒரு மதப் பாதையை நம்பினார்.அவர் அசாதாரணமான வேலையைச் செய்த ஒரு சாதாரண மனிதர். இந்து மதம், சமணம், கிறித்துவம், பவுத்த மதம் ஆகியவற்றின் போதனைகளால் அவரது சத்தியாகிரகம் நன்கு உருவானது. காந்தியின் முழுப் பணியும் சிலரால் தவறாக புரிந்து கொள்ளப்பட்டது, இன்று பாகிஸ்தானியர்கள் அவரை நினைவில் வைத்துக்கொள்ள விரும்பவில்லை. இது மக்களை தவறாக வழிநடத்தும் ஒரு மிதமிஞ்சிய அணுகுமுறை. அகிம்சை நடவடிக்கை மூலம் ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் இவ்வளவு பெரிய பொறுப்பை காந்தி நிறைவேற்ற முடிந்தால், மதமக்கள் என்று அழைக்கப்படுவது எப்படி, எந்த வகையான பணியை நிறைவேற்ற முடியும்? இத்தகைய மதமக்கள் தங்கள் மதங்களைப் பற்றி பல போதனைகளைப் போதிக்கின்றனர், ஆனால் எதையும் கடைப்பிடிக்கவில்லை. மாறாக, பெரும்பாலும் அவர்கள் வன்முறையை ஊக்குவிக்கிறார்கள். மத வன்முறைக்கு இலங்கை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இதை நான் "மத பயங்கரவாதம்" என்று பெயரிட விரும்புகிறேன். **[3]**

முதன்மையாக, சில பவுத்த பிக்குகள் பகிரங்கமாக வன்முறையில் ஈடுபடுகிறார்கள். வேண்டுமென்றே இத்தகைய நடத்தை பவுத்த மதத்தை ஊக்குவிப்பதாக இருந்தது. ஆனால் நகைச்சுவை என்னவென்றால், பவுத்தம் ஒரு தத்துவமாக அல்லது வாழ்க்கை முறையாக வன்முறையை ஒருபோதும் ஊக்குவித்ததில்லை. அதற்குப் பதிலாக, தனது பாதையைக் காட்டுவதற்காக ஆயுதப் போராட்டங்களைக் கையாண்ட ஒரு மனிதராக புத்தர் ஒருபோதும் இருந்ததில்லை. அவர் போதித்தது கருணை வழியாகும். சில பவுத்த பிக்குகள் தங்கள் மேலாதிக்க பொது நடத்தை மூலம் பவுத்த மதத்தை ஊக்குவிக்க பல்வேறு பிரிவுகளை உருவாக்கியுள்ளனர். இந்த வகையான பொறிமுறையை இலங்கையில் உள்ள எல்லாவித அரசாங்கமும் வெளிப்படையாக ஆதரிக்கிறது. மற்றும் சாதாரண பவுத்தர்கள் இத்தகைய வன்முறை நடவடிக்கைகளுக்கு மவுனமாக ஆதரவு கொடுக்கிறார்கள். கிறிஸ்தவ தேவாலயங்களை எரித்தல், அப்பாவி முஸ்லிம்களுக்கு பகிரங்கத் தண்டனைகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், கோவில்களின் நடவடிக்கைகள், பவுத்த மேலாதிக்கம், ஒரு பவுத்த அரசு மற்றும் பல இந்த பொறிமுறையின் முக்கிய வடிவங்கள் ஆகும்.

முடிவுரை

இந்த நாட்டில், ஒவ்வொரு தமிழனுக்கும் கொட்டியா [புலி] என்று முத்திரை குத்தப்பட்ட ஒரு காலம் இருந்தது [அது இன்னும் நடக்கிறது]. இந்த முத்திரையின் மூலம், சிங்களம் விரும்பியது, பிரபாகரன் பயங்கரவாதம் மற்றும் கொரில்லா நடவடிக்கைகள் பற்றி ஒரு உள்ளூர் மற்றும் சர்வதேச கண்ணோட்டத்தை அளிப்பதாகும். இருப்பினும், வரலாற்றைப் பற்றிய ஒரு விமர்சன ஆய்வில் சிங்காயோ [சிங்கங்கள்] என்று அழைக்கப்படுபவர்களும் கொட்டியாவைப் போலவே செயல்பட்டனர் என்பதை வெளிப்படுத்துகிறது. இலங்கை அரசு அவர்களின் அரசியல் ஆதாயத்திற்காக எப்போதும் பிரபாகரனுடன் உடன்பாட்டில் உள்ளது. அமெரிக்காவை வெளிப்புற சக்திகளிடமிருந்து பாதுகாக்க மத்திய கிழக்கில் அமெரிக்கா சில நபர்களை உருவாக்குவது போலவும், ஒப்புதல்கள் மீறப்படும்போது, அமெரிக்காவின் அதே பொறிமுறையும் அவர்களின் ஆதரவாளர்களை பயங்கரவாதிகள் மற்றும் இறுதியில் தாக்குதல்கள் என்றும் பெயரிடுவது போல் உள்ளது. இதுதான் பிரபாகரன் அவர்களுக்கும் ஓரளவிற்கு நடந்தது. 2005 இல் நடந்த சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றது எனது சித்தாந்தத்திற்கு ஒரு உன்னதமான எடுத்துக்காட்டாக இருந்தது, ஆனால் பிரபாகரன் தனது பொறிமுறையை அதே அரசாங்கத்தால் தகர்க்கப்படும் என்று ஒருபோதும் நினைத்ததில்லை.

எதுவாக இருந்தாலும், அல்லது பிரச்சினை எதுவாக இருந்தாலும், இந்த இறுதிக் கருத்தையும் முன்வைக்க விரும்புகிறேன். என்னைப் பொறுத்தவரை, பிரபாகரன் ஒரு பயங்கரவாதி அல்ல, ஏனென்றால் அவர் இறந்துவிட்டார். உண்மையான பயங்கரவாதிகள் நாடாளுமன்றத்திலும் அரசியல் கட்சிகளிலும் உள்ளனர். இராசபக்ச குடும்பத்தின் முழுப் பொறிமுறையும் பயங்கரவாதத்தின் ஒரு வடிவமாகும். வன்முறைமூலம் இந்த நாட்டில் ஊக்குவிக்கப்படும் குளிர் சனநாயகம் ஒரு பயங்கரவாத நடவடிக்கையாகும். இந்த நாட்டில் இன்னும் பரவலாக நிலவும் வறுமை ஆளும் அரசியல் அமைப்பும் பயங்கரவாதம் ஆகும். பவுத்த பெரும்பான்மை மற்றும் பிற மதப்பற்றுகளின் மூலம் ஊக்குவிக்கப்படும் தேசியவாதம் பயங்கரவாதம் ஆகும். ஆதிக்கம் செலுத்தும் கல்வி முறையும் பயங்கரவாதச் செயலாகும். தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியும் அந்த நெருக்கடிக்கான காரணங்களும் பயங்கரவாதத்தின் தெளிவான வடிவங்களாகும். இருக்கும் வர்க்க இடைவெளியும், சாதிமுறையும் அதன் மேலாதிக்க பொறிமுறையும் தான் உண்மையான பயங்கரவாதம். இந்த செயல்பாட்டு ஒடுக்குமுறைகளுடன் ஒப்பிடுகையில், என்னைப் பொறுத்தவரை பிரபாகரன் ஒரு பயங்கரவாதி அல்ல் அவர் இந்த நாட்டில் இருந்திருந்தால் இந்த நாட்டில் உள்ள உண்மையான பயங்கரவாதிகளை விட அவர் ஒரு நல்ல பணியைச் செய்திருக்க முடியும்.



அரசின் அரசியல் பொறிமுறை சாதாரண குடிமக்களை விடுவிக்கவில்லை. மாறாக அது மக்களைக் கொல்கிறது. இது எந்தவொரு நிவாரணத்தையும் கொடுப்பதில்லை. ஆனால் இந்த நாட்டில் வாழ்க்கை நிலைமைகளை தடைசெய்கிறது அல்லது முடக்குகிறது. எனவே, இன்று அரசில் நடப்பது பயங்கரவாதத்தைத் தவிர வேறொன்றுமில்லை. அது ஒரு சமாதானத்தை கட்டியெழுப்பும் செயல்முறை அல்ல. பிரபாகரனின் பயங்கரவாதம் பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லை. ஆனால் இன்று மாநிலத்தில் பயங்கரவாதத்தை அகற்ற உரிய நடவடிக்கைகளை எடுப்பது நல்லது.

**[1]** மறைந்த ஆயர் இராயப்பு யோசேப் 2011 சனவரி 8 ஆம் தேதி தயாரித்த அறிக்கை. **file:///C:/Users/Thach%20Nguyen/Downloads/LLRCsubmission_by_MannaarDiocese.pdf.** பார்க்கவும்.


**[2]** மேலே கூறியவாறு, 3-6.

**[3]** இந்த தலைப்பில் ஒரு புத்தக வடிவில் கவிதை தொகுப்பு எதிர்காலத்தில் வெளியிடப்பட உள்ளது. இது இந்த நாட்டில் மத பயங்கரவாதம் மற்றும் உள்ளேயும் வெளியேயும் தேவையற்ற மோதல்களை உருவாக்குவது எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் இது விவரிக்கும். (முற்றும்)



கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவில் ஒன்றாரியோவிற்கு வெளியே முதற் தடவையாக பொதுத்தேர்தலில் போட்டியிட வேட்பாளராகத் தெரிவாகியுள்ள தமிழ் பேசும் மருத்துவர்



கனடாவில் இதுவரை தமிழ் மக்கள் அதிகமாக வாழும் ஒன்றாரியோ மாகாணத்திலேயே அதிக அளவு தமிழ் பேசும் வேட்பாளர்கள் மத்திய அரசாங்கத்திற்கான பொதுத் தேர்தலிலும், மாகாண சபைத் தேர்தல்களிலும் மாநகர சபை மற்றும் கல்விச் சபைக்கான தேர்தல்களிலும் போட்டியிட்டும் வெற்றி பெற்றும் வந்துள்ளனர். தற்போது கூட வெற்றிகளை ஈட்டிய சிலர் தங்கள் மக்கள் பிரதிநிதிகளாக தங்கள் அற்புதமான பணிகளை ஆற்றிவருகின்றார்கள்.



இவ்வாறான கனடிய அரசியல் சூழலில் முதற் தடவையாக கனடாவின் (Saskatchewan) சச்கச்சுவான் மாகாணத்தில் எதிர்வரும் கனடிய மத்திய பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில், லிபரல் கட்சின் வேட்பாளராக போட்டியிடுவதற்கு தெரிவாகியுள்ள வைத்திய கலாநிதி இருதய நோய் வைத்திய நிபுணர் டாக்டர் ரூபன் ராஜகுமார் லிபரல் கட்சியின் வேட்பாளர் தெரிவுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்ற உற்சாகம் தரும் செய்தியை கனடா வாழ் தமிழ் பேசும் சமூகத்தோடு பகிர்ந்து கொள்வதில் கனடா உதயன் மற்றும் நண்பன் இணைய ஊடகம் ஆகியன பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றன.

கனடாவின் (Saskatchewan) சச்கச்சுவான் மாகாணத்தில் Saskatchewan மேற்குத் தொகுதியில் போட்டியிடவுள்ள வைத்திய கலாநிதி அவர்கள் உதயன் நிறுவனத்தின் நீண்ட கால நண்பர் விக்னேஸ்வரன் (வரன்) அவர்கள் எமது உதயன் அலுவலகத்திற்கு நேற்று அழைத்து வந்தார். அத்தருணம் சில மணி நேரம் நாம் வேட்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ரூபன் ராஜகுமார் அவர்களோடு உரையாடி பல விடயங்களை அவரிடமிருந்து அறிந்து கொண்டோம்.

டாக்டர் ரூபன் ராஜகுமார் அவர்களின் துணைவியாரும் ஒரு இருதய நோய் தொடர்பான வைத்திய நிபுணர் ஆவார். அவர் தற்போது ரொறன்ரோ மாநகரில் தனது மருத்துவப் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

கடந்த நாற்பது வருடங்களாக (Saskatchewan) சச்கச்சுவான் மாகாணத்தில் மாகாணத்தில் வாழ்ந்து வருவதாகக் கூறிய டாக்டர் ரூபன் ராஜகுமார் அவர்கள் அங்கு மக்களுக்கு சேவையாற்றி வருவதில் மகிழ்ச்சியும் எல்லையற்ற நிறைவையும் அடைந்துள்ளதாகவும், முக்கியமாக கனடாவின் பழங்குடி இனத்தின் மக்களுக்கு வைத்திய சேவையாற்றுவதற்காகவே முக்கியமாக தனக்கு கனடிய அரசு நாற்பது வருடங்களுக்கு முன்னர் விசாவை வழங்கி அந்த மாகாணத்திற்கு அழைத்ததாகவும் கூறினார்.

பழங்குடி மக்களுக்கு நான் மருத்துவ சேவைகளை வழங்குவதில் தான் அதிக திருப்தி அடைந்ததாகவும், அந்த காலப்பகுதியை தனது வாழ்நாளில் மறக்க முடியாது என்றும் முகத்தில் புன்னகையோடு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் அதிகளவு வாழக்கூடிய சூழ்நிலையில்லாத ஒரு மாகாணத்தில் வேற்றின மக்கள் மட்டுமே அதிகம் வாழுகின்ற தொகுதியில் வாழும் உங்களுக்கு அங்கு பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில் சவால்கள் அதிகம் இருக்குமே? அத்துடன் வெற்றி வாய்ப்பு குறைவாக இருக்குமே? என்ற ஒரு கேள்வியை நாம் முன்வைத்தோம்.

அதற்கு அவர் சிறிய புன்னகையுடனும் முகத்தில் நம்பிக்கையின் பிரதிபலிப்புக்கள் தோன்றிடவும் பதில் தந்தார்.

"நான் அங்கு நாற்பது வருடங்களுக்கு மேலாக வைத்தியராகவும், மருத்துவத் துறையின் பல்கலைக்ழகத்தின் விரிவுரையாளராகவும் உள்ளேன். அத்துடன் தொடக்கத்திலிருந்தே அரசியல்வாதிகளோடு அரசியல் ஈடுபாடு கொண்ட மக்களோடும் குறிப்பாக கனடாவின் பழங்குடி மக்களின் தேவைகளை நான் அதிக நேசத்தோடு நிறைவேற்றியிருக்கின்றேன்.

இவ்வாறாக அந்த மாகாணத்தில் வாழும் மக்களில் பலரது வேண்டுகோளின் பேரில் தான் நான் வேட்பாளராக நிற்கத் துணிந்துள்ளேன்.

நான் கனடாவிற்கு வருவதற்கு முன்பாக இங்கிலாந்தில் மருத்துவராகப் பணியாற்றியுள்ளேன். அங்கும் எனது இளைமைக் காலத்தில் பல அரசியல்வாதிகளோடு இணைந்து அவர்களின் தொண்டனாகப் பணியாற்றியுள்ளேன். அந்த அனுபவப் பார்வை இன்னும் என்னோடு ஒட்டிக் கொண்டுள்ளது.

பின்னர் சச்கச்சுவான் மாகாணத்தில் Saskatchewan மேற்குத் தொகுதியில் எனது பெயரை முன்மொழிந்தவர்களே அங்கு நிரந்தரமாக வசிக்கும் கனேடியர்கள் தான். அவர்கள்தான் அங்கு தேர்தல் முடிவுகளை தீர்மானிக்கின்ற சக்திகளாக விளங்குகின்றார்கள். அத்துடன் அந்த மாகாணத்தின் முதல்வர் அவர்களிடமிருந்து பல தடவைகள் எனக்கு விருதுகள் வழங்கப்பெற்றுள்ளன. அவை, நான் பழங்குடி மக்களுக்கு பல சவால்களின் மத்தியில் பணியாற்றிய காரணத்திற்காகவே வழங்கப்பெற்றன. இவற்றை முன்வைத்தே நான் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுகின்றேன். எனக்கு ஒன்றாரியோ மாகாணத்தில் வாழும் மக்களின் வாழ்த்துக்களும் இங்குள்ள பெரியவர்களின் ஆசிர்வாதமும் தான் எனக்குத் தேவை" என்றார்.



எனவே, சச்கச்சுவான் மாகாணத்தில் Saskatchewan மேற்குத் தொகுதியில் போட்டியிடும் தமிழ் அன்பர், வைத்திய கலாநிதி, மக்கள் சேவகர்.

டாக்டர் ரூபன் ராஜகுமார் அவர்களிற்கு உங்கள் வாழ்த்துக்களை தெரிவியுங்கள். அவரது மின்னஞ்சல் விலாசம்: ruben.rajakumar@usask.ca PHONE: (306) 612-3105

**- ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்**

## Grand Opening Ceremony of the Third Branch of AGA Beauty Learning Academy

# AGA Beauty Learning Academy அழகுக் கலை நிறுவனத்தின் மூன்றாவது கிளை திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது



ஸ்காபுறோ நகரில் கடந்த பல வருடங்களாக அழகுக் கலை மற்றும் அதன் கற்பித்தல் நடவடிக்கள் மற்றும் Miss Tamil Toronto, Miss Tamil Globe ஆகிய போட்டிகள் தொடர்பான விழாக்களை திறம்பட நடத்திய அனுபவம் கொண்ட திரு. திருமதி. நரேந்திரா - சகிகலா தம்பதியினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று ஸ்காபுறோ நகரில் உள்ள தமிழர் வர்த்தக அங்காடியான MEJESTIC CITY SHOPPING CENTRE FOR TAMILS இன் உள்ளே தங்கள் மூன்றாவது கிளையை கோலாகலமாக திறந்து வைத்தார்கள்.

அன்றைய தினம் நண்பர்கள் வர்த்தகப் பெருமக்கள், வாடிக்கையாளர்கள், ஊடக நண்பர்கள், பெண்கள் அமைப்புக்களின் அங்கத்தவர்கள், முன்னாள் மாணவிகள் மற்றும் அழகியல் கற்பித்தல் துறையில் ஈடுபட்டு வரும் ஏனையோர் என நூற்றுக்கணக்கானவர்கள் திறப்புவிழா வைபவத்தில் கலந்து கொண்டனர்.



இந்த AGA Beauty Learning Academy அழகுக் கலை நிறுவனமானது அதன் ஸ்தாபகரும், போதானசிரியையுமான திருமதி. சசிகலா நரேந்திரன், அழகுக் கலை மற்றும் உடல் நலம் சார்ந்த பல கற்கை நெறிகளைப் பயின்று தகுதி பெற்றவர்கள் என்ற வகையில் தற்போது அங்கு பயில விரும்பும் மாணவிகள் மற்றும் வளர்ந்தோர் ஆகியோருக்கு முழுமையான பயிற்சியையும் கற்பித்தல் முறைகளையும் போதிப்பார் என்று உறுதியாகக் கூறமுடியும்.

மேற்படி திறப்பு விழாவில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் சிறப்பான ஒரு வைபவத்தில் கலந்து கொண்டோம் என்ற திருப்தியோடு அங்கிருந்து விடைபெற்றனர்.

**படங்களுக்கு நன்றி: கனா - நினைவுகள்.கொம்**





**செய்தி: சத்தியன்**

# தமிழகத்தில் ஆக்சிஜன், வெண்டிலேட்டர் கருவிகள் தயாரிக்க உதவ வேண்டும்: வைகோ வலியுறுத்தல்



தமிழகத்தில் ஆக்சிஜன், வெண்டிலேட்டர் கருவிகள் தயாரிக்க மத்திய அரசு உதவிட வேண்டும் என, மதிமுக பொதுச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான வைகோ வலியுறுத்தியுள்ளார்.கரோனா தொற்று குறித்து, நாடாளுமன்ற மாநிலங்களவையில், நேற்று (ஜூலை 20) நடைபெற்ற விவாதத்தில், வைகோ பேசியதாவது:``நான் எடுத்த எடுப்பிலேயே, இந்தக் கொடிய கொள்ளை நோயைத் தடுப்பதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவிகள் அளிப்பதற்கும், தங்களை ஒப்படைத்துக் கொண்டு உழைக்கின்ற மருத்துவர்கள், செவிலியர்கள், துப்புரவுப் பணியாளர்கள், யாரெல்லாம் உயிர் நீத்தார்களோ, அவர்களை வணங்கி, என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.நான் கல்லூரியில் பொருளாதாரம் படித்தபோது, அந்தத் துறையின் மாபெரும் அறிஞர்களுள் ஒருவரான மால்தஸ் சொன்ன கொள்கை, இப்படியும் நடக்குமா? என்று என்னைத் திகைக்க வைத்தது.

மக்கள்தொகை பெருகிக்கொண்டே போகும்; ஒரு பெரிய குண்டு வெடிப்பு ஏற்படுவது போல, ஏதோ ஒரு வழியில் இயற்கை மக்களைக் கொல்லும். அதை யாராலும் தடுக்க முடியாது. போர்க்களங்களும், கொடிய கொள்ளை நோய்களும்தான், மக்கள்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்று அவர் கூறுகின்றார்.அதன்பிறகு நான் ஆராய்ந்து பார்த்ததில், மால்தஸ் சொன்னதுதான் உண்மை என்பதைப் புரிந்து கொண்டேன். கடந்த பல நூற்றாண்டுகளில், கோடானுகோடி மக்கள், கொள்ளை நோய்களால்தான் இறந்து போயிருக்கின்றனர்.

அதுபோல, இப்போது வந்திருக்கின்ற கோவிட் தொற்று, சீன நாட்டின் வுஹான் நகரில் இருந்து புறப்பட்டது என்று, ஆதாரங்களுடன் கூறுகின்றார்கள். அதே சீன நாட்டில், இன்றைக்கு 5,000 ஆண்டுகளுக்கு முன்னர், கிறிஸ்துவுக்கு முந்தைய 3,000 ஆண்டில், அமின் மங்கா என்ற பகுதியில் தோன்றிய கொள்ளை நோய், ஒரு லட்சம் பேரைக் கொன்று குவித்தது. இதனை, சிர்லா என அழைத்தார்கள். இறந்தவர்களுடைய உடல்களை, ஒரே இடத்தில் போட்டு எரித்தார்கள். அதன்பிறகு, அந்தப் பகுதியில் மக்கள் யாரும் வசிக்கவில்லை. அடுத்து, கி.மு. 430 இல், ஏதென்ஸ் நகரில் ஏற்பட்ட கொள்ளை நோய், ஐந்து ஆண்டுகள் நீடித்தது. ஒரு லட்சம் பேர் இறந்தார்கள்.

அடுத்து, கி.பி. 165 முதல் 180 வரை ரோமப் பேரரசில், ஆண்டோனைன் பிளேக் என்ற நோய் பரவிற்று. உயிர்களைச் சூறையாடியது. ஐம்பது லட்சம் பேர் இறந்தார்கள்.கி.பி.250 இல், ரோமாபுரியில் மட்டும், சைபிரியான் பிளேக் நோயில், 5,000 பேர் இறந்தார்கள். நோய்த் தொற்று பரவாமல் தடுக்க, இறந்தவர்களின் உடல்கள் மீது, கெட்டியான சுண்ணாம்பைக் கொண்டு பூசினார்கள்.அடுத்து, கி.மு. 541, 552 இல், பைசாண்டியப் பேரரசின் எல்லைக்கு உள்ளே, ஜஸ்டினியன் பிளேக் தொற்று பரவிற்று; 10 விழுக்காடு மக்கள் இறந்து போனார்கள்.1,346 முதல் 1,353 வரை, கருப்பு மரணம், ஆசியாவில் இருந்து ஐரோப்பாவுக்குப் பரவியது; அந்தக் கண்டத்தின் மக்கள்தொகையில் சரிபாதிப்பேரைக் கொன்றது.

பின்னர், மெக்சிகோவிலும், மத்திய அமெரிக்க நாடுகளிலும், 1,545 முதல் 1,548 வரை, கோகோ லிஸ்ட்லி எனும் கொள்ளை நோய், ஒரு கோடியே 50 லட்சம் பேரைக் கொன்றது.அடுத்து, 16 ஆம் நூற்றாண்டில், அமெரிக்க பிளேக் எனும் கொள்ளை நோய், மேற்கு அரைக்கோளப் பகுதிகளில் வாழ்ந்த பழங்குடி மக்களுள் 90 விழுக்காட்டினரைக் கொன்றது.166566 ஆம் ஆண்டுகளில், லண்டனில் பிளேக் நோய் பரவியது. சார்லஸ் மன்னன், மக்களை வெளியேற்றினான். மக்கள் தொகையில் 15 விழுக்காட்டினர் இறந்து போனார்கள்.மார்செய்ல் பிளேக் தொற்று, 172023 ஆம் ஆண்டுகளில், ஒரு லட்சம் பேரைக் கொன்றது.177072 ஆம் ஆண்டுகளில், ரஷ்யா பிளேக் தொற்றில், ஒரு லட்சம் பேர் இறந்தார்கள். 1793 இல், ஃபிலடெல்ஃபியா மஞ்சள் காய்ச்சலில் 50,000 பேர் இறந்தார்கள்.188990 ஆம் ஆண்டுகளில், அமெரிக்காவில் ஃபுளூ கொள்ளை நோயில், 10 லட்சம் பேர் இறந்தார்கள்.1916 இல், அமெரிக்காவில் போலியோ இளம்பிள்ளைவாதம் தாக்கியதில் ஒரு லட்சம் பேர் இறந்தார்கள். 19181920 ஆம் ஆண்டுகளில், ஸ்பானிஷ் ஃபுளூ காய்ச்சல், வட துருவத்தில் இருந்து உலகின் தென் கடல் பகுதிகள் வரை பரவியது. ஐந்து கோடி பேர் இறந்தார்கள்.

195758களில், சீனாவில் இருந்து பரவிய, ஆசிய ஃபுளூ காய்ச்சலில், பத்து லட்சம் பேர் இறந்தார்கள்.1981 முதல் இன்று வரை, எய்ட்ஸ் நோயால் பல்லாயிரக்கணக்கானவர்கள் இறந்தார்கள்.20092010 ஆம் ஆண்டுகளில், கினி பன்றிக் காய்ச்சலில், இரண்டு லட்சம் பேர் இறந்தார்கள்.201416 இல், மேற்கு ஆப்பிரிக்காவில், எபோலா கொள்ளை நோய் தாக்கி, 11,000 பேர் இறந்தார்கள்.இப்பொழுது ஏற்பட்டுள்ள கொள்ளை நோயில், உலகம் முழுமையும் 40 லட்சம் பேர் இறந்துள்ளனர். இனி, மூன்றாவது அலை தாக்கக்கூடும் என மருத்துவர்கள் எச்சரிக்கின்றார்கள். அதை எதிர்கொள்வதற்குத் தேவையான ஆக்சிஜன் வெண்டிலேட்டர்கள் எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும்.ஆயிரக்கணக்கான சடலங்கள் கங்கையில் மிதக்கின்ற காட்சிகள், பதற வைக்கின்றது. அடித்தட்டுத் தொழிலாளர்கள், கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் ஆக்சிஜன் ஆக்குவதற்கும், வெண்டிலேட்டர் கருவிகளும் செய்வதற்கு, மத்திய அரசு உதவிட வேண்டும். செங்கல்பட்டிலும், நீலகிரி மாவட்டம் குன்னூரிலும், அத்தகைய ஆய்வுக்கூடங்கள் இருப்பதை, திமுக உறுப்பினர் திருச்சி சிவா சுட்டிக்காட்டினார்.இத்தகைய மருத்துவ வசதிகள், ஏழைகளுக்கும் கிடைக்க வேண்டும்; தொழிலாளர்கள், குக்கிராமங்களில் வசிப்பவர்கள், நகரங்களில் புறக்கணிக்கப்பட்ட பகுதிகளுக்கு, ஆக்சிஜனும், உயர்தர மருத்துவமும் கிடைப்பதற்கு, அரசு தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.தனியார் மருத்துவமனைகளில், நடுத்தரக் குடும்பத்தினர், ஏழைகள் கட்டணம் செலுத்த முடியவில்லை. அனைவருக்கும் நோயற்ற நல்வாழ்வு என்பதே நமது குறிக்கோளாக இருக்க வேண்டும்''. இவ்வாறு வைகோ பேசினார்.

# தமிழகத்தில் ஆக்சிஜன் பற்றாக்குறையால் ஒருவர்கூட உயிரிழக்கவில்லையா? அமைச்சரின் பேட்டி குறித்து ஓபிஎஸ் கேள்வி

தமிழகத்தில் ஆக்சிஜன் பற்றாக்குறையால் 13 பேர் உயிரிழப்பு என்று முதல்வர் ஸ்டாலின் பிரதமருக்கு கடிதம் எழுதும் ஆக்சிஜன் பற்றாக்குறையால் உயிரிழப்பே இல்லை என துறை அமைச்சர் கூறுகிறார். எது உண்மை என்பதை முதல்வர் ஸ்டாலின் தெளிவுபடுத்தவேண்டும் என ஓபிஎஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.இதுகுறித்து அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓபிஎஸ் இன்று வெளியிட்டுள்ள அறிக்கை:"கரோனோ தொற்று தீவிரமாக இருந்தபோது ஆக்சிஜன் பற்றாக்குறையால் ஒருவர் கூட உயிர் இழக்கவில்லை என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் தெரிவித்திருப்பது முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் உள்ளது.

நேற்று முன்தினம் மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த மத்திய சுகாதாரத் துறை இணை அமைச்சர் கரோனா வைரஸ் இரண்டாவது அலையின்போது ஆக்சிசன் தட்டுப்பாட்டால் உயிரிழப்பு ஏற்பட்டதாக எந்த மாநில, யூனியன் பிரதேச அரசுகளும் தெரிவிக்கவில்லை'' எனத் தெரிவித்திருக்கிறார்.இந்த செய்தி அனைத்து பத்திரிகைகளும் வெளிவந்துள்ளது. மாநிலங்களிலும் புள்ளிவிவரங்களின் அடிப்படையிலேயே மத்திய அரசு மேற்படி பதிலை மாநிலங்களவையில் தெரிவித்திருக்கிறது. இதில் குறை காண்பதற்கு ஒன்றும் இல்லை, இருப்பினும் மத்திய அரசுக்கு எதிராக காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட எதிர்கட்சிகள் விமர்சனங்களை வைத்துள்ளனர்.

ஆனால், தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருக்கிற திமுக அரசோ, ஆக்சிஜன் தட்டுப்பாட்டால் ஒரு தமிழகத்தில் உயிரிழப்பு இல்லை என்று தெரிவித்து இருக்கிறது. அதனை தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார். ஒரு செய்தியை பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கின்ற உரிமை அமைச்சருக்கு உண்டு அதை நான் மறுக்கவில்லை ஆனால் அந்த செய்தியில் உண்மை இருக்கிறதா என்பதை ஆராய வேண்டிய கடமை எதிர்க்கட்சிக்கு உண்டு.சட்டமன்ற பொதுத் தேர்தலில் திமுக வெற்றி பெற்றதை அடுத்து ஆகஸ்டு 7 அன்று ஸ்டாலின் தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்ற அன்றைய தினமே இந்திய பிரதமருக்கு ஆக்சிஜன் பற்றாக்குறை குறித்து ஒரு கடிதத்தை ஸ்டாலின் எழுதினார்.அந்த கடிதத்தில் தமிழ்நாட்டில தினசரி ஆக்சிஜன் தேவை 440 டன் என்றும் அடுத்த இரண்டு வாரங்களில் தமிழ்நாட்டின் தேவை 840 மெட்ரிக் டன்னாக அதிகரிக்கும் என்றும் துரதிஷ்டவசமாக தேசிய ஆக்சிஜன் திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு 280 மற்றும் ஆக்சிஜன் மட்டுமே கொடுக்கப்பட்டது என்றும் இது குறித்து அதிகாரிகள் மட்டத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் குறைந்தபட்சம் 496 மெட்ரிக் டன் ஆக்சிஜனை தர ஒத்துக் கொள்ளப்பட்டது என்றும் ஆனால் அதற்கான ஆணை வெளியிடப் படவில்லை என்றும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.மேலும் தமிழ்நாடு ஆக்சிஜன் நெருக்கடியில் சிக்கி தவிப்பதாகவும் ஆக்சிஜன் பற்றாக்குறையால் இரண்டு நாட்களுக்கு முன்பு செங்கல்பட்டில் 13 பேர் எதிர்பாராத விதமாக இறந்து இருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ் நாளிதழ்களிலும் "தமிழகத்திலுள்ள செங்கல்பட்டில் இரண்டு நாட்களுக்கு முன் அரசின் பற்றாக்குறையால் 13 பேர் இறந்ததுதுரதிஷ்டவசமானது'' என்று முதல்வர் அந்த கடிதத்தில் குறிப்பிட்டு இருப்பதாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறதுதமிழக முதல்வர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதையும் குடும்ப நலத்துறை அமைச்சர் பேட்டியையும் ஒப்பிட்டுப் பார்த்தால் முரண்பாடு தெள்ளத் தெளிவாகிறது. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல், தமிழக அரசால் தெரிவிக்கப்படும் அனைத்து புள்ளி விவரங்களும் இப்படித்தான் இருக்குமோ என்ற சந்தேகம் அனைவரின் மனங்களிலும் எழுந்துள்ளது.

தமிழக முதல்வர் ஸ்டாலின் இந்திய பிரதமருக்கு கடிதம் வாயிலாக தெரிவித்த கருத்து உண்மையா? அல்லது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேட்டி மூலம் தெரிவித்தாரே அந்தத் தகவல் உண்மையா என்பதை விளக்க வேண்டிய கடமை தமிழக அரசுக்கு உண்டு. முதல்வர் ஸ்டாலின் இதுகுறித்து உடனடியாக ஆராய்ந்து உண்மை நிலையை தமிழ்நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்''இவ்வாறு ஓபிஎஸ் தெரிவித்துள்ளார்

# அரசு அறிவித்தபடி குடும்பத் தலைவிகளுக்கு ரூ.1000 உரிமைத் தொகையை உடனே வழங்க வேண்டும்: கமல்ஹாசன்

தமிழக அரசு அறிவித்தபடி குடும்பத் தலைவிகளுக்கான ரூ.1000 உரிமைத் தொகையை உடனே வழங்க வேண்டும் என, மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் வலியுறுத்தியுள்ளார்.இது தொடர்பாக, கமல்ஹாசன் ஜூலை 22 வெளியிட்ட அறிக்கை :"நமது பொருளியலில் இல்லத்தரசிகளின் பங்களிப்பு முக்கியமானது. அவர்களின் தியாகமும், உழைப்பும், அர்ப்பணிப்பும் அளவீடற்றவை. அதற்குரிய அங்கீகாரம் அளிக்கப்படுவதில்லை. இல்லத்தரசிகளுக்கு ஊதியம் அளிக்கப்பட வேண்டும் என்கிற சிந்தனையை முதன்முதலில் முன்வைத்த இந்திய அரசியல் கட்சி மக்கள் நீதி மய்யம்.குடும்பத் தலைவிகள் பொருளாதாரத்துக்காகக் கணவனைச் சார்ந்திருக்கும் சூழ்நிலையே நிலவுகிறது. தங்களது தனிப்பட்ட ஆர்வம், கனவுகளுக்காக அவர்களால் செலவு செய்ய முடியாத நிலைமையில்தான் பெரும்பான்மை பெண்கள் இருக்கிறார்கள்.

'இல்லத்தரசிகளுக்கு ஊதியம்' எனும் மக்கள் நீதி மய்யத்தின் முன்னெடுப்பு பெண்களுக்கு மிகப்பெரிய பொருளாதார சுதந்திரத்தை அளிக்கக்கூடியது.வீட்டைப் பார்த்துக்கொள்ளும் குடும்பத் தலைவியின் உழைப்பின் மதிப்பு, கணவனின் அலுவலக வேலை மதிப்பை விடக் குறைந்ததல்ல என்று உச்ச நீதிமன்றமே ஒரு வழக்கின் தீர்ப்பில் குறிப்பிட்டது. 'இல்லத்தரசிகளுக்கு ஊதியம்' எனும் மக்கள் நீதி மய்யத்தின் திட்டத்துக்குக் கிடைத்த வரவேற்பினைப் பார்த்து பிற அரசியல் கட்சிகளும் இதைத் தங்களது தேர்தல் வாக்குறுதிகளில் சேர்த்துக்கொண்டன. இவ்வாறு கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்

# ஒலிம்பிக் போட்டி: பாரபட்சம், ஏற்றத்தாழ்வுகள், சமமற்ற சந்தோஷம்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)



இன்றைய இதழ் உங்கள் கைகளில் கிடைக்கும்போதோ அல்லது இணைய வாயிலாக வாசிக்கும்போதோ உலகின் மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவான ஒலிம்பிக் போட்டிகள்டோக்கியோவில் தொடங்கியிருக்கும்.

உலகெங்குமுள்ள பல்துறை விளையாட்டு வீரர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தி தமக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் ஒன்றுகூடும் ஒரு திருவிழா ஒலிம்பிக் போட்டிகள். இப்போட்டியில் பங்கேற்பதே பெரிய கௌரவம் மற்றும் தனி நபருக்கு மிகப் பெரிய வெற்றியாகப் பார்க்கப்படுகிறது.

ஆனால் ஜுலை 23 தொடங்கி ஆகஸ்ட் 8 வரை நடைபெறவுள்ள டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் அதிகாரபூர்வமாக 32ஆவது கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகள் என்று அழைக்கப்படுகின்றது. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை கோடைக்கால மற்றும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுகின்றன. இவை இரண்டுக்கும் இடையே இரண்டு ஆண்டுகள் இடைவெளி உண்டு. ஆக மொத்தம் சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் (ஐ ஓ சி) ஒரு பன்னாட்டு பெரு நிறுவனம் போன்று ஆண்டு முழுவதும் வேலை செய்கிறது.

இந்த கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகள் என்று கூறப்படுவதே முரண்பாடான ஒன்றாகத் தோன்றுகிறது. ஏனென்றால் தென் துருவப் பகுதியில் இருக்கும் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென் ஆப்ரிக்கா, அர்ஜெண்டினா போன்ற நாடுகளில் ஜுன் தொடக்கம் ஆகஸ்ட் வரை குளிர்காலம். அதேபோன்று கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகளைப் பார்க்கும் போது குளிர்கால ஒலிம்பிக் போட்டி சற்று ஊடச்சத்து குறைந்த பிள்ளையாகவே இருக்கும். ஒலிம்பிக் வெற்றி, ஒலிம்பிக் வீரர் என்றெல்லாம் பேச்சு வரும் போது அது பெரும்பாலும் கோடைக்கால போட்டிகளைப் பற்றியே இருக்கும்.

இதுவரை நடைபெற்றுள்ள 31 கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகளை ஒப்பிடும் போது டோக்கியோவில் நடைபெறும் 32 ஆவது பலவகைகளில் வித்தியாசமானது, தனித்துவமானது என்றே சொல்ல வேண்டும்.

கடந்த 2013 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி அர்ஜெண்டினா நாட்டின் தலைநகர் போனஸ்அயர்ஸில் நடைபெற்ற ஐ ஓ சியின் 125ஆவது கூட்டம் நடைபெற்றது. தொடர்ச்சியாக ஐ ஓ சியின் உயர்நிலைக் கூட்டம் நடைபெறுவது வழக்கமான ஒன்றுதான் ஆனால் இந்தக் கூட்டம் சற்று வித்தியாசமானது பெரும் பரபரப்பை ஏற்படுத்துவதற்கான சூழல்களைக் கொண்டிருந்தது. 13 ஆண்டுகள் அந்த சம்மேளனத்தின் தலைவராக இருந்த பெல்ஜியம் நாட்டின் யாக் ரக்கர் பதவிக் காலம் முடிந்து விடைபெறுகிறார். விளையாட்டு உலக நிர்வாகத்தின் மாமன்னர் பதவி என்று கருதப்படும் அந்தப் பதவிக்கு அடுத்து யார் என்கிற மிகப்பெரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் உரையாற்ற எழுந்தார் யாக் ரக்கர். அது தலைவர் என்கிற வகையில் அவரது அதிகாரபூர்வமான கடைசி உரை.



அடுத்து யார், எங்கு, எப்படி, என்ன போன்ற பல கேள்விகளுக்கான பதில்கள் காத்திருந்தன. எழுந்தார், வந்தார், பெற்றார், பிரித்தார், காட்டினார்...உடனே ஆரவாரமும் ஆர்ப்பரிப்பும் தொடங்கியது.

2020...டோக்கியோ...என்று மூடப்பட்டிருந்த உரையிலிருந்த அந்தச் செய்தியை உலகுக்கு வெளிப்படுத்தினார்...அரங்கத்தில் அமர்ந்திருந்த அப்போதைய ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ ஆபே உட்பட அந்நாட்டுக் குழுவினர் துள்ளிக் குதித்தனர். ஜப்பான் முழுவதும் கொண்டாட்டங்கள் ஆரம்பித்தன...இன்னும் ஏழு ஆண்டுகளில் பாருங்கள் எங்கள் வல்லமையை என்று ஜப்பானியர் பறைசாற்றினர்.

2020 ஒலிம்பிக் போட்டிகளை நடத்த பல நாடுகள் விண்ணப்பித்திருந்தன. படிப்படியாக வடிகட்டப்பட்டு இறுதிப் போட்டிக்கு மூன்று நாடுகளின் நகரங்கள் தகுதி பெற்றன.

துருக்கியத் தலைநகர் இஸ்தான்புல், ஸ்பெயின் தலைநகர் மட்ரிட் மற்றும் ஜப்பானியத் தலைநகர் டோக்கியோ ஆகியவற்றுக்கு இடையே கடும் போட்டி. இதில் 1964ஆம் ஆண்டு டோக்கியோவில் ஏற்கனவே ஒலிம்பிக் போட்டி நடைபெற்றுள்ளது. எனவே அது அந்த வாய்ப்பு எமக்கே வேண்டும் என்பதில் துருக்கி விடாப்பிடியாகவும் பல நாடுகளின் ஆதரவையும் கோரி வந்தது. ஐரோப்பிய நாடுகள் ஸ்பெயினுக்கு ஆதரவாக நின்றன. ஜப்பானுக்கு பரந்துபட்ட ஆதரவு இருந்தது.

போட்டிக்கு முன்னர் வாக்கெடுப்பு நடைபெற்றது. முதல் சுற்று: இஸ்தான்புல்:26/ டோக்கியோ:42/மட்ரிட்:26. இதில் இரு நகரங்கள் தலா 26 வாக்குகளைப் பெற்றிருந்தால் ஒருவரை அடுத்த சுற்றுக்கு தேர்ந்தெடுக்க மீண்டும் வாக்கெடுப்பு நடைபெற்றது. அதில் இஸ்தான்புல்:49/மட்ரிட்:45. இதன் காரணமாக மட்ரிட் வாய்ப்பை இழந்தது.

இரண்டாம் சுற்று வாக்கெடுப்பில் இஸ்தான்புல்லுக்கு 36 வாக்குகளும் டோக்கியோவிற்கு 60 வாக்குகளும் கிடைத்தன. இதையடுத்து 56 ஆண்டுகளுக்கு பிறகு ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் வாய்ப்பை ஜப்பான் பெற்றது.




ஆனால் மிகவும் ஆர்வமாக பணிகளைத் துவக்கி முன்னெடுத்து வந்த ஜப்பானுக்கு- உலகைத் தொடர்ந்து ஆட்டிப்படைக்கும் கொரோனோ மிகப்பெரும் சவாலாக அமைந்தது. கடந்த ஆண்டு நடைபெற்றிருக்க வேண்டிய போட்டி இந்தாண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது. ஆனாலும் ஜப்பானில் கொரோனா பிரச்சனை ஓய்ந்தபாடில்லை. சற்று தணிந்தது போலிருந்த தொற்றின் தாக்கம் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்து கவலையை ஏற்படுத்தியுள்ளது. பல முன்னணி விளையாட்டு வீரர்கள் டோக்கியோ செல்லும் ஆசையைக் கைவிட்டனர்.

இதுவரை இல்லாத வகையில், ரசிகர்கள் இல்லாத அரங்கத்தில் துவக்க விழா நடைபெறவுள்ளது. டோக்கியோ நகருக்குள் இருக்கும் எந்த விளையாட்டு அரங்கிலும் ரசிகர்களை அனுமதிக்கும் எண்ணம் தற்போது அரசுக்கு இல்லை. நகருக்கு வெளியே உள்ள அரங்குகளில் சில கட்டுப்பாடுகளுக்கு அமைய குறைந்தளவுக்கு ரசிகர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

ஒலிம்பிக் விளையாட்டின் மிகவும் கவர்ச்சிகரமான அம்சம் அதன் துவக்க விழா. ஒலிம்பிக் ஜோதி எப்படி ஏற்றப்படும் என்பது கடைசி வரையில் மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருக்கும். அதைக் காணவே உலகெங்கும் கோடிக் கணக்கான ரசிகர்கள் கண்விழித்துக் காத்திருப்பார்கள். அதில் கலை அம்சமும் தொழில்நுட்பமும் இணைந்து ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தும்.

சினிமா என்றால் ஹாலிவுட், விளையாட்டு என்றால் ஒலிம்பிக் என்பதுதான் உச்சக்கட்ட அடையாளம் மற்றும் சாதனை. ஆனால் இந்த இரண்டிலும் சமூக ஏற்றத்தாழ்வுகள் ஏராளம் உண்டு. காலங்காலமாக ஒலிம்பிக் போட்டிகள் செல்வந்த நாடுகள் மற்றும் சற்று குறைந்த செல்வந்த நாடுகளுக்கு மட்டுமே ஏகபோக உரிமையாக இருந்துள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகள் ஒன்றுக்கும் மேற்பட்ட முறை போட்டியை நடத்தியுள்ளன. இதில் லண்டன் மாநகர் மூன்று முறை நடத்தியுள்ளது, 2024 ஆம் ஆண்டில் பாரிஸும் அந்தப் பெருமையைப் பெறும். அமெரிக்காவில் அட்லாண்டா, லாஸ் ஏஞ்சலஸ் ஆகிய நகர்களில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றுள்ளது. 2028ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக இப்போட்டி அந்நகருக்குச் செல்கிறது.




உலகெங்கும் தொடர்ச்சியாக கேட்கப்படும் ஒரு கேள்வி-ஒலிம்பிக் போட்டிகள் ஏன் பரந்துபட்ட அளவில் பயணிப்பதில்லை, ஏன் குறிப்பிட்ட சில நாடுகளின் ஆளுமையிலேயே உள்ளது? ஆனால் வழக்கம் போல் மௌனமே பதிலாகவுள்ளது.

இதுவரை நடைபெற்றுள்ள போட்டிகளில் 17 முறை ஐரோப்பாவிலும், 8 முறை அமெரிக்காஸிலும், 4 முறை ஆசியாவிலும் நடைபெற்றுள்ள போட்டிகள் இதுவரை ஆப்ரிக்காவில் நடத்தப்படவில்லை என்பது கசப்பான உண்மை. மிகவும் வேதனையான விஷயமும் கூட. தடகளப் போட்டிகள், கூடைப்பந்து, கைப்பந்து, குத்துச் சண்டை, கால்பந்து போன்ற விளையாட்டை எடுத்துக் கொண்டால் அதில் ஆப்ரிக்காவைச் சேர்ந்தவர்கள் அல்லது ஆப்ரிக்க வம்சாவளி வீரர்களே ஆளுமை செலுத்துகின்றனர்.

ஜமைக்கா, கென்யா, எத்தியோப்பியா, உகாண்டா, கியூபா, பஹாமாஸ் என்று எவ்வளவோ சிறந்த நாடுகளிலிருந்து ஏராளமான விளையாட்டு வீரர்கள் தொடர்ச்சியாக ஆளுமை செலுத்துகின்றனர். உசைன் போல்ட், ஷெல்லி ஆன் பிரேசர், அசா:பா பவல், யொஹான் பிளேக், ஆண்டனி நெஸ்ட், வில்சன் கிப்லகாட், டிபாபா சகோதரிகள் எனு பட்டியல் நீளும்.

உலகத்தின் எதிர்காலம் ஆப்ரிக்காவில்தான் தங்கியுள்ளது என்று மேடைதோறும் முழங்கும் தலைவர்கள் ஏன் அந்தக் கண்டத்தின் ஒரு நாட்டுக்கு ஒலிம்பிக் போட்டியை நடத்தும் வாய்ப்பை வழங்கக் கூடாது?

ஆப்ரிக்க நாடுகளுக்கு அந்தப் போட்டியை நடத்தும் நிதி வசதி இல்லையென்று வெள்ளைக்கார நாடுகள் சொல்லுமானால், அந்த நிதியுதவியை அவர்களுக்கு அளித்து உதவலாமே? அதற்கு ஏன் யாரும் தயாராக இல்லை. விளையாட்டின் மூலம் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியுமென்றால் அதைச் செய்ய செல்வந்த நடுகள் தயங்க வேண்டிய அவசியம் இல்லை.



தென் ஆப்ரிக்கா, கென்யா, எகிப்து, மொராக்கோ, நைஜீரியா, போன்ற நாடுகளுக்கு அந்த வாய்ப்பை வழங்கினால் அவை சிறப்பாக அதை நடத்தும். தனியொரு நாடால் முடியவில்லை என்றால் கிழக்கு ஆப்ரிக்க நாடுகளான கென்யா, உகாண்டா, தான்சானியா, எத்தியோப்பியா, ருவாண்டா, புருண்டி போன்ற நாடுகள் இணைந்து ஒலிம்பிக் போட்டியை நடத்த முடியும்.

மேலாதிக்க மனப்பான்மை, ஆண்டான் அடிமை நிலைப்பாடு, நிற மற்றும் இனத்துவேஷம் போன்றவை இன்னும் முற்றாக அழியவில்லை என்பதற்கு ஒலிம்பிக் போட்டிகள் இன்னும் ஆப்ரிக்காவுக்குச் செல்லவில்லை என்பது ஒரு எடுத்துக்காட்டாகப் பார்க்கப்படலாம். ஆப்ரிக்காவிலிருந்து குடிபெயர்ந்து தமது நாடுகளுக்கு வந்து திறமையை வெளிப்படுத்தும் கறுப்பின விளையாட்டு வீரர்களை ஏற்று அணைத்துக் கொள்ளும் நாடுகள் அந்த மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் நாடுகளுக்கு ஒலிம்பிக் போட்டியைக் கொண்டு செல்வதில் தயக்கம் காட்டுவதில் நியாயம் இல்லை.

மறுபுறம் ஒரு வாதத்திற்காக-ஒலிம்பிக் போட்டியை நடத்தும் வாய்ப்பு ஆப்ரிக்காவுக்கு அளிக்கப்படாததை எதிர்த்து, ஆப்ரிக்க வீரர்கள் ஒலிம்பிக் போட்டியையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ புறக்கணிக்கிறோம் என்று அறிவித்தால் என்னவாகும்? உலகின் மிகச் சிறந்த பல விளையாட்டு வீரர்களைக் கொண்ட ஆப்ரிக்காவுக்கு இதுவரை ஒலிம்பிக் போட்டிகள் செல்லாமல் இருப்பதை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. இதுவரை காலமும் ஆப்ரிக்க நாட்டினர் ஒலிம்பிக் போட்டிகளில் பெற்றுள்ள பதக்கங்களின் அடிப்படையில் பார்த்தாலே அதை நடத்துவதற்கான தகுதிகள் ஆப்ரிக்காவிலுள்ள மக்கள் மற்றும் நாடுகளுக்கு உள்ளன என்பது புலப்படும்.

2032 ஆம் ஆண்டு போட்டி ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகருக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதற்கு அடுத்த போட்டி 2036ஆம் ஆண்டிலாவது ஆப்ரிக்க நாடொன்றுக்கு செல்ல வேண்டும்.

பணமுள்ளவர்கள் மட்டுமே போட்டியை நடத்த வேண்டுமா? விளையாட்டிலும் இருப்பவர்கள்-இல்லாதவர்கள் பாகுபாடு ஏன்? இதை மாற்ற முடியாதா? அது மாற்றப்பட வேண்டும்.

ஒன்ராறியோ முழுவதும் லட்சக்கணக்கானோர் தங்கள் கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக்கொண்டார்கள்.

**உங்கள் பங்கை செய்யுங்கள். தடுப்பூசியை போட்டுக்கொள்ளுங்கள்.**

ஹெல்த் கனடாவினால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகள், மருத்துவ மனைகள், டாக்டரின் காரியாலயங்கள், பார்மசிகள் மற்றும் பெருந்தொகையாக தடுப்பூசி போடும் இடங்களில் கிடைக்கும். ஒவ்வொரு தடுப்பூசியும் முன்பிருந்த சாதாரண நிலைமைக்கு நம்மை நெருக்கமாகக் கொண்டுவரும்.

**ontario.ca/bookvaccine** இல் உங்கள் நியமிப்பை இன்றே பதிவுசெய்யுங்கள் அல்லது 300 மொழிகளில் உதவி பெற்றுக்கொள்ள **1-888-999-6488** ஐ அழையுங்கள்.

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது.

Ontario

# கல்வித்துறையில் நவீன சாதனப் பயன்பாடு

சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனம் (ஐக்கிய அமெரிக்கா), இரட்ணம் ஃபவுன்டேசன் (ஐக்கிய இராட்சியம்) என்பன இணைந்து திருகோணமலை மாவட்டத்தில் 12 பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறைக்கான உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

இப் பாடசாலைகளில் ஒன்றான தி/இ.கி.ச ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரியில் திறன் வகுப்பறையை திறந்து வைத்தல் நிகழ்வு 19.07.2021 வியாழக்கிழமை அன்று கல்லூரி அதிபர் செ.பத்மசீலன் தலைமையில் நடைபெற்றது.

அதிபர் உரையாற்றும் பொழுது காலத்தின் தேவை அறிந்து மாணவர்களது கற்றலை வழப்படுத்துவகற்காக இதனை வழங்கி வைத்த இரு அமைப்புக்களையும் பாராட்டுவதாக தெரிவித்தார்.

முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட கல்லூரியின் முன்னாள் அதிபரும்இகிழக்கு மாகாணசபையின் முன்னாள் கல்வி அமைச்சருமான திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் திறந்து வைத்ததுடன் எமது கல்லூரி நவீன தொழிநுட்ப யுகத்திற்கேற்ப கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு புதிய சாதனங்களை பயன்படுத்துவதில் முன்னோடியாக செயற்பட்டு வருகின்றது. அந்த வகையில் இவ் அமைப்புக்களால் கிடைக்கப்பெற்ற இத்திறன் வகுப்பறைகயானது மாணவரது கற்றலை ஊக்குவிக்க உதவும் எனக் குறிப்பிட்டார்.

விசேட விருந்தினராக திரு. தி.பிரபாகரன் (சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவன திருகோணமலை மாவட்ட நலன்புரி இணைப்பாளர்) அவர்களும்
மட்டுப்படுத்தப்பட்ட ஆசிரியர்களும்இமாணவர்களும் கலந்து கொண்டனர்.

விருந்தினர்களை வரவேற்றல்




மங்கலவிளக்கேற்றல்




திறன் வகுப்பறை விருந்தினர்களால் திறந்து வைத்தல்




கற்றலுக்கான சாதனப் பயன்பாடு




Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





25 வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

ஓம் சக்தி

# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றம்

**கனடாவின் தாய் மன்றம் — வழிபாட்டு மன்றம் (எண் 3181)**

**80(E) Nashdene Rd. Unit #99, Scarborough, Tel: 647.436.9647**

# ஆடிப்பூர பெருவிழா




1. ஆடி அமாவாசை 07-08-2021 சனிக்கிழமை காலை 9:30 தொடக்கம் விசேட பூசை நடைபெற்று மகேஸ்வரபூசையுடன் முடிவடையும்.

2. ஆடிப்பூரம் 10-08-2021 செவ்வாய்கிழமை காலை 7:30 அளவில் அன்னையின் ருதுசாந்தியுடன் ஆரம்பமாகி தொடர்ந்து பூசைகள், பஜனைகள் நடைபெற்று கஞ்சிக்கலசம் நடைபெறும்.

3. வரலட்சுமி பூஜை 20-08-2021 வெள்ளிக்கிழமை மாலை 5:30 மணியளவில் ஆரம்பமாகும்.

அனைத்து சக்திகளையும் அன்னையின் அருளைப்பெற்றுய்யமாறு வேண்டுகின்றோம்.

# PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!






**Bala Logendralingam**
REALTOR®

EXECUTIVE Award
100% Award


RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9



30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான
ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள்,
மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை
ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித
பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
தற்போது கனடா ஸ்காபுறோ நகரில் சங்கர் அன்கோவில் தாராளமாகக்
கிடைக்கின்றன. இங்கே படத்தில் காணப்படும் அவசியமான உபகரணங்களும்
உணவுப் பதார்த்தங்களும்.....
மிக மலிவு விலைகளில்... ஆச்சி மசாலா தயாரிப்புக்கள்...
தமிழ்நாட்டின் MTR தயாரிப்புக்கள்... அம்மியும் குழவியும் (கல்லினால் ஆனது)...
இந்தியாவின் VIDIEM சக்தி வாய்ந்த கிறைன்டர்கள்...
இந்தியாவின் Sumeet கிறைன்டர்கள் பல அளவுகளில்
அனைத்தும் கிடைக்கின்றன...
Sumeet
Vidiem
Your All Day Companion
ABC
My 123
Mini Library
Aachi
LEMON RICE POWDER
GARAM MASALA
Gulab Jamun
Dosa
NESCAFE Sunrise
MAHANARAYAN TAILA
Fair & Lovely
BRU
KILLI
NILAVEMBU
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# சிறுத்தை தன் தோலிலிருந்து வரியை இழந்தாலும் இழக்கலாம்; நரிகூட தன் பாரம்பரிய குணமான தந்திரத்தை மறந்தாலும் மறக்கலாம்; ஆனால்..! ஆனால்..!!

## (டாக்டர் டி.எம். நாயருக்கு ஜூலை 17 நினைவு நாள்)



திராவிட இயக்கங்களின் பாட்டி அமைப்பான தென்னிந்திய நல உரிமைச் சங்கம் எனப்படும் நீதிக்கட்சி 1916ம் ஆண்டு நவம்பர் திங்களில் தொடங்கப்பட்டது. வகுப்புவாரி பிரதிநிதித்துவம், சமூகநீதி ஆகியவற்றுடன் கல்வி வளர்ச்சியையும் தமிழர்களுக்கு 100 ஆண்டுகளுக்கு முன் கொடுத்த ஆட்சி நீதிக்கட்சியின் ஆட்சி.




பிராமணர் அல்லாத இந்துப் பெருமக்களின் அரசியல் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக பிட்டி தியாகராய செட்டி, டாக்டர் டி.எம். நாயர், பி. ராமராய நிங்கர் (பனகல் அரசர்) மற்றும் சி. நடேச முதலியார் போன்ற பெருமக்களால் இந்த அமைப்பு உருவானது. இத்தகைய சான்றோர் திருமக்களில், டி.எம் நாயரின் எழுச்சிமிகு சிந்தனையும் ஆற்றல்மிக்க செயலும் குறிப்பிடத்தக்கன.

"சிறுத்தைப் புலி தன் உடலில் உள்ள வரியை ஒருவேளை இழந்தாலும் இழக்கும் குள்ளநரி அதன் பாரம்பரிய குணமான தந்திரத்தை மறந்தாலும் மறக்கலாம் ஆனால், அரசியலில் இருக்கும் ஒரு பார்ப்பனரின் மனதைக் கீறிப் பார்த்தால் அங்கே ஒளிந்திருக்கும் "வஞ்சகம்" என்ற தன்மை மட்டும் அவர்களைவிட்டு ஒருகாலும் அகலவே அகலாது" என்று நீதிக் கட்சியில் செம்மாந்த சிந்தனையாளராகவும் வீறுகொண்டத் தலைவராகத் திகழ்ந்த டாக்டர் டி.எம். நாயர், இங்கிலாந்து நாடாளுமன்ற கூட்டுக்கூட்டத்தில் முழங்கியது வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

1918 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 2 ஆம் நாள் இங்கிலாந்து நாடாளுமன்ற இரு அவைகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் அடங்கிய சிறப்புக் கூட்டத்தில் உரையாற்றியபோதுதான் நாயர் அவ்வாறு முழங்கினார். இந்தியாவில் மதத்தின் பெயராலும், சாதியின் பெயராலும் நடைபெற்றுவரும் கொடுமைகளை விளக்கி, பார்ப்பனரல்லாதாருக்குச் சமூக நீதி கிடைக்க வேண்டும் என்று உரிமைக் குரல் எழுப்பினார் அவர்.

"நீதிக் கட்சியின் நோக்கம் பார்ப்பனரல்லாத மக்களை மேம்பாடுறச் செய்வதே அல்லாமல், பார்ப்பனர்களை வீழ்த்த வேண்டும் என்பதல்ல் எங்களுக்கு சமூகநீதி வேண்டும். அதனை நிறைவேற்றுதற்குரிய அரசியல் உரிமை வேண்டும். பிரிட்டீஷ் அரசு அதற்கு ஏற்றபடி சலுகைகளைப் பெருக்கித் தர வேண்டும். நீதிக் கட்சி இருந்தியாவிற்குத் தன்னாட்சி உரிமை கோருகிறது. அதேநேரத்தில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டவர், பழங்குடியினர் ஆகியோருக்கு முழு உரிமையும் பாதுகாப்பும் அளிக்கக் கூடியதாக அந்தத் தன்னாட்சி இருக்க வேண்டும்" என்றும் ஓங்கி முழங்கினார் டாக்டர் நாயர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னை மாகாணத்தின் முக்கிய அரசியல் தலைவர்களில் ஒருவராக விளங்கிய டி.எம். நாயர் (டாக்டர் தரவத் மாதவன் நாயர்) மிகச் சிறந்த பத்திரிகையாளர் ஆவார். "சர்" ஏ.டி.பன்னீர் செல்வம், "வெள்ளுடை வேந்தர்" தியாகராயர் ஆகியோரெல்லாம் சேர்ந்து நிறுவிய தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் சார்பில் "ஜஸ்டிஸ்" என்னும் இதழ் ஆங்கில மொழியில் நடத்தப்பட்டது. அதனால்தான், தென்னிந்திய நல உரிமைச் சங்கம் "ஜஸ்டிஸ் பார்ட்டி" என்று சென்னை மாகாண மக்களால் அப்போது அழைக்கப்பட்டு, அதுவே காலப்போக்கில் தமிழில் நீதிக் கட்சி என்று புது வடிவம் பூண்டது. அத்தகைய அரசியல் பாரம்பரியம் மிக்க ஜஸ்டிஸ் ஏட்டை நடத்தியவர் இதே டி.எம்.நாயர்தான்.




இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில், ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் கூட எங்கும் எதிலும் பிராமணமயமாகவே இருந்தது. இன்றளவும் அந்த நிலை நீடிக்கிறது. இடையில், சமூக நீதிக் காவலரும் மன்னர் குலத்தில் உதித்த அரசியல் தலைவருமான வி.பி. சிங் ஆட்சி கவிழ்க்கப்பட்டதற்கும் இந்திய ஒன்றிய அரசில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பிற்கு முன்னிரிமை அளிக்குக் மண்டல் குழு அறிக்கை கிடப்பில் போடப்பட்டதற்கும் பிராமண மேலாதிக்கம்தான் காரணம்.

105 ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பட்ட நீதிக் கட்சி தேர்தல் களம் கண்டு ஆட்சியையும் கைப்பற்றியது.

1920 இல் சென்னை மாகாணத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நீதிக்கட்சி தனியாகப் போட்டியிட்டு பெரும்பான்மையான இடங்களில் வென்று ஆட்சியை-யும் கைப்பற்றி, 1936 வரை 16 ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சியில் நீடித்தது. அந்தக் காலக்கட்டத்தில்தான், பார்ப்பனரல்லாதார் பல சலுகைகளையும் உரிமைகளையும் பெற்றனர். குறிப்பாக 1921, செப்டம்பர் 16 இல் நீதிக்கட்சி அரசு முதல் முறையாக வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணையை நிறைவேற்றியது. இதுவே இந்தியாவின் முதல் இடஒதுக்கீட்டுச் சட்டமாகும். இதன்வழி, தாழ்த்தப்பட்டோர் என அழைக்கபட்ட மக்களுக்குப் பல உரிமைகள் கிடைத்தன. கல்வி, வேலைவாய்ப்பு, ஆன்மிக உரிமை என பல திட்டங்களை நீதிக்கட்சி நிறைவேற்றினாலும் இதற்காகவே பாடுபட்ட டாக்டர் டி.எம். நாயர் இவைகளைப் பார்க்க முடியாமல் எந்த மக்களுக்காகப் போராடவும் குரல் கொடுக்கவும் லண்டன் சென்றாரோ, அங்கேயே 1919 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 17 ஆம் நாள் தனது 51ஆவது வயதில் தம் வாழ்க்கை என்னும் நூலுக்கு முடிவுரை எழுதினார்.

கல்விக் கூடங்களில் கல்வி பயில உரிமை

வேலை வாய்ப்பில் உரிமை

அதனிலும் மேலாக, தெருவில் நடக்க உரிமை

கோவிலில் நுழைய உரிமை

பேருந்தில் பயணம் செய்ய உரிமை

நாடக அரங்குகளில் நுழைய உரிமை

பெண்கள் தேர்தலில் போட்டியிட உரிமை

நகராட்சிப் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம்

ஆகியவற்றிற்கெல்லாம் குரல் கொடுத்த நாயர், நீதிக் கட்சி ஆட்சியில் இவை யாவும் நிறைவேற்றப்பட்டபோது அவற்றைக் கண்ணாரக் கண்டு உள்ளம் இன்புற காலமகள் வாய்ப்பளிக்கவில்லை என்பது பெருஞ்சோகம்.

1919 இல் பிரிட்டிஷ் அரசுஇந்தியாவிற்கான அரசியல் சீர்திருத்தங்களை பரிந்துரைக்க மண்டேகு-செம்ஸ்.:.போர்டு குழுவை ஏற்படுத்தியது. நீதிக்கட்சி சார்பில் அக்குழுவின் முன்தோன்றி பிராமணரல்லாதோருக்கு வகுப்புவாரி இட ஒதுக்கீடு வேண்டுமென நாயர் வாதிட்டார். இதற்காக லண்டன் சென்றிருந்த போது அங்கு உடல்நிலை மோசமாகி மரணமடைந்தார்.

டி.எம். நாயர், 1868 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 15 ஆம் நாளில் அப்போதைய சென்னை மாகாணத்தில் பாலக்காடு அருகில் திரூர் கிராமத்தில் பிறந்தார். சென்னையில் கல்லூரிப் படிப்பிற்குப்பின் மருத்துவப் பட்டப் படிப்பை இங்கிலாந்தில் எடின்பர்க் பல்கலைக்கழகத்திலும், காது, மூக்கு, தொண்டை (ENT) நோய் தொடர்பான ஆய்வுப் பட்டத்தை பிரான்சு நாட்டுத் தலைநகர் பாரீசிலும் பெற்றார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நிறைவுப் பகுதியில் தாயகம் திரும்பிய இவர், தன்னுடைய அரசியல் வாழ்க்கையை இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்துடன் தொடங்கினார். காங்கிரஸ் கட்சி பேச்சாளர்களில் தலைசிறந்த ஒருவராகத் திகழ்ந்த இவர், சென்னை மாநகராட்சி உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் என்றெல்லாம் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.



இந்தச் சூழ்நிலையில், 1908 ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசு டாக்டர் நாயரை இந்தியத் தொழிலாளர் நல ஆணைய உறுப்பினராக நியமித்தது. நாயர் இந்தியத் தொழிலாளர்களின் அவல நிலையைப் பட்டியல் இட்டுத் தனது கண்டனத்தைப் பதிவு செய்ததோடு, தொழிலாளர்களின் வேலை நேரத்தைக் குறைத்திடவும் பரிந்துரைத்தார்.

டாக்டர் டி.எம். நாயரும் சர்.பி. தியாகநாயரும் காங்கிரசுக் கட்சியில் இருந்தாலும் பார்ப்பனரல்லாத மக்களுக்காகப் பாடுபட்டனர். அவர்களின் மனப்போக்கை நன்கு அறிந்த டாக்டர் சி. நடேசனார், அவர்களை அணுகித் தாம் நிறுவிய திராவிடச் சங்கத்தின் நோக்கம் மற்றும் கொள்கைகளை விளக்கி அவர்களின் ஆதரவைப் பெற்றார். அவர்களும் காங்கிரசுக் கட்சியை விட்டுவிலக, தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தோன்றுவதற்கு துணை நல்கினர். இப்படி உருவான நீதிக் கட்சிக்கு அடித்தளம் அமைத்தவர் டாக்டர் சி. நடேசனார் என்றாலும், நீதிக் கட்சியை வழிநடத்தியவர் டாக்டர் டி.எம். நாயர் என்றால் அது மிகையாகாது.

1917 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25 ஆம் நாள் நடைபெற்ற தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தின் முதல் மாநாட்டில் டி.எம். நாயரைப் பற்றி தியாகராயர் தனது தலைமை உரையில், "அவர்(நாயர்) காட்டிய வழியிலேயே நாம் இப்போது களத்தில் நிற்கிறோம். நாம் நம்முடைய முன்னேற்றப் பாதையில் சென்று ஆற்ற வேண்டிய கடமைக்கும் அவரே தலைவராய் இருந்து வழிகாட்ட வேண்டும்" என்றார். நாயர் நீதிக்கட்சியில் எந்தப் பதவியையும் ஏற்றுக் கொள்ளாமல் 24 செயற்குழு உறுப்பினர்களில் ஒருவராகத் தன்னை இணைத்துக் கொண்டு கட்சியை வழி நடத்தினார் என்பது வரலாறு.

டாக்டர் நாயர் அவர்களின் பேச்சும், எழுத்தும் காங்கிரசுக் கட்சிக்காரர்களையும், அன்னிபெசன்ட் அம்மையாரின் "சுயாட்சி" (ஹோம் ரூல்) கூட்டத்தாரையும் கதி கலங்க வைத்தது. அதோடு காந்தி, ராஜாஜி, பாரதியார் போன்றோரும் நாயரின் சமூக நீதிக்கான கேள்விக் கணைகளுக்கு பதில் சொல்ல வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டனர். சிறந்த மக்கள் நலத் தொண்டராக விளங்கிய டி.எம்.நாயர், தன் வாழ்வை ஏறக்குறைய அரை நூற்றாண்டோடு முடித்துக் கொண்டது திராவிட இயக்கத்தில் பின்னடைவை ஏற்படுத்தியது.



தமிழகத்தை இன்று ஆளும் மு.க. ஸ்டாலின், தான் திராவிட இயக்கத்தைச் சார்ந்தவன் என்று பெருமை பாராட்டுகிறார் என்றால், அத்தகைய திராவிட இயக்கத்திற்கு வித்திட்ட பெருமக்களுள் ஒருவரான டி.எம். நாயருக்கு ஜூலை 17, நினைவு நாள்.

தமிழர்கள் தம் நெஞ்ச ஊஞ்சலில் அமர்த்தி, ஆட்டிவிட்டு அழகு பார்க்க வேண்டிய உருவம், டி.எம். நாயரின் திருவுருவம். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி ஆகியோருக்கெல்லாம் முன்னோடித் தலைவரான டி.எம். நாயருக்கு திராவிட இயக்க வரலாற்றில் எஞ்ஞான்றும் இடம் உண்டு.

மலேசிய நக்கீரன்

மலேசிய மடல்

# துரோகத்தில் விஞ்சியவர் யார்? அலாவுதீன் கில்ஜியா துரோண ஆச்சாரியா?



நக்கீரன்

**சா**திக்கொரு நீதி சொல்லும் மகாபாரதக் கதையில் வரும் துரோண ஆச்சாரியார் தலைசிறந்த குரு ஆவார். வில் வித்தையில் கை தேர்ந்த அவர்தான், அர்ச்சுனனை அக்கலையில் தேற வைத்தவர். கதைப்படி, இந்த இருவரும் மேல்தட்டு சாதியைச் சேர்ந்தவர்கள். ஆன-ாலும், துரோணர் எல்லோரையும் போல ஒரு தாய் வயிற்றில் இருந்து பிறக்காதவர்.

அப்படி யென்றால், துரோணர் எப்படித்தான் பிறந்தார்?



ஒரு பானையில் இருந்து பிறந்தாராம் அவர். அதுவோர் ஆபாச முடைநாற்றம் அடிக்கும் துணைக் கதையாக விரிகி-றது. அது தொலையட்டும்;
நாம் ஜலாலுதீன் கில்ஜி விசயத்திற்கு வருவோம்.

ஒருபோதில், காட்டில் வில்லேந்தும் கலையை அர்ச்சுனனுக்கு பயிற்றுவித்துக் கொண்டிருந்ததை எதிர்பாராமல் கண்ட ஏக-லைவன், தானும் அம்பு விடும் வித்தையைக் கற்க விரும்பி துரோணரை நாடினான்.

ஏகலைவனைப் பற்றிய விவரத்தைக் கேட்டறிந்த துரோணர், ஏக-லைவன் சூத்திரன் (தமிழன்) என்பதை அறிந்து, தன்னைவிட கீழ்ச் சாதியைச் சேர்ந்த-வர்களுக்கு தான் குருவாக இருப்பதில்லை என்று சொல்லி, ஏக-லைவனை ஏமாற்றத்திற்கு ஆளாக்கி திருப்பி அனுப்பி வைத்தார் துரோணர்.

ஆனாலும் மனம் தளராத ஏகலைவன், தான் எப்படியாவது வில்வித்தையில் தேர்ந்துவிட வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு, அர்ச்சுனனுக்கு துரோணர் விற்கலை பயிற்றுவித்ததை அருகில் ஒளிந்திருந்து அன்றாடம் கற்று தேர்ந்து தெளிந்து வந்துள்ளான்.

ஒரு நாள் அர்ச்சுனனை சோதித்துப் பார்க்க விரும்பிய துரோணர், அருகில் உள்ள மரத்தின் உச்சயில் அமர்ந்திருந்த ஒரு வல்லூறுப் பறவையைக் காட்டி அதை ஒரே அம்பில் வீழ்த்த முடியுமா என்று கேட்டிருக்கிறார்.

வாய் மூலம் பதில் சொல்லாத அர்ச்சுனன், அடுத்த பொழுதே அந்தப் பறவைக் குறிவைத்து அம்பைச் செலுத்தத் தயாராகி, தன் கையிலிருந்து வில்லின் மூலம் பதில் சொன்னான்.

உள்ளம் மகிழ்ந்த துரோணர், இப்பொழுது உன் கண்களுக்கு என்ன தெரி-கிறது என்று கேட்டதும், தான் முடுக்கிவிடத் தயாராக இருக்கும் அம்பின் நுனி-யும் வல்லூரின் கழுத்தும் மட்டும்தான் தெரிகின்றன என்று அர்ச்சுனன் சொன்னதைக் கேட்டு மேலும் மகிழ்ந்த துரோணர், அர்ச்சுனா, விடு அம்பை  என்று உத்தரவிட்டிருக்கிறார்.

வைத்த குறி தப்பாமல் அர்ச்சுனன் ஏவிய அம்பு வல்லூறின் கழுத்தைப் பதம் பார்த்தது. என்ன வியப்பு? இன்னோர் அம்பும், அதேவேகத்தில் பாய்ந்து சென்று அர்ச்சுனன் செலுத்திய அம்பின் நுனியையும் அந்தப் பறவையின் கழுத்தையும் ஒருே-சரத் தொட்டு, அதேவேளை அர்ச்சுனன் விட்ட அம்பின் நுனியை இலேசாக உரச-ியபடி இரு அம்புகள் ஒரு பறவை என மூன்றும் ஒன்றாக தரையில் விழுந்தன.

என்ன நடந்தது  என்று புரியாமல் இருவருமே திகைத்து நின்றனர்.

இங்கு, என்னைப் போல் இன்னொருவனா என்று கேட்டு அர்ச்சுனன் கொதித்ததைக் காட்டிலும் துரோணர் அடைந்த வியப்பு இன்னும் அதிகம்.

அந்த வேளையில், “இதோ, இலைகளை விலக்கிக் கொண்டு ஓர் உருவம் வருகிறது பாருங்கள்” என்று அர்ச்சுனன் சொன்ன திசையை நோக்கி துரோணர் திரும்புவதற்குள் அந்த உருவம் வெளிப்பட்டுவிட்டது.

ஆம், தமிழன் ஏகலைவன்தான் அவன்.

ஏகலைவா, நீதான், அர்ச்சுனனுக்கு இணையாக அம்பை ஏவினாயா?
“ஆமாம் குருவே” - இது, ஏகலைவனின் பணிவான பதில்.

“யாரிடம், எப்படி இந்த அற்புதத்தைக் கற்றாய் நீ?”
“உங்களிடம்தான் கற்றேன் குருவே!”.



“என்னிடமா, நான்தான் முடியாதென்று அப்போதே உன்னை திருப்பி அனுப்பி விட்டேனே”.

“உண்மைதான். இருந்தாலும் எப்படியாவது வில் வித்தையைக் கற்க வேண்டும் என்ற பேராவலால் அன்றாடம் இங்கே வந்து, அதோ அந்த பெரிய மரத்திற்கும் செடி கொடிகளுக்கும் பின்னால் ஒளிந்திருந்து தாங்கள் அர்ச்சுனனுக்கு சொல்லிக் கொடுத்ததை எல்லாம் கேட்டுக் கேட்டு பயிற்சி பெற்றேன்”.

இவ்வாறு இருவரின் உரையாடல் தொடர, இதை அவதானித்துக் கொண்டிருந்த அர்ச்சுனன், அருக-ில் இருந்து கற்ற தனக்கு இணையாக தொலைவில் இருந்து கற்றதுடன் என்னைப் போலவே அம்பை ஏவிய ஏகலைவன், தன்னைவிட சிறந்தவன்தான் என்று சொன்னதை மறுத்த துரோணன், இவன் குருவின் பேச்சை மதிக்காமலும் தட்சணை செலுத்தாமலும் கலையைப் பயின்றதால் ஏற்க முடியாது என்று கொக்கரித்திருக்கிறான்.

துரோனர், தன் மனம் கொதித்து அடங்கியபின், செய்வதறியாது திகைத்தும் ஒதுங்கியும் நின்று கொண்டிருந்த ஏகலைவனை நோக்கி, வஞ்சக எண்ணத்துடன;

“சரி, ஏகலைவா, கலைப் பயணம் நிறைவுற்றதும் குருவிற்கு காணிக்கைக் கொடுப்பது சீடனின் கடமை வழக்கத்தில் இருப்பது தெரியும்தானே உனக்கு” என்று சூழ்ச்சி வலையைப் பின்னினான்.

“ஆமாம் குருவே, நன்கறிவேன் நானும் அதை” என்று கூறி தன்னையும் அறியாமல் துரோனனின் வஞ்சக வலையில் சிக்குகிறான் ஏகலைவன்.

காணிக்கை என்பது கொடுப்பவரின் மன வளத்தையும் அவரின் பொருள் இருப்பையும் பொறுத்தது. பெறுபவர், பெறும் பொருள் எதுவாக இருந்தாலும் அதை அப்படியே ஏற்பதுதான் தனி மனித நாகரிகம். சமூகப் பண்பு. ஆனால், ஏகலைவன்-துரோனன் விசயத்தில் அப்படியா அமைந்தது?

குருவிற்கு காணிக்கை அளிக்க சித்தமாக இருக்கிறேன் என்று ஏகலைவன் சொன்னதும், “என்ன கொடுப்பாய் எனக்கு?” என்று கேட்பதற்குப் பதிலாக “நான் என்ன கேட்டாலும் தருவாயா?” என்று முந்திக் கொண்டான் துரோனன்.

“பொன்னும் பொருளும் அணியும் மணியும் என இன்னும் எதைக் கேட்டாலும் கொடுத்துதான் விடுவோமே. அப்படி எதைத்தான் கேட்டுவிடப் போகிறார் இந்த துரோ-னக் (துரோகக்) குரு” என்று எண்ணிய ஏமாளி ஏகலைவன்.., சற்றும் சிந்திக்காமல்....,

“ஆமாம் குருவே, தாங்கள் எதைக் கேட்டாலும் தருவேன். என் வாக்கிலிருந்து மாறமாட்டேன்” என்று உறுதி பட ஏகலைவன் உரைத்த மறுவிநாடியே,

“அப்படி யென்றால் உன்னுடைய வலது கை கட்டை விரலை வெட்டி எனக்கு குருதட்சனையாகக் கொடு” என்று ஆணையிட்டான் துரோனன். பிறகென்ன? ஆர்வத்துடன் வில் கலையை தன்னார்வமாக கற்றும் கடைசியில் கட்டைவிரல் இல்லாமல் போனதால் ஏகலைவனால் வில்லைப் பயன்படுத்தவோ அம்பை எய்தவோ முடியாமல் போனது.

உலகின் எந்த நாட்டிலும், அது உண்மை நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, புனைச் சம்பவமாக இருந்தாலும் சரி, இப்படிப்பட்ட வஞ்சகம் அரங்கேற்றப் பட்டதில்லை. இப்படித்தான் சாதிக்கொரு நீதி என்னும் இழி கருத்து, மகாபாரதம் முழுக்க பரவியும் விரவியும் கிடக்கின்றன.

இதைப்போல இன்னொரு துரோகமும் அங்கே நடந்தது, முன்னது இடம்பெற்றது காந்தாரம் என்று அழைக்கப்பட்ட இன்றைய ஆ.்.ப்கானிஸ்தானில்.

இப்பொழுது சொல்லப்போகும் இரண்டாவது துரோகம், சற்று தள்ளி, அதாவது கங்கை நதிக்கு இந்தப்புரத்தில் இடம்பெற்றது. ஆனாலும், துரோகத்தை இழைத்தவரும் அதற்கு ஆளானவரும் என்னவோ கங்கைக்கு அந்தப்புரத்தில் இருந்த ஆ.்.ப்கானிஸ்தானைச் சேர்ந்தவர்கள்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆ.்.ப்கானிஸ்தான் என்றாலே அந்தக் காலம் முதல் இந்த நாள்வரை துரோகம் தழைக்கும் நிலம்தானோ?

பழைய டில்லியை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்த மொ-கலாய சாம்ராஜியத்தில் அடிமைகள் ஆண்ட வரலாற்றுப் பதிவும் உண்டு. அடிமை-மயாக இருந்து, பின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதியாக உயர்ந்து அதன்பின் பொருத்தமான நேரம் பார்த்து சுல்தானையே கொன்றுவிட்டு நான்தான் இனி டில்லி சுல்தான் என்று பறைசாற்றிக் கொண்ட குத்புதீன் மன்னன்தான் அடிமை சாம்ராஜியத்தை புது டில்லியில் தோற்றுவித்தவன். அடிப்படையில், இது பாரசீக பரம்பரை.
இந்தப் பரம்பரையின் கடைசி மன்னனை, அந்த மன்னனால் அந்நாளைய பஞ்சாப் மண்டலத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்ட ஜலாலுதீன் கில்ஜி என்பவர் சமயம் பார்த்து கொன்றுவிட்டு, இனி இந்த டில்லி அரசக் கட்டிலில் கோலோச்சப் போவது இந்த கில்ஜிதான் என்று தனக்குத் தானே முரசறைந்து கொண்டார்.

வஞ்சகத்திற்கும் சூழ்ச்சிக்கும் பெயர் பெற்ற புது டில்லி கொத்தளத்தில் சி-றிது காலமே ஆட்சி செய்தி கில்ஜி பரம்பரை இப்படித்தான் உருவானது.

ஆனால், இந்த ஜலாலுதீன் சுல்தானுக்கு சொந்த வாரிசு இல்லை. எனவே, தன் அக்காள் மகனான அலாவுதீன் கில்ஜியை சொந்த மகன் போலவே வளர்த்து வந்தார். தனக்குப் பின் இந்த டில்லி அரண்மனையை ஆளப் போவதும் அலாவுதீன்தான் என்றும் கில்ஜி முடிவு செய்திருந்தார். இருந்தபோதும், சுல்தான் ஜலாலுதீன் கில்ஜியின் மனைவிக்கு அலாவுதீன்மீது அவ்வளவாக நம்பிக்கை இல்லை. அலாவுதீனின் சில நடவடிக்கைகளைக் கவனித்து வந்த அவர், தன் கணவனுக்கு அலாவுதீனால் ஆபத்து வரும் என்றஞ்சி, இதைப் பற்றி பல தடவை தன் கணவரிடம் சொல்லி இருக்கிறார்.



“என்ன பேசுகிறாய் நீ. என் மார்பிலும் தோளிலும் போட்டு சீராட்டி வளர்த்த என் அலாவுதீன் எனக்கு துரோ-கம் இழைப்பான் என்று நான் கனவி-லும் நினைக்கவில்லை. வேறு செய்தி இருந்தால் கூறு இல்லையேல் போய் வேறு வேலையைப் பாரு” என்று சற்று சீற்றத்துடன் கூறிய சுல்தானிடம் மறுமொழி கூற வகையின்றி “பெருமானே நீ விட்ட வழி எதுவோ, அதுவே அமையட்டும், யாஹ் அல்லா” என்று தனக்கு மட்டும் அல்ல.., நாட்டுக்கும் த-லைவனான சுல்தான் முன் சொல்லிவிட்டு மெல்ல நகர்ந்தார் அவரின் மனைவி.

வெற்றிக்கு மேல் வெற்றிபெற்று தன் காலடியில் ஏராளமான பகுதிக-ளைக் குவித்துக் கொண்டிருந்த அலாவுதீனை, கூடிய விரைவில் அரசக் கட்டிலில் அமர்த்திவிட்டு தான் ஓய்வெடுக்க எண்ணி இருந்தார் ஜலாலுதீன் கில்ஜி.

அந்த நேரத்தில் இந்தியாவின் தென்பகுதிமீது படைநடத்தி, வெற்றிக் கொடி நாட்டிவிட்டு தன் படையுடன் புதுடில்லியை நோக்கி திரும்பிக் கொண்டிருந்த அல-ாவுதீன் கில்ஜியை வரவேற்க ஜலாலுதீன் புதுடில்லி அரண்மனையில் தயாராக இருந்தார்.

ஆனால், தேவை இல்லாமல் புது டில்லி சுல்தானக அரண்மனைக்கு வெகுஅருகில் யமுனை நதியோ-ரம் கூடாரம் அமைத்து ஓய்வு என்ற பெயரில் இரவில் முகாமிட அலா-வுதீன் திட்டமிட்டிருப்பதை அறிந்து, ஒன்றும் புரியாமல் அே-தசமயம் குறிப்பிடத்தக்க வெற்றியுடன் திரும்பும் தன் மருமகனையும் எதிர்கால பாது‘ ாவையும் வரவேற்க வேண்டுமே என்ற முனைப்பிலும் இவரே, அந்த முகாம் நோக்கிச் சென்றார்.

யமுனை நதி வழியே படகி-ல் சென்று, அலாவுதீனும் படையினரும் முகாமிட்டிருந்த இடத்தை அடைந்தபின் ஆற்றிலிருந்து தரையில் இறங்கியதுமே அல-ாவுதீன் கில்ஜியை நோக்கி தன் இரு கரங்களையும் நீட்டிய வண்ணம் “என் அல-ாவுதீன், என் அலாவுதீன்” என்று உணர்ச்சிப் பெருக்குடன் அழைத்த வண்ணமாக முன்னேறினார் ஜலாலுதீன் கில்ஜி.

குரலைக் கேட்டு முகாமிற்கு வெளியே வந்த அலாவுதீன், நின்ற இடத்திலேயே தன் தாய்மாமாவைப் பார்த்து ஒரு வித நமட்டுச் சிரிப்புடன் நின்றிருந்தான்.

அப்போது, தன் உத்தரவிற்காகக் காத்திருந்த ஒரு சிப்பாயைப் பார்த்து கண்ணசைத்தான் அலாவுதீன். ஆற்றங்கரையில் மொகலாய சாம்ராஜிய மன்னன் ஜலாலுதீன் கில்ஜியை வரவேற்றபின் அவரின் வலப்புறத்தில் சற்று பின்னால் மரியாதைக்காக வளேந்தி வருபவனைப் போல நடித்த அந்த வீரன், திடீரென்று ஜலாலுதீனின் வயிற்றில் வாளைப் பாய்ச்சினான். சுதாரித்த சுல்தான், இமைப்பொழுதில் பின்னால் சாய்ந்ததால், அந்தச் சிப்பாயின் வாள், ஜலாலுதீன் வயிற்றை வெளிப்புறத்தில் இலேசாக மட்டுமே கீறியது.

நிலைகுலைந்த சுல்தான் ஜலாலுதீன் கில்ஜி, அப்படியே பின்புறமாக சரிந்துவிட்டார். நிலை-மையை இமைப் பொழுதில் ஊகித்த சுல்தான் “ஏ துரோகி அலாவுதீன்” என்று கர்ஜனைப் புரிந்தார். அடுத்து அவர் வாய் திறப்பதற்குள், அலா-வுதீனைக் கண்டு மிரண்டுபோன அந்தச் சிப்பாய் இந்த முறை வாளை சுல்தான் ஜலாலுதீனின் கழுத்தில் ஆவேசமாகச் செலுத்தினான். அலாவுதீனைப் பொருத்தமட்டில், வாள் வீச்சு தப்பவேக் கூடாது. அப்படித் தப்பினால், சம்பந்தப்பட்ட சிப்பாயின் தலை அலாவுதீனின் வாள் வீச்சிலிருந்து தப்ப முடியாது.

*இனி அடுத்து என்ன?*
*அடுத்த சுல்தான் அலாவுதீன்தான்!*

*இந்த யமுனை நிதியோர அரசப் படுகொலை இடம்பெற்ற நாள் ஜூலை 20 ஆண்டுதான் 1296.*

*அலாவுதீன் கில்ஜியிடமும் ஒற்றர் படை இருந்தது. அதன் மூலம் கூடிய விரைவில் டில்லி பாது‘ா பட்டம் தனக்கு வர இருப்பதை அறிந்த பின்னும் ஏன் இந்த அவசரம்? எதற்காக இந்தப் படுகொலை?? ஏன் இந்த நம்பிக்கைத் துரோகம்???*



பதவி வெறி.. .!.
அதுவன்றி வேறெதுவாக இருக்க முடியும்?

வரலாற்றுச் சம்பவங்களைப் பதிவு செய்துள்ள ஆசிரியர்கள், உலக அளவில் எத்தனையோ வஞ்சக - துரோக நிகழ்ச்சிகளைப் பட்டியல் இட்டும் கருத்து தெரிவித்தும் உள்ளனர். அதேே-வளை, ஜலாலுதீன் கில்ஜி மரணத்தைக் குறித்து, “அல-ாவுதீன் புரிந்த துரோகம் உச்சமானதும் வெறுக்கத்தக்கதும் ஆகும்” என பதிவு செய்துள்ளனர்.

அப்படிப்பட்ட வரலாற்று ஆசிரியர்களில் ஒருவர்கூட, துரோ-னனின் வஞ்சகத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. ஒருவேளை, புனைகதை என்பதால் விட்டுவிட்டனர் போலும்!

என்ன இருந்தாலும் மொத்தத்தில் தமிழ்த் துரோகமும் ஆரிய மேலாதிக்கமும் ஊடகத்தில் நிலவித்தான் வருகின்றன.

**நக்கீரன்** - Nakkeeran 013-244 36 24



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 956



## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்
### முல்லைத்தீவு

**"நல்லதைச் சொல்லென்றும் நல்லதைச் செய்யென்றும்**
**நயம்படச் சொல்லுந் தாயே**
**நஞ்செண்ணங் கொண்டு இச்சையாய் அலைவாரை**
**நசுக்கிடும் அன்னை நீயே**
**பொல்லாத செயலினைப் பொடிப் பொடியாக்கிடும்**
**பொன்சுடர் தீபம் நீயே**
**புகழுடை வாழ்விற்குப் பொன்முடி சூட்டியே**
**பூத்தூவி வாழ்த்துவாயே."**

ஆரம்பகாலம்முதல் திராவிட மக்கள் மத்தியில், பெண்தெய்வ வழிபாடு வேரூன்றிக் காணப்பட்டது. மரபுவழியாகப் பெண்ணைத் தெய்வமாகவும், தெய்வத்தைப் பெண்ணாகவும் போற்றியுள்ளனர். சிந்துவெளி நாகரிகம் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ள மொஉறஞ்சதாரோ, உறராப்பா ஆகிய இடங்களிலே கண்டெக்கப்பட்ட முத்திரைகளில், பெண் வடிவங்கள் பதித்த முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டன. பண்டைய மக்கள் தமக்கு வளங்களை அள்ளிக்கொடுக்கும் பூமியைப் போற்றித் தரைப்பெண்ணாக வழிபட்டுள்ளனர். திராவிடப் பண்பாடும், ஆரி-யப் பண்பாடும் கலந்து உருவாகிய இந்துசமயத்திலும், பெண் தெய்வ வழிபாடு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. ஈழத்தில், பெண்தெய்வவழிபாட்டிலும் இருவேறு விதமான வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன. ஆகம வழிபாட்டு முறைதழுவிய சாக்தம், சக்தியை முழுமுதற் கடவுளாகக் கொண்டு காணப்படுகின்றது. ஆனால், சிவாகம முறை தழுவாது, தமது விருப்பப்படி பூசை செய்து வழிபடும் ஆன்மார்த்த பூசை முறையும் பெண் தெய்வ வழிபாட்டில் பிரபலம் பெற்ற வழிபாட்டு முறையாகக் காணப்படுகின்றது. இதனைக் கிராமிய வழிபாட்டு முறையெனவும் கூறுவர். ஆரி-யரின் பண்பாடும் ஆதிக்கமும், திராவிட வழிபாட்டு முறையில் ஊடுருவு முன்னர், ஈழத்தில், ஆன்மார்த்த வழிபாடு மிகவும் பிரபல்யம் பெற்றுக் காணப்பட்டுள்ளது.


ஆகமங்களை அடிப்படையாகக் கொண்ட வழிபாட்டு முறையில் சரி-யை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் சாதாரண மக்கள் சரியை, கிரியை ஆகிய நெறியில் வழிபடுவர். யோகநிலையிலுள்ளோர், உள்ளத்தை ஒருநிலைப்படுத்தி, உள்ளத்திலேயே ஆண்டவன் இருக்கின்றான் என்ற உண்மைநிலையை உணர்ந்து யோகநிலையில் நிற்பர், ஞானநிலையிலுள்ளோர் இறைவனோடு இரண்டறக் கலந்து, பரிபக்குவ நி-லையை எய்துவர். தாம்விரும்பிய இடத்தில் இறைவனை ஏதாவதொரு வடிவத்தில் நிறுவி, தாமே தீபமேற்றி, விளக்கெரித்துப் பூசை வழிபாடுகளைச் செய்து ஆத்மார்த்தமாக வழிபடுவர். ஆகமமுறை தழுவிய வழிபாடு பரார்த்த வழிபாடாகக் காணப்படும்பொழுது, பின்னையது ஆன்மார்த்த வழிபாடாகக் காணப்படுகின்றது.

ஆன்மார்த்த வழிபாடாகக் காணப்படும் கிராமிய வழிபாட்டு முறை-யே, ஆரம்ப காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. வாழும் சூழ்நிலைக்கேற்ப வழிபாட்டு முறைகளை ஏற்படுத்திக் கொள்வது எல்லாச் சமூகங்களிடையேயும் காணப்படுகின்றது. பண்டைக் காலத்திலே, தாயை வழிபடும் மரபு பெருவழக்காகக் காணப்பட்டது. இம்மரபு பின்னர் அம்மன் வழிபாடாகச் சமூகத்திலே தோற்றம் பெற்றது. சங்க காலந்தொட்டு தமிழ்மக்கள் வீரவழிபாட்டு முறையையும் பேணியுள்ளனர். கண்ணகை, நாச்சிமார் போன்ற வழிபாட்டுமுறைகள் வீரவழிபாடா-கக் காணப்பட்டன. போத்துக்கேயர், ஒல்லாந்தர் போன்ற பிறநாட்டவர் ஈழத்திலுள்ள சைவக் கோவில்களை இடித்தழித்தபோது சைவசமயிகள், தமது வீடுகளிலேயே சிறிய கொட்டில்களை அமைத்து, விளக்கு வைத்துக் கற்பூரங்காட்டி வணங்கி வந்துள்ளனர். இம்முறையும் பிற்காலத்தில் கிராமிய தெய்வ வழிபாட்டு முறைக்கு வழிகோலியதெனலாம்.

கிராமிய பெண் வணக்கமுறையில் கண்ணகி, சீதை, திரௌபதை, நாச்சிமார் ஆகியோரை வழிபடும் வழக்கு, ஈழமெங்கும் காணப்படுகின்றது. இத்தெய்வங்கள் பெருங் கடவுளராகப் போற்றப்படுவதோடு, மிகப் பெரியகோவில்களையும் அமைத்து வழிபாடியற்றி வருகின்றர். இக் கோவில்களுள் வன்னிப்பிரதேசத்தில் அமைந்துள்ள, வற்றாப்பளைக் கண்ணகிஅம்மன் கோவில் பழமைமிக்கதாகக் காணப்படுகின்றது. சோழ நாட்டிலே தோன்றி, பாண்டிநாட்டிலே, கணவனைக் கொலை செய்த பாண்டியமன்னவனைப் பழிவாங்கி, சேரநாட்டிலே, சேரன் செங்குட்டுவனால் பத்தினி என்று போற்றப்பட்டு, விழா எடுக்கப்பட்ட, கண்ணகியைத் தெய்வமாகப் போற்றும் வழிபாடு, ஈழத்தின் பல பிரதேசங்களிலும், பிரபல்யம் பெற்ற வழிபாடாகக் காணப்படுகின்றது.

சிலப்பதிகாரப்பகுப்பினுள் அடங்காது தனித்திருப்பது, உரைபெறு கட்டுரை எனும் பகுதியாகும். கோவலன் கொலைக்குப் பின்னர், கண்ணகி பத்தினித் தெய்வமாக உயர் நிலை பெற்றதையும், மன்னர்கள் கண்ணகிக்குக் கோவில் அமைத்து வழிபட்டதையும் கூறுவதோடு, கண்ணகி அருளால் இம்மன்னர்கள் ஆண்ட நாடுகளும் வளமை பெற்றன என்பதை உரைபெறு கட்டுரை விளக்குகின்றது. இவ்வாறான மன்னர்களுள் இலங்கைக் கயவாகு மன்னனும் குறிப்பிடத்தக்கவர். கி.பி 2ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த இம் மன்னனால் கண்ணகி வழிபாடு, இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது. இதனை ஈழத்து வரலாற்று நூல்களான இராஜவலியும், இராஜரத்னாகரவும், கஜபாகத்தாவ என்னும் பத்தினி வரலாறு கூறும் சிங்கள நூலும் குறிப்பிட்டுள்ளன.

தொடரும்...

கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை. வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# அன்பின் தொனி – 617

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை**
**நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார்**

கர்த்தரைத் துதியுங்கள், நம்முடைய தேவனைக் கீர்த்தனம்பண்ணுகிறது நல்லது, துதித்தலே இன்பமும் ஏற்றது மாயி ருக்கிறது. கர்த்தர் எருசலேமைக் கட்டுகிறார், துரத்துண்ட இஸ்ரவேலரைக் கூட்டிச் சேர்க்கிறார். இருதயம் நொறுங் குண்டவர் களைக் குணமாக்குகிறார், அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார். அவர் நட்சத்திரங்களின் இலக்கத்தை எண்ணி, அவைகளுக்கெல்லாம் பேரிட்டு அழைக்கிறார். நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாயி ருக்கிறார், அவருடைய அறிவு அளவில்லாதது. கர்த்தர் சாந்தகுணமுள்ளவர்களை உயர்த்துகிறார், துன்மார்க்கரைத் தரைமட்டும் தாழ்த்துகிறார். கர்த்தரைத் துதியுடன் பாடிக் கொண்டாடுங்கள், நம்முடைய தேவனைச் சுரமண்டலத் தால் கீர்த்தனம் பண்ணுங்கள். அவர் வானத்தை மேகங்களால் மூடி, பூமிக்கு மழையை ஆயத்தப்படுத்தி, மலைக ளில் புல்லை முளைப் பிக்கிறார். அவர் மிருகஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங்கொடுக் கிறார். அவர் குதிரையின் பலத்தில் விருப்பமாயிரார், வீரனுடைய கால்களில் பிரியப்படார். தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர் கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார். எருசலேமே, கர்த்தரை ஸ்தோத்திரி, சீயோனே, உன் தேவனைத் துதி. அவர் உன் வாசல்களின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தி, உன்னிடத்திலுள்ள உன் பிள் ளைகளை ஆசீர்வதிக்கிறார். அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கி, உசிதமான கோதுமையி னால் உன்னைத் திருப்தியாக்குகிறார். அவர் தமது வார்த்தையைப் பூமியிலே அனுப்புகிறார், அவருடைய சொல் மகா தீவிரமாய்ச் செல்லுகிறது. பஞ்சைப் போல் உறைந்த மழையைத் தருகிறார், சாம்பலைப்போல உறைந்த பனி யைத் தூவுகிறார். அவர் தமது கல்மழையைத் துணிக்கைகளாக அனுப்புகிறார், அவருடைய குளிருக்கு முன்பாக நிற்ப வன் யார்? அவர் தமது வார்த்தையை அனுப்பி, அவைகளை உருகப்பண்ணுகிறார், தமது காற்றை வீசும்படி செய்ய, தண்ணீர்கள் ஓடும். யாக்கோபுக்குத் தம்முடைய வசனங்களையும், இஸ்ரவேலுக்குத் தமது பிரமாணங்களையும் தமது நியாயங்களையும் அறிவிக்கிறார். அவர் வேறே எந்த ஜாதிக்கும் இப்படிச் செய்ததில்லை, அவருடைய நியாயங்களை அறியாமற்போகிறார்கள். அல்லேலூ யா.- *சங்கீதம் 147: 1-20*

**பூமியிலுள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள்**

அல்லேலூயா, வானங்களில் உள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள் உன்னதங்களில் அவரைத் துதியுங்கள். அவரு டைய தூதர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள், அவருடைய சேனைகளே, நீங்கள் யாவரும் அவரைத் துதியு ங்கள். சூரிய சந்திரரே, அவரைத் துதியுங்கள், பிரகாசமுள்ள சகல நட்சத்திரங்களே, அவரைத் துதியுங்கள். வானாதி வானங்களே, அவரைத் துதியுங்கள், ஆகாயமண்டலத்தின் மேலுள்ள தண்ணீர்களே, அவரைத் துதியுங்கள். அவைகள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவது, அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் அவைகளை என்றை க்குமுள்ள சதாகாலங்களிலும் நிலைக்கும்படி செய்தார், மாறாத பிரமாணத்தை அவைகளுக்கு நியமித்தார். பூமியிலு ள்ளவைகளே, கர்த்தரைத் துதியுங்கள், மகாமச்சங்களே, சகல ஆழங்களே, அக்கினியே, கல்மழையே, உறைந்த மழையே, மூடுபனியே, அவர் சொற்படி செய்யும் பெருங்காற்றே, மலைகளே, சகல மேடுகளே, கனி மரங்களே, சகல கேதுருக்களே, காட்டுமிருகங்களே, சகல நாட்டு மிருகங்களே, ஊரும் பிராணிகளே, இறகுள்ள பறவைகளே, பூமியின் ராஜாக்களே, சகல ஜனங்களே, பிரபுக்களே, பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகளே, வாலிபரே, கன்னிகைகளே, முதிர் வயதுள்ளவர்களே, பிள்ளைகளே, கர்த்தரைத் துதியுங்கள். அவர்கள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவர்கள், அவருடைய நாமம் மாத்திரம் உயர்ந்தது, அவருடைய மகிமை பூமிக்கும் வானத்திற்கும் மேலானது. அவர் தம்முடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும், தம்மைச் சேர்ந்த ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரருக்கும் கொண்டாட்டமாக, தம்முடைய ஜனத்திற்கு ஒரு கொம்பை உயர்த்தினார். அல்லேலூயா.- *சங்கீதம் 148: 1-14*

**கர்த்தர் தம்முடைய ஜனத்தின் மேல் பிரியம் வைக்கிறார்**

அல்லேலூயா, கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள், பரிசுத்தவான்களின் சபையிலே அவருடைய துதி விளங்குவ தாக. இஸ்ரவேல் தன்னை உண்டாக்கினவரில் மகிழவும், சீயோன் குமாரர் தங்கள் ராஜாவில் களிகூரவுங்கடவர்கள். அவருடைய நாமத்தை நடனத்தோடே துதித்து, தம்புரினாலும் கின்னரத்தினாலும் அவரைக் கீர்த்தனம்பண்ணக் கடவர்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தின் மேல் பிரியம் வைக்கிறார், சாந்தகுணமுள்ளவர்களை இரட்சிப்பினால் அலங்கரிப்பார். பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து, தங்கள் படுக்கைகளின்மேல் கெம்பீரிப்பார்கள். ஜாதி களிடத்தில் பழிவாங்கவும், ஜனங்களைத் தண்டிக்கவும், அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர்களு டைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள்பேரில் செலுத்தவும், அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும். இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும். அல்லேலூயா.- சங்கீதம் *149: 1-9*

**சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக**

அல்லேலூயா, தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள்ளூ அவருடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப்பார்த்து அவரைத் துதியுங்கள். அவருடைய வல்லமையுள்ள கிரியைகளுக்காக அவரைத் துதியுங்கள், மாட்சிமை பொருந்திய அவருடைய மகத்துவத்திற்காக அவரைத் துதியுங்கள். எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள், வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள். தம்புரோடும் நடனத்தோடும் அவரைத் துதியுங்கள், யாழோடும் தீங்குழலோடும் அவரைத் துதியுங்கள். ஓசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள், பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள். சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. அல்லேலூயா.- சங்கீதம் *150: 1-6*

*தொடரும்*



# தூத்துக்குடி துறைமுகத்திற்கு வந்த நீர்மூழ்கிக்கப்பல்



தூத்துக்குடி துறைமுகத்தில் உள்ள ஐ.என்.எஸ். கட்டபொம்மன் கடற்படைக்கான கப்பல் தளத்தில் நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று நிறுத்தப் பட்டுள்ளது.

சமீப காலமாக வங்காளவிரிகுடா பெருங்கடலில் இலங்கையையொட்டி சீனா தனது கடற்படை பலத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகளில் இறங்கியுள்ளதாக தகவல்கள் கசிந்தன. இது சீனா - இந்தியா போர் பதற்றத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கையாக பார்க்கப்பட்டது.

இதையொட்டி, இந்தியத் தரப்பிலும் ராணுவ வலிமையை அதிகரிக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, நாட்டின் அனைத்து எல்லைகளிலும் பீரங்கிகள், அதிநவீன போர் விமானங்கள், ஹெலிகாப்டர்கள், விமானம் தாங்கிக் கப்பல்கள் உள்ளிட்டவை தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இதில் ஒருபகுதியாக இந்திய கடற்படைக்குச் சொந்தமான அதிநவீன நீர்மூழ்கிக் கப்பல் "சிந்து'ரஸ்ட்ரா" தூத்துக்குடி துறைமுகத்தில் உள்ள ஐ.என்.எஸ். கட்டபொம்மன் கடற்படைக்கான கப்பல் தளத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

கப்பலில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக்கோளாறை சரிசெய்யவும், பெட்ரோல், டீசல் மற்றும் அடிப்படைத் தேவையான தண்ணீர் நிரப்புவதற்காகவும் நீர்மூழ்கி கப்பல் தூத்துக்குடி கப்பல்தளத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், நடுக்கடலில் போர் ஒத்திகைக்காகவும் இந்த "சிந்துஷாஸ்ட்ரா" நீர்மூழ்கிக் கப்பல் வந்திருக்கலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த கப்பல் ஒரு வார காலம் தூத்துக்குடி துறைமுகத்தில் நிறுத்தப்பட்டு பணிகளை மேற்கொள்ளும் என்று கூறப்படுகிறது. தூத்துக்குடி துறைமுகத்தில் நீர்மூழ்கிக் கப்பல் நிலை நிறுத்தப்பட்டுள்ள தகவல் பரபரப்பை உண்டாக்கியுள்ளது.

**- மணிராஜ், திருநெல்வேலி**

## வீணாவின் கவிக்கணை

கூடி வாழ்ந்தால்
கோடி நன்மை என்பது
பழங்கதையாய் போச்சு,
கூடி நின்றால் கொரோனா
தொற்றும் என்பதே இங்கு
புதுமொழி ஆகியாச்சு,
அடுத்தவீட்டில் இருப்பவர்
கூட தெரிந்திடாத உனக்கு,
இன்று ஒரு முகத்தையேனும்
பார்க்கும் வாய்ப்பு
கிடைக்குமோன்னு இருக்கு,
இருப்பதை விட்டு, பறப்பதை
தேடி ஓடிய உனக்கு,
இன்று இருப்பதுமில்லை,
பறப்பதுமில்லை, என்று
ஆனதும் ஏன் சொல்லு?
இருக்கும் போது அருமை
தெரியாத உனக்கு, இழந்த
பின்பு நீ அழுது
வடிவதும் எதற்கு?


# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0% வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்.எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்.எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:

**வசந்தி சிவராஜா - 416-616-3077**

- மொன்ரியால் வீணைமைந்தன் எழுதுகின்றார்



# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும்

#55

**"தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே வேளாண்மை என்னும் செருக்கு", - திருக்குறள்.**

அதாவது, உலகத்தில் சிறந்த காரியங்கள் நடந்தேறுவதெல்லாம் விடாமுயற்சியால் தான். உலகத்திற்கு உபகாரமான காரியங்களை செய்தவர்களுடைய புகழெல்லாம் விடாமுயற்சி என்ற பெரும் குணத்தில் அடங்கியதே ஆகும்.

இந்த விடாமுயற்சியும் - தன்னம்பிக்கையும் - தொழில் பக்தியுமே சிவாஜிகணேசன் என்னும் தமிழ்நாட்டில் அவதரித்த இந்திய கலைஞனை உலக நாடுகளில் விஸ்வரூபமாக காண வைத்தது என்றால் அதில் மிகையில்லை.

சுதந்திர வீர முழக்கத்தை முதன்முதலாக எழுப்பிய வீரபாண்டிய கட்டபொம்மனை திரை ஓவியமாக சித்தரித்த பெருமை சிவாஜி ஐயா ஒருவருக்கேயுரியதாகும். கப்பலோட்டிய தமிழனையும், கொடிகாத்தகுமரனையும், பகத்சிங்கையும், பாரதியையும் நம் கண்முன்னே கொண்டுவந்து காண வைத்த பெருமையும் அவருக்கேயாகும்.

தேசிய அளவில் சுதந்திர வீரத் தியாகிகளை மறக்காமல் நினைவு படுத்தி விருதுகள் வழங்கும் ஒன்றிய அரசு இன்றளவும் கட்டபொம்மன் கணேசரை அங்கீகாரம் செய்யாதது என் போன்றோருக்கு மிகுந்த வேதனையளிப்பதாகும்.

ஆனால், 1959 இல் வெளிவந்த "வீரபாண்டிய கட்டபொம்மன்" திரைப்படம் 1960ல் ஆபிரிக்க ஆசிய திரைப்பட விழாவிற்கு தெரிவாகி எகிப்து நாட்டு தலைநகரான கெய்ரோ நகர் விழாவில் திரையிடப்பட்ட வேளை சிவாஜி ஐயாவின் கலையுலக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்க வேண்டிய நிகழ்வாகும்.
கெய்ரோ நகரில் சிவாஜி குழுவினருடன் பயணம் செய்த பத்மினி, ராகினி, தயாரிப்பாளர் பிஆர் பந்துலு யாவருக்கும் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. அதன்பின் அங்கு என்ன நடந்தது என்பதை சிவாஜி ஐயாவின் வாய்மொழியாகவே கேட்போம். "வீரபாண்டிய கட்டபொம்மன்" திரைப்படம் ஒளிபரப்பாகும் நேரம் வந்தது, நானும் மக்களுடன் உட்கார்ந்து இருக்கிறேன். நான் வெள்ளைக்காரனை எதிர்த்து அவமானப்படுத்தி கதிரையை இழுத்துப் உட்காரும் பொழுது தமிழ்நாட்டு மக்கள் கைதட்டி பாராட்டினார்களோ, அதுபோல் எகிப்திலும் கைதட்டினார்கள். அவர்களுக்கு தமிழ் தெரியாது. இருந்தாலும் உணர்ச்சிவசப்பட்டு சத்தம்போட்டு கைதட்டினார்கள். ஏனென்றால் அவர்களும் வெள்ளைக்கார ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றவர்கள் தான். நாமும் வெள்ளையனை பற்றி கூறும் போது, அவர்கள் பட்ட துன்பம் அவர்களின் நினைவுக்கு வருகிறது.

வீரபாண்டிய கட்டபொம்மன் படத்திற்கு பெஸ்ட் ஹீரோ, பெஸ்ட் மியூசிக், பெஸ்ட் டான்ஸ், பெஸ்ட் ஸ்டோரி அவார்டுகள் கிடைத்தன. என்னை மேடைக்கு அழைத்தார்கள். அவர்கள் படத்தில் கட்டபொம்மனைப் பார்த்து, நான் 7 அல்லது 8 அடி உயரம் கொண்டவன் என்று நினைத்தார்கள் போலும். ஆனால், நான் ஐந்து அடி உயரம் கொண்டவன். சின்ன பையன் போல அவர்களுக்கு தெரிந்தேன். ஆரவாரம் செய்து எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செய்தார்கள். அவ்வளவு இன்ப அதிர்ச்சி. இவ்வளவு பெரிய பெருமை கிடைக்குமென்று நான் நினைக்கவில்லை. எவ்வளவு ஆர்டிஸ்டெல்லாம் வந்திருந்தார்கள். அவர்களுள் எனக்கு தான் பெஸ்ட் ஆக்டர் அவார்டு கிடைத்தது என்பது ஆண்டவன் அருள் அல்லவா! இது எனக்கு மட்டும் கிடைத்த விருது அல்ல. நம் நாட்டிற்கே கிடைத்த பெருமை அல்லவா! இதுபோல் ஒரு சில உயர்ந்த கௌரவர்களை, நம் நாட்டிற்காக சேர்த்து தந்ததில் எனக்கு எப்போதும் மகிழ்ச்சியும் உண்டு. ஆனால் சின்ன வருத்தம். விழாவில் எகிப்து (அப்போதைய) அதிபர் நாசர் கலந்துகொள்ளவில்லை. அரசு விஜயமாக சிரியா நாட்டுக்குச் சென்றிருந்தார். விழா முடிந்ததும் அவருடைய மாளிகைக்குச் சென்று அதிபரின் மனைவியைச் சந்தித்தேன். கணவர் சமூகமளிக்க முடியாததையிட்டு மன்னிப்பு கோரினார். மன்னிப்பு வேண்டாம் அம்மா. எனக்கு ஒரு உதவி செய்யுங்கள். இந்தியாவுக்கு அதிபர் நாசர் வரும் வேளை, என்னுடைய விருந்தாளியாக கொஞ்ச நேரமாவது எனது இல்லத்துக்கு வருவதற்கு உதவுங்கள் என்றேன். ஆண்டவன் அருளால் நாசர் இந்தியா வந்திருக்கிறார் என்பதை அறிந்து, நமது பிரதம மந்திரியாகவிருந்த நேருஜி உடன் தொடர்பு கொண்டேன். அவர் தான் என்னைக் காணும் பொழுதெல்லாம் "ஹலோ ஆக்டர், ஹவ் ஆர் யூ? வட் கான் ஐ டூ பார் யு" என்று செல்லமாக முதுகில் தட்டுவார். (மிஸ்டர் நாசர் மெட்ராஸ் வரும்பொழுது கொஞ்ச நேரம் என்னுடனும், என் குடும்பத்துடனும் விருந்தாளியாகக் கலந்து கொள்ளவேண்டும்" என்று அவரிடம் வேண்டினேன். நேருஜி அவர்கள் எனது விருப்பத்தை நிறைவேற்றி இரண்டு மணி நேரம் அனுமதி வழங்கினார். சென்னைக்கு அதிபர் நாசர் வந்தார். நமது அமைச்சர் பெருமகன் சி. சுப்பிரமணியம் தலைமையில் எல்லா நடிக,நடிகைகளையும் அழைத்து பல பிரமுகர்கள் மத்தியில் பெரிய வரவேற்பு வழங்கினேன். அப்போதைய மதிப்பில் மூன்று லட்ச ரூபாய் பெறுமதியில் வேலைப்பாடுகளுடன் "திருக்குறள்" வாசகம் பொறிக்கப்பட்ட வெள்ளியிலான தட்டில் தங்க எழுத்துக்கள் அடங்கிய நினைவுப்பரிசு வழங்கினேன்.



*with Hollywood Actors...*
***Standing :** James Garner, Jack Lemmon, Charlton Heston*
***Sitting :** George Chandler, Sivaji Ganesan, Walter Pidgeon*

வீரபாண்டிய கட்டபொம்மனைக் கௌரவித்ததற்காக நம் நாட்டின் சார்பிலும், என் சார்பிலும் அவருக்கு நன்றியை தெரிவித்து அனுமதிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க மேலும் ஒன்றரை மணி நேரம் கூடுதலாக எங்களை மகிழ்வித்து பெருமைப்படுத்திய எகிப்து அதிபர் நாசர் என்னால் என்றும் மறக்க முடியாத தலைவரானார்.

வெளிநாடுகளில் என்னை கௌரவம் செய்யும் பொழுது ஒரு தமிழனை அதுவும் இந்திய குடிமகனைக் கவுரவம் செய்வதாகவே நான் பெருமை கொள்வேன். இந்திய கலைஞனை ராஜ மரியாதை செய்து கௌரவம் செய்த அப்போதைய அமெரிக்க அதிபர் ஜோன் எவ் கெனடி (1962) அரசு நிர்வாகம் இந்திய நாட்டின் கௌரவ கலைத் தூதுவராக என்னை அழைத்து பெருமைப்படுத்திய நிகழ்வையும் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத வரலாற்றுப் பதிவாகும். சிவாஜி ஐயாவின் அமெரிக்கப் பயணம் பற்றி எனக்கு தெரிந்த தகவல்களை நானே சொல்கிறேன். அதற்கு முன் சிவாஜி ஐயா அவர்களுக்கும் யானைகளுக்கும் உள்ள உறவு பற்றி சொல்லித்தான் அமெரிக்க பயணம் பற்றி கூற வேண்டும். "அன்னை இல்லம்" கணேசருக்கும் ஆனைமுக கணேசருக்கும் உள்ள தெய்வீக உறவு அது! ஒரு சமயம் "காஞ்சி பெரியவாள்" சிவாஜி ஐயாவை மடத்திற்கு வரும்படி அழைத்திருந்தார். தாய், தந்தை, மனைவியுடன் பெரியவாளைப் பார்க்க சங்கர மடத்திற்குச் சென்றார். சிவாஜி குடும்பம் பெரியவா வரவுக்காகக் காத்திருந்தார்கள். அப்போது அங்கு திடீரென மின் விளக்குகள் அணைந்து விட்டன. பெரியவா குத்து விளக்கு ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தார். மெல்ல கீழே உட்கார்ந்து கையை புருவத்தின் மேல் வைத்து எல்லோரையும் பார்த்தார்.

"நீதானே சிவாஜி கணேசன்?", என்றார். "ஆமாங்கய்யா! நான் தான்" சொல்லிக் கொண்டே காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினார். அப்போது பெரியவர் சிவாஜியை பார்த்து, உங்களைப் பார்த்ததில் மிகவும் சந்தோஷம். திருப்பதி சென்றிருந்தேன். அங்கு ஒரு யானை எனக்கு மாலை போட்டது. யானை நன்றாக இருக்கிறதே! யாருடையது? என்றேன். "சிவாஜி கணேசன்" கொடுத்தது என்றார்கள். தஞ்சை புன்னைநல்லூர் மாரியம்மன் கோவில் சென்றிருந்தேன். அங்கேயும் யானை கையில் மாலையைக் கொடுத்து அணிவித்தார்கள். இது யாருடையது? என்றேன். "சிவாஜி கணேசன் கொடுத்தது" என்றார்கள். திருச்சி திருவானைக்கா கோயிலுக்குப் போனேன். அங்கும் யானை மாலை போட்டது. அழகாக இருக்கிறது. யானை யாருடையது என்றேன்? அதுவும் சிவாஜி கணேசன் கொடுத்தது என்றார்கள்!



நாட்டில் பணக்காரர்கள் பலர் பப்ளிசிட்டிக்காக சில சமயம் கோயில்களுக்கு பணம் தான் நன்கொடையாக கொடுப்பார்கள். ஆனால் யானை கொடுப்பதற்கு பெரிய மனசு வேண்டும். அந்த மனசு உனக்கு இருக்கிறது. ஆகையால் உன்னைப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள். அவர்களுக்காக நான் பகவானைப் பிரார்த்தனை செய்கிறேன்" என்றார். காஞ்சிப்பெரியவாள்.

அதே பெரிய மனசுடன், அமெரிக்க நண்பர் ஒருவர் அமெரிக்கக் குழந்தைகள் விளையாடுவதற்காக ஏதாவது கொடுங்கள்" என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க INDIANA POLIS' என்ற அமெரிக்க நகருக்கு சிவாஜி ஐயா ஒரு யானை குட்டியைப் பரிசாக அனுப்பி வைத்தார். "யாரோ ஒரு இந்தியன் ஆக்டர், குழந்தைகளுக்கு யானை குட்டியை பரிசாக வழங்கி இருக்கிறார், என்ற செய்தி ஜனாதிபதி ஜோன் எவ் கென்னடித் தெரிய வந்ததும், அவர் யாரென்று ஜனாதிபதி கேட்டிருக்கிறார். சென்னை யு.எஸ் தூதுவராலயத்திலிருந்து சிவாஜி ஐயா பற்றிய தகவல்கள் அனுப்பப்பட்டன. தகவல் அறிந்த ஜனாதிபதி "ஏன் நமது நாட்டுக்கு அவரை அழைக்கக் கூடாது?" என்று வினவியுள்ளார். உயர் அதிகாரிகளின் முடிவின்படி VVIP அதாவது மிக மிக முக்கிய விருந்தாளி என வெள்ளை மாளிகை வரவேற்றது.

இந்தியாவிலிருந்து நடிகர் என்ற தகுதியுடன் கலைத்தூதுவராக அழைக்கப்பட்டவர்களில் நடிகர் திலகம் தான் முதன் முதலில் அமெரிக்க அரசால் அழைக்கப்பட்டவராவார். சென்னை அமெரிக்க தூதுவராலயத்தில் விசா செக்ஷனில் பணிபுரிந்த (தமிழறிந்த) "டென்னிஸ் கோப்ஸ்" என்ற அதிகாரிதான் சிவாஜி ஐயாவின் செக்ரட்ரியாக நியமித்தார்கள்.

பேரறிஞர் அண்ணாவிடம் ஒருமுறை சிவாஜி ஐயாவை ஹாலிவுட் நடிகர் மார்லன் பிராண்டோவுடன் ஒப்பிட்டுக் கேள்வி எழுப்பிய போது, தம்பி கணேசன் மார்லன் பிராண்டோ போல் நடிப்பது ஒன்றும் பிரமாதமல்ல! ஆனால் கணேசன் போல் பிராண்டோவால் நெருங்க முடியாது", என பதிலுரைத்தார்.

அப்படி புகழ்வாய்ந்த உலகப் பெரு நடிகர் மார்லன் பிராண்டோ, சார்ல்டன் ஹெஸ்டன், ஜிம் கார்னர், ஜாக் லெமன், ஜோர்ஜ் சான்ட்லர், வால்டர் பிட்ஜியன் ஆகியோர் சிவாஜி ஐயாவுக்கு ஹாலிவுட் ஆர்டிஸ்ட் கில்ட் சார்பாக பெரிய வரவேற்பு அளித்து பெருமை அடைந்தார்கள்.

ஜாக் லெமன் மனைவிக்கு இந்திய புடவை ஒன்றை நினைவுப் பரிசாக வழங்கினார் நடிகர் திலகம். சிவாஜி ஐயா நடித்துப் புகழ்பெற்ற சில படங்களின் தொகுப்பு ஹாலிவுட் கலைஞர்களுக்கு காண்பிக்கப்பட்டது. திரையில் பல்வேறு பாத்திரங்களில் தோன்றி நடிப்பவர் நமது சிவாஜி ஐயா தான் என அங்கு பலரால் நம்ப முடியாமல் இருந்தது. அமெரிக்க நகரான நயாகரா சிற்றிக்கு மேயர் நமது சிவாஜி ஐயாவா? யார் தருவார் இந்த அரியாசனம்! நடிகர் திலகமே உங்களுடன் பேச வருகிறார்.

"நயாகரா சிட்டிக்கு என்னை அழைத்து வந்தார்கள். அங்கு எனக்குப் பெரிய மரியாதை செய்ய ஏற்பாடாகியிருந்தது. நான் நயகரா நுழைவாயிலுக்குச் சென்றதுமே என்னை நோக்கி மூன்று கார்கள் வந்து நின்றன.அவற்றுள் ஒரு காரில் இருந்து எனது செக்ரட்ரியும், இன்னொரு காரில் இருந்து அப்போதைய நாயகரா சிட்டி மேயரும், மூன்றாவது காரிலிருந்து முக்கிய பிரமுகர்களும் இறங்கினார்கள். என் கையில் ஒரு பூச்செண்டை கொடுத்து வரவேற்றார்கள். ஒரு பெரிய "தங்க சாவியை" (GOLDEN KEY) என்னிடம் தந்தார்கள். அந்த சாவி அரையடி நீளமிருந்தது. அதை என் கையில், அந்த மேயரே கொடுத்தார்.

மேலும் அவர், "இன்று காலை வரை தான் நான் மேயர். இப்போதிலிருந்தே நாளை காலை வரை நீங்கள் தான் நகரத்தின் ஒரு நாள் மேயர் (ONE DAY MAYOR) என்றார்! அன்று என்னை வசதியான மிகப்பெரிய வீட்டில் தங்க வைத்தார்கள். இருந்தாலும் அன்றிரவு சரியாக தூக்கம் வரவில்லை. தங்கச் சாவியை கையில் வைத்துக் கொண்டே படுத்திருந்தேன்.

மறுநாள் காலை எழுந்து உலகப்பிரசித்தி பெற்ற நயாகரா நீர்வீழ்ச்சியை சுற்றிப் பார்த்தேன். அதன் பின் எனக்கு சிறப்பான விருந்தெல்லாம் கொடுத்தார்கள். நான் அங்கிருந்து புறப்படும் போது, நகரத்தின் நுழைவாயில் அருகில் வந்து, எனக்கு மீண்டும் ஒரு பூச்செண்டு கொடுத்து, அந்த தங்கச் சாவியை என்னிடம் இருந்து வாங்கிக் கொண்டார்கள். ஞாபகார்த்தமாக அதேபோல் ஒரு சிறிய தங்க சாவியை என் கையில் கொடுத்து, தாங்கள் மீண்டும் வரவேண்டும். மீண்டும் ஒருநாள் இந்த ஊருக்கு மேயராக இருக்க வேண்டும்", என்று கூறி வாழ்த்தி, வழியனுப்பி வைத்தார்கள்.

இந்திய மக்களில் அமெரிக்கா நாட்டிலுள்ள, நயாகரா நகர மேயராக இருந்தது, இரண்டே இரண்டு இந்தியர்கள் தான். ஒருவர் எப்போதும் என்னை "ஹலோ ஆக்டர்" என்று செல்லமாக அழைக்கும் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருஜி, அடுத்தவர் ஆக்டர் சிவாஜி கணேசன் ஆகிய நான் மட்டுமே! இது எனக்கும் இந்திய தேசத்திற்கும் கிடைத்த பெருமை அல்லவா!

*(அடுத்த இதழில் இத்தொடர் நிறைவுபெறுகிறது. நன்றி. -வீணை மைந்தன்).*

*ஜூலை 21ஆம் நாள் நடிகர் திலகம் அவர்களது 20ஆம் ஆண்டு நினைவு நாள். அனைவரும் ஒன்றிணைந்து அவருக்கு கலை வணக்கம் செய்திடுவோம்!*



## ஜீவன் முக்தி (பகுதி ) 118

# வாழ்க்கையின் லட்சியம் ஞானமடைதல்

*(சென்ற வார தொடர்ச்சி)*

அவன் வருகிற அந்த எருமைமாடுதான் மெதுவாக நடக்கிற கட்டுறு மனப்பாங்கு. கட்டுறு மனப்பாங்கை ஆரம்பித்த அன்றைக்கே மரணம் ஆரம்பித்துவிட்டது. குழந்தை பிறந்த உடனேயே அம்மா சொல்லு அப்பா சொல்லு' என்று உடனேயே என்ன ஆகின்றது? பாசக் கையிறு கட்ட ஆரம்பித்துவிட்டது.

அப்படியென்றால், அன்றைக்கே எமன் என்ன செய்கிறார்? அவருடைய இடத்தில் இருந்து கிளம்பிவிட்டார். தூக்கிக்கொண்டு செல்வதற்கு, எமன் நடந்து வருவதற்கு ஆகின்ற காலம்தான், நாம் வாழும் அந்த 70 வருடம். கட்டுறு மனப்பாங்கு உச்சத்தை அடைவதுதான் மரணம்.

அழகாகப் புரிந்து கொள்ளுங்கள். மெதுமெதுவாக, மெதுமெதுவாக எமனுடைய கயிறு உங்கள் உடலில் சுற்றிக் கொண்டேதான் இருக்கிறது. சில ஜீவன்கள் கட்டுறு மன அமைப்பிலிருந்து விடுதலையாகிச் செல்கிறார்கள்.

அவர்கள் யார், கட்டுறு மனப்பாங்கு பற்றித் தெரிந்து கொண்டதினால், தன்னை அதிலிருந்து விடுபடுத்திக் கொள்கிறார்கள். குருவுடன் முடியால் சுற்றப்பட்டவர்கள் அவர்கள், சுதந்திரத்தை நோக்கிச் சென்று கொள்டே இருக்கிறார்கள். அதனால், அவரகள் வாழ்வும் சுதந்திரத்தை நோக்கிச் செல்கிறது. மற்றொரு குழு எமனை நோக்கிச் செல்கிறார்கள்.

எமனை நோக்கிச் செல்வது ஒரு குழு. சிவனை நோக்கிச் செல்வது ஒரு குழு. அவ்வளவுதான் இந்த இரண்டும்தான். வேறு ஒன்றும் கிடையாது. அந்தக் கயிறு சுற்றிக்கொண்டே இருந்ததென்றால், எமனுடைய பாசக் கயிறு சுற்றுக் கொண்டே இருக்கும்.

கட்டுறு மனப்பாங்கு நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே இருந்ததென்றால் கட்டுறு மனப்பாங்கில் இருந்து வெளியில் வந்து. கட்டுறு மன்பான்மை அழியும் ஒவ்வொரு நாளுமே ஒரு கட்டற மன்பாங்கு உங்களை விட்டு அகலும். அப்படி நீங்கள், சிவனை நோக்கிப் பிரயாணம் செய்கிறீர்கள்.

சிவனை நோக்கியா? எமனை நோக்கியா என்று நீங்கள்தான் முடிவு செய்தாக வேண்டும்.

உடலில் பாசக் கயிறு சுற்றப்பட்டருந்தால், தினந்தோறும் அந்த கட்டுறு மனப்பாங்கு அதிகமாகிக் கொண்டே போகும். எமன், சிவன், மாட்டின்மேல்தான் வருவார்கள். இரண்டு வாகனமுமே மெதுவாகத்தான் போகும். ஈஸ்வரனும் என்ன செய்கிறார்? நந்திமேல்தான் வருகிறார். எனனும் என்ன செய்கிறார்? எருமை மாட்டின்மேல்தான் வருகிறார்.

உங்களின் உடலைப் பாசக் கையிறு சுற்றிக்கொண்டே இருந்தால், ஒவ்வொரு நாளும் எமனை நோக்கிப் போக வேண்டும். சிவனுடைய ஞானச் சடை சுற்றியிருந்தால் என்ன செய்வீர்கள். ஒவ்வொரு நாளும் சுதந்திரம் ஆகிக்கொண்டே போவீர்கள். சட்டுறு மனப்பாங்கிலிருந்து வெளியில் போய்க் கொண்டே இருப்பீர்கள்.

என்றாவது ஒரு நாள் நிங்கள் சிரஞ்சீவியாகியே தீர வேண்டும்.

அருமையான கதை. மார்கண்டேயனுடைய கதை. அது ஒரு பெரிய சதியத்தை உள்ளடக்கிய கதை. கட்டுறு மனப்பாங்கு, ஞானமடைவது ஆகிய இரண்டு சத்தியத்தையும் மிக அழகாக மார்க்கண்டேயனுடைய கதை விளக்கும்

மார்க்கண்டேயனுடைய தாய், தந்தையர்கள் பெரிய ரிஷிகள், அவர்களுக்குக் குழந்தை வேண்டுமென்று இறைவனை நோக்கித் தவம் இருந்தார்கள்.

அந்தக் காலத்தில் குழந்தைகள் தவத்தின் மூலமாகப் பிறக்கிறார்கள்.

இரண்டே விதமான பிறப்புத்தான். ஒன்று தவத்தின் மூலமாகப் பிறப்பது அல்லது அவத்தின் மூலமாகப் பிறப்பது.

தவத்தில் பிறப்பது அல்லது அவத்தில் பிறப்பது. தவத்தில் பிறந்தால் உலகத்திற்கே பெரய நன்கொடையாக இருக்கும். அவத்தில் பிறந்தால் உலகம் மாதிரியே இருக்கும். அவ்வளவுதான் வேறு ஒன்றும் இல்லை. அந்த ரிஷிகள் பெரிய தவம் செய்தனர். தவத்திற்குப் பிறகு ஈஸ்வரன் உதயமாகிக் கேட்டார்.

எள்ள மாதிரிக் குழந்தை வேண்டும்?

உடனே அவர் சொன்னால்.

இறைவா, எங்களுக்கு ஞானக் குழந்தையாகப் பிறக்க வேண்டும்.

அப்போது ஈஸவரன் சொல்கிறார். 'அப்பா! உலகத்திற்கு ஏற்றமாதிரி நிறையப் பொருள்வளம், புத்திசாலித்தனம் இவையெல்லாம் இருந்து, வெளியுலகம் சம்பந்தமான குழந்தையென்றால் 100 ஆண்டு ஆயுள் இருக்கும். அந்த மாதிரி குழந்தை என்றால் 100 வயது ஆயுள் கொடுத்துவிடலாம்.

ஆசை அச்சத்தாலே இயங்குகின்ற மாதிரிக் குழந்தை வேண்டுமா?

ஞானத்தினாலே இயங்குகின்ற குழந்தை அதிகநாள் உடலில் இருக்காது. ஏனென்றால் உடலில் இயங்குவதற்கான காரணம் இல்லை. அந்த மாதிரிக் குழந்தை கொடுத்தேனென்றால், 16 வயதுவரை இருக்கும். அந்த மாதிரி கொடுக்கட்டுமா? என்று கேட்டார். அநத ரிஷி ஒரு வினாடி யோசித்துவிட்டுச் சொன்னார், 16 வயது இருந்தாலும் பரவாயில்லை. ஞானத்தால் இயங்குகின்ற குழந்தை வேண்டும் என்று சொன்னார்.

ஒரு குழந்தையின் உயிர் மனித உடம்பிற்குள் நுளையும்போதோ, எந்த சக்கரத்திற்குள் நுளைகிறதோ அந்த உணர்வாலேயே வாழ்க்கை முழுவதும் ஓடிக்கொள்டிருக்கும்.

ஸ்வாதிஷ்டத்திற்குள்ளே நுளைந்தால் என்ன செய்யும்? அந்தக் குழந்தை அச்சத்தாலேயே ஓடிக்கொண்டிருக்கும். அதுவும் அந்த ஜீவன் Life - energy எந்தச் சக்கரத்தின் மூலமாக உடம்பிற்குள் நுளைகின்றதென்பதை பொறுத்து, அதன் வாழ்க்கை நிர்ணயிக்கப்படும்.

மணிப்பூரகத்தில் நுளைந்தால் என்ன ஆகும்? கவலையிலேயே, மந்தத் தன்மையிலேயே ஓடிக்கொண்டிருக்கும். ஈஸஸவரன் கேட்டார் 'ஆனந்தத்திற்குள் நுளைகின்ற குழந்தைதான் வேண்டும் என்று. அந்தக் குழந்தை உத்வேகத்தாலேயே இயங்கும். ஆனால் வாழும்காலம் நீண்ட நாளாக இருக்காது. மிக நீளமாக இருக்காது. 16 வயதுவரைதான் இருக்கும் என்று சொன்னார்.

ரிஷி பரவாயில்லை. ஞானத்தின் உத்வேகத்திலே இயங்குகிற குழந்தைதான் வேண்டும் என்றார். ஆனந்த கந்தத்தில் மலர்ந்த குழந்தைதான் வேண்டும் என்றார். 16 வயது வாழ்ந்தால்கூடப் போதும் என்று சொல்லிவிடுகிறார்.

சிவனை நோக்கிப் போகின்ற குழந்தை போதும். எமனை நோக்கிப் போகின்ற குழந்தை வேண்டாம் என்று சொல்லிவிடுகிறார். அதே மாதிரி, ஈஸ்வரனும் சரி என்று வரம் அளித்து விட்டார். குழந்தையும் பிறந்தது.

பிறந்த அந்த வினாடியில் இருந் தே கட்டுறு மனப்பாங்கால் மார்க்கண்டேயன் ஆட்படவில்லை. சிவனை நோக்கிப் போக வேண்டிய குழந்தை என்பதால், தவத்தால் பிறந்தது என்பதால் ஆரம்பத்தில் இருந்தே தியானம் செய்ய ஆரம்பித்துவிட்டது. வேறு ஒன்றும் தேவையில்லை.

பதினாறாவது வயது ஆகும் பொழுது, அப்பாவிடம் கேட்டார், காட்டிற்குள் சென்று தவம் செய்கிறேன். அப்பாவும் சரி போய் செய் என்றார்.

காட்டிற்குள் சென்று உட்கார்ந்து குழந்தை வதம் செய்யத் தொடங்கியது. எப்பேதுமே எமன் முயற்சி செய்து பார்ப்பார். தன்னுடைய கட்டிற்குள்ளே வராமல் இருக்கின்ற எந்த ஜீவனையும் விடமாட்டார். அந்த முயற்சி செய்து பார்ப்பதற்காக எமன் வந்தார்.

வழக்கம்போல் அவருடைய பாசக் கயிறான கட்டுறு மனப்பாங்கைப் போட்டு சுற்ற முயற்சி செய்தார். மார்க்கண்டேயன் கட்டுறு மனப்பாங்கால். கட்டுப்படாத உயர்ந்த உணர்வு நிலையில் இருந்தார்.

அந்த உணர்வு நிலையைத்தான் சிவலிங்கத்தை அணைத்துக்கொள்ளுதல் என்று சொல்வது. வெறும் ஒரு லிங்கத்தை கட்டிப் பிடித்துக் கொண்டால், எமன் நம்மை விட்டுவிட்டுப் போய்விடுவானா? என்ன திருவண்ணாமலை ஆச்சிரமத்தில் 1000 லிங்கங்கள் இருக்கின்றன. எல்லோரும்போய் ஒவ்வொன்றையும் கட்டிப்பிடித்துக் கொள்ளுங்கள். எமன் விட்டுவிடுகிறாரா என்று பார்ப்போம்.!

ஒரு லிங்கத்தை அணைத்துக்கொள்ளுதல் என்பது ஒருவேளை லிங்கத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டால் எமன் வரமாட்டானென்றால் எல்லா மருத்துவ மனைகளிலும் என்ன செய்வார்கள்?

படுக்கை பக்கத்திலேயே ஒரு லிங்கம் செய்து வைத்து விடுவார்கள். இல்லையா?

செய்து வைத்துவிட்டு என்ன செய்யலாம்? ICU ல் நேரம் ஆகிவிட்டது என்ற உடனேயே அதைக் கட்டிப்பிடித்துக் கொள்ளப்பா என்பார்கள். தலையணையையே கூட லிங்கமாகச் செய்து வைத்திருப்போம்.

சிவத்தன்மையை அணைத்துக் கொள்ளுதல், சிவத்தன்மையோடு இருத்தல், சிவத்தன்மையை அணைத்துக் கொண்டு சிவத்தன்மையோடு இருந்தார் மார்க்கண்டேயர்.

ஆனால் அதையும் தாண்டி எமன் முயற்சி செய்தார். சிவத்தன்மையில் இருந்து கீழே இழுத்து, அந்த ஜீவனை கீழே இழுத்து வெளியே எடுப்பதற்கு. இதுதான் ஞான பரிசோதனை என்கிறோம். ஆனால், அந்த சிவத்தன்மையை மார்க்கண்டேயன் விடவேயில்லை. இதைத்தான் ஸ்திரத்தன்கை என்கிறோம்.

அவ்வளவு ஸ்திரத்தன்மையோடு இருக்கும்போது உங்களுக்குள் பொங்கும் குண்டலினி சக்தி அனுபவம்தான் சிவதரிசனம்.

அதாவது வெடித்து. வெளிப்பட்டு, அந்தக் கட்டுறு மன அமைப்பைப் பயன்படுத்த வந்த சக்தியையே சிவன் எரித்துவிட்டார். conditioned mind is destroyed by kundalani அதுதான் காலனை அழித்தல் என்று சொல்வது. உங்களாலும் இது முடியும்.

சிவத்தன்மை, மார்க்கண்டேயனுக்கு உள்ளே இருந்து வெளிப்பட்டு, எமனை எட்டி உதைத்தது.

சிவத்தன்மையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

கட்டுறு மனப்பாங்குக்குள் அதை எடுத்துவர முடியவில்லை, பிறகு, அந்த சிவத்தன்மையின் சக்தியினால் மார்க்கண்டேயர் சிரஞ்சீவியாக மாறிவிடுகிறார். சிரஞ்சீவி என்றாலே எப்போதும் இருப்பது. அதுதான் நிரந்தரமான ஆனந்தம். நித்ய ஆனந்தம். ஜீவன் முக்தி என்கிறோம்.

நம் எல்லோர் வாழ்க்கையிலுமே இது நடக்கும். அந்த சிவத்தன்மைக்கான முயற்சி நடக்கும்.

எப்போதாவது ஒரு நாள் நாமும் சிரஞ்சீவியாக ஆகியே தீரவேண்டும்.

காலனின் பாசக் கயிற்றினுடைய கட்டிலே இருந்து, நம்மை விடுவித்துக் கொண்டே தீரவேண்டும்.

சிவத்தன்மை நமக்குள்ளே மலர்ந்தே தீர வேண்டும்.

சிவத்தன்மையை நாம் அணைத்தே தீர வேண்டும்.

சிவத்தன்மை அந்தக் காலனை அழித்தே தீர வேண்டும்.

அதில் ஒன்றும் சந்தேகமே இல்லை. நடந்தே ஆக வேண்டும்.

அவை எவ்வளவு சீக்கிரமாக நடத்திக் கொள்கிறீர்கள் என்பது. உங்கள் சுதந்திரம். அவ்வளவுதான்.

லட்சியத்தை தெளிவாக்கிக் கொண்டு, உங்களை நோக்கித் திருப்புவீர்களேயானால், இன்றிலிருந்தே செயல்பட முடியும். இல்லையென்றால், கொஞ்ச நாள் கழித்து நடக்கும், ஆனால், நடந்தே ஆக வேண்டும். அதில் ஒன்றும் சந்தேகமே இல்லை.

லட்சியம் பற்றித் தெளிவாக ஆழ்ந்து புரிந்து கொள்ளுங்கள்.

எப்படி எப்படியெல்லாம் உங்களுடைய கட்டுறு மனப்பாங்கு உங்களுடைய வாழ்க்கையில் வரும்? எப்படியெல்லாம் அதைத் தாண்டிப்போய் ஞானத்தை அடைவது.

இந்த ரகசியங்களைப' புரிந்து கொண்டால் எல்லாவிதமான தடைகளையும் தகர்க்கும் நுட்பம் தெரிந்து விடும்.

----

### பரமஹம்ஸ நித்தியானந்தர் சுவாமிகள் வழங்கிய அமுத மொழிகள்

அன்று பெங்களூரில் தியான சத்சங்கம். நாங்கள் சென்ற வாகனம் கோளாறாகிவிட்டதால் ஆஸ்ரமத்திற்கு திரும்பி வர, பக்தர் ஒருவர் தன்னுடைய காண்டஸா காரில் வரும்படி கேட்டுக் கொண்டார்.

எனவே கண்டஸாகாரில் ஏறி உட்கார்ந்தபடி அங்கிருந்த பக்தர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டிருந்தோம். காரின் பக்கவாட்டில் இருந்து கையை எடுப்பதற்குள் காரின் கதவு சாத்தப்பட்டது. கதவிடுக்கில் சிக்கிய கட்டைவிரல் 'சதக்' என நசுங்க, வலியும், எரிச்சலும் அந்த இடத்தில் அதிகரித்துக் கோண்டே போனது. கொஞ்ச நேரத்திலேயே அந்த எரிச்சலும், வலியும் மறைந்து போனது. அடுத்தடுத்த வேலைகளைப் பாரக்க ஆரம்பித்து விட்டோம். என்று ஆஸ்ரம பிரம்மசாரிகளிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னோம். வலியை கூட பரவசமாக்கும் சக்தி விழிப்புணர்விற்கு உண்டு.

மேலதிக தொடர்புகளுக்கு: (416) 439-2080

# இவ்வார ராசிபலன்

## 23-07-2021 வெள்ளி தொடக்கம் 29-07-2021 வியாழன் வரையும்




**மேஷம்:** தடங்கல் இல்லாத தனவரவுகளை சந்திக்கக்கூடிய நல்ல வாரம். காரியம் வெற்றி தரும். நட்பு பெருகும். பணப் பற்றாக்குறை நீங்கும். மாற்று இனத்தவர் வாழ்பு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். கௌரவமான நாள். நந்தி வழிபாடு நன்மை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**ரிஷபம்:** மர்மநோயும் தர்மவினையும் விலகக்கூடிய நல்ல வாரம். விநாயகர் வழிபாடு வெற்றி தரும். கவனமுடன் செயல்பட வேண்டும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். திடீர் செலவுகள் ஏற்படும். தனவரவுகள் தடைப்படும். பிள்ளைகளால் பெருமை சேரும். பழைய பகை மாறும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். மங்கல செய்தியால் மனம் மகிழும். குதூகலம் தாண்டவமாகும். நவகிரஹ வழிபாடு நன்மை தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மூர்ஷிக வாகனன், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,N




**மிதுனம்:** ஆதாயமோ அனுகூலமோ சேதாரமில்லாமல் கிடைக்கக்கூடிய ஆதாரமான வாரம். அமைதியான நாள். வளமான வாழ்வு அமையும். திருமண வாய்ப்புகள் கைகூடி வரும். காதல் எண்ணம் ஏற்படும். மங்களச் செய்தி வரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பொன், பொருள் சேரும். பங்குத் தொழில் கவனம் தேவை. பழையக் கடன் தீரும். குதூகலம் சேரும். வருமான வாய்ப்பு கூடி வரும். கல்வி ஆர்வம் கூடும். முருக வழிபாடு முன்னேற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பிரம்மதேவர், அதிர்ஷ்ட எண்: 1,7,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**கடகம்:** நவகிரஹ அனுகிரஹம் கிடைக்கக்கூடிய நன்மையான வாரம். பாராட்டுக்கள் கூடும். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புகள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும் உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். இடமாற்றம் ஏற்படும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு.
வழிபடவேண்டிய தெய்வம்: வழிவிடும் வனதேவதை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,N




**சிம்மம்:** மனதில் மகிழ்ச்சி பெருகக்கூடிய மகத்தான வாரம். இனிப்பான செய்திகள் வரும். தோல்விகள் விலகும். கட்டிட தொழில் லாபம் தரும். பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழைய கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தகாரியம் நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு நிர்வாகத் திறமை அதிகரிக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**கன்னி:** எதிர்பார்த்த காரியங்கள் எதிர்பார்த்தபடியே நடக்கக்கூடிய எதார்த்தமான வாரம். இனிப்பான செய்திகள் வரும். தோல்விகள் விலகும். கட்டிட தொழில் லாபம் தரும். பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழைய கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தகாரியம் நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு நிர்வாகத் திறமை அதிகரிக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: காமாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,1,0
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**துலாம்:** வம்பு தும்புகள் ஒழிந்து வரவுகள் அதிகரிக்கக்கூடிய வாரம். சச்சரவுகள் அகலும் நாள். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். மற்றவரால் நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புகள் கூடி வரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புகள் அடங்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மீனாட்சிஅம்மன், அதிர்ஷ்ட எண்: 7,1,4,3
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,F




**விருச்சிகம்:** கலைந்த குடும்பம் ஒன்று சேரக்கூடிய கலகலப்பான வாரம். பணிவான பேச்சுக்கள் தேவை. மன உற்சாகம் கூடும். பணவரவு சேரும். உடல் உபாதை தோன்றும். சுபச் செய்தி வரும். வியாபார விரயம் கூடும். உத்தியோக கவனம் தேவை. கடன் தொல்லை குறையும். உடன் பிறந்தவரால் ஆதாயம் உண்டு. கூட்டுத் தொழில் மோசடி ஏற்படும். இடையூறுகள் அதிகமாகும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். பயணம் ஆதாயம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சயன கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**தனுசு:** பணவரவில் லாபமும் உடல்நலத்தில் ஷேமமும் கிடைக்கக்கூடிய வாரம். பயணம் தவிர்ப்பது நல்லது. பெரிய மனிதர்களை சந்திப்பிர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கை கூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழிலால் லாபம் உண்டு. குடும்ப மேன்மை தரும். ஆரோக்கியம்த சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மங்களமாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்

‘ராஜயோகம்’

**Dr. K. RAM.Ph.D (USA)**

தொடர்புக்கு: **0091-9840160068**
**9940431377**




**மகரம்:** வீரியத்தோடு செயல்பட்டு வெற்றிகளை பார்த்துக் கொள்ளக்கூடிய வாரம். போட்டிகள் உருவாகும் நாள். தாய் வழி உறவால் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். சகோதரிகளால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் நிறைவேறும். கலை ஆர்வம் கூடும். தன வரவில் மேன்மை கூடும். நிதி நிலைமை சீராகும். பண வரவு உண்டு. பற்றாக்குறை நீங்கும். பிரச்சனைகள் குறையும். உடல் நலனில் கவனம் தேவை. கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பஞ்சபூதக்கடவுள், அதிர்ஷ்ட எண்: 4,2,1,0
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,K




**கும்பம்:** எடுத்த காரியத்தில் தொடுத்த வெற்றியை அடுத்தடுத்து சந்திக்கக்கூடிய வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கமிஷன் தொழில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். பூர்வீக சொத்து வந்து சேரும். வழக்குகள் வெற்றி தரும். வீண் வம்பு விலகும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். சேமிப்பு உயரும். நிதானம் தேவை. உத்தியோகத்தில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: பிரளய தேவி, அதிர்ஷ்ட எண்: 5,1,5,0
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,J




**மீனம்:** உங்களால் வரவும் உறவுகளால் செலவும் அதிகரிக்கக்கூடிய வாரம். பயணம் தவிர்ப்பது நல்லது. பெரிய மனிதர்களை சந்திப்பிர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கை கூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. எந்திர தொழிலால் லாபம் உண்டு. குடும்ப மேன்மை தரும். ஆரோக்கியம்த சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். நல்லோர் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பால் முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,0,7,4
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,S

----------------------------------------

## Let us support Daily Bread Food Bank

# உணவு தேவைப்படுவோருக்கு உதவிடுவோம் வாருங்கள்

When:

**Saturday, July 31, 2021**
**from 10 AM to 2 PM**

Where:

**Global Kingdom Ministries Parking Lot**
**1250 Markham Road**
**(Markham and Ellesmere, follow the signs)**

**You're Invited:**
**Food Bank Drive-Thru**




# மலேசிய அரசியலும் பிணப்பெட்டியும்!


நக்கீரன்

கோலாலம்பூர், ஜூன் 23:

ஒரு மனிதனின் கடைசிப் பயணம் என்றால், அது சம்பந்தப்பட்டவரின் பிண ஊர்வலமாகத்தான் இருக்கும். இந்த ஊர்வலத்தைக் கண்டால் பொதுவாக மனித மனம் துணுக்குறும் என்பதால், "பிண ஊர்வலத்தைக் கண்டால் நல்லது நடக்கும்" என்று எவரோ எங்கோ போகிற போக்கில் ஓர் ஆறுதல் மொழியாக சொல்லி வைக்க, அதை உண்மை என்று இன்னமும் நம்பி ஆறுதல் பெறும் தமிழர்கள் அநேகம் பேர்.



இவ்வாறான பிண ஊர்வலத்தைக் கண்டு பயந்து, அரண்டு, மிரண்ட ஒருவரின் வாழ்க்கை சுவாரசியமும் திருப்பம் நிறைந்தது. மரணம் என்பது என் வாழ்விலும் நேருமா? இதிலிருந்து நான் தப்பிக்க முடியாதா? நான்தான் அரண்மனைவாசி ஆயிற்றே? அதுவும் இளவரசனாயிற்றே? இதிலிருந்து தப்பிக்க வழி கிடையாதா என்றெல்லாம் கேள்வி மேல் கேள்வி எழுப்பிய அந்த இளைஞருக்கு உடனிருந்த அந்தக்கால அமைச்சர் மாய்ந்து மாய்ந்து அளித்த பதிலும் விளக்கமும் பயனற்றுப் போயின.

முடிவு..., அரண்மனை வாழ்க்கையையே் துறந்து மனைவி, மகனையும் பிரிந்து, தன்னந்தனியனாக அலைந்து, திரிந்து, மெலிந்து, சோர்ந்து, ஓய்ந்து கடைசியில் இளைஞர் என்னும் கட்டத்தையும் கடந்து நிறைவாக அமர்ந்தார் ஒரு மரத்தின்கீழ் அவர்தான் புத்தர்.

அப்படிப்பட்டவர் இம்மை, மறுமை வாழ்வை உணர்ந்து தன் வாழ்க்கையின் நிறைவுக் கட்டத்தை தானே ஊகித்து தன் சீடர்களுக்கும் அறிவித்தபோது, அவருக்கு மரண பயம் அறவே அற்றுப்போயிருந்தது.

பொதுவாக, வாழும்போதில் மரணம் என்பது சகிக்க முடியாத ஒன்றுதான். காரணம் அதன்பிறகு ஒருவரின் வாழ்வில் வெறுமையே மிஞ்சும். இதனால்தான், ஔவை மூதாட்டியும் மரணத்தை கொடுமை என்று வருணித்தார்.

இருந்தபோதும், இந்த மண்ணில் பிறந்த நாம் ஒவ்வொருவரும் என்றோ ஒருநாள் எதிர்கொள்ள வேண்டிய நிச்சயமான ஒன்றுதான் மரணம். இப்போது, மனித வாழ்க்கையில் மரணமும் வர்த்தகத்திற்குரிய ஓர் அம்சமாக மாறிவிட்டது.



ஆம், பிணப்பெட்டி வர்த்தகம் புரிவோர் தங்களை அறியாமலே எதிர்பார்ப்பது மரண ஓலையைத்தான். அப்படிப்பட்ட பிணப்பெட்டியை ஒரு தலைவர் பொதுமக்களுக்கு பரிசாக அளிக்க முன்வந்தார்.

எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்று புரியாத நிலையில் இருக்கும் ஒரு மனிதரைப்போல எந்த வாக்குறுதியை அளித்தால் வாக்காளர்கள் நம்மை ஆதரிப்பார்கள் என்ற நிதானம் இல்லாமல் 2018 மே 9-ஆம் நாளில் மலேசியாவின் 14-ஆவது பொதுத் தேர்தல் நடைபெற்ற நேரத்தில் ஒரு தலைவர், தன் தொகுதியில் வசிக்கும் இந்தியர்களுக்கு பிணப் பெட்டியைப் பரிசளிப்பதாக(இலவசமாக வழங்குவதாக) வாக்களித்தார்.

வாழ்வதற்கு வழி கேட்டால் சாவதற்கு பாதை சொன்ன அவர் சாதாரண தலைவர் இல்லை. அறுபது ஆண்டுகளாக நாட்டை ஆண்டுவந்த அப்போதைய தேசிய முன்னணி அரசின் துணைப் பிரதமராக இருந்த டத்தோஸ்ரீ அகமட் ஜாஹிட் ஹமிடிதான்.


அவரின் பாரம்பரிய நாடாளுமன்றத் தொகுதியான பாகானைச் சேர்ந்த ஓர் இந்திய உள்ளூர் தலைவரும் இதற்கு பிரச்சார களம் அமைத்தார். ஆனால், இதற்கு கடுமையான கண்டனமும் விமர்சனமும் எழுந்த நிலையில் சம்பந்தப்பட்ட இருவருமே பின்வாங்கியதுடன் ஏதேதோ சொல்லி மழுப்பினர் சமாளித்தனர்.



இப்படி தேர்தல் அரசியலில் பிணப்பெட்டியும் ஒரு சிறிய பங்கு வகித்ததென்றால், கட்சி அரசியலிலும் பிணப்பெட்டி இடம்பெற்ற வரலாறு இங்கு நிகழ்ந்துள்ளது.

அதுவும், மலேசியாவின் மூத்த அரசியல் இயக்கமும் இந்தியர்களின் தாய்க் கட்சியுமான மஇகா (மலேசிய இந்தியர் காங்கிரஸ்)-வில் தேசிய உதவித் தலைவராகப் பொறுப்பு வகித்த டான்ஸ்ரீ எம்.ஜி. பண்டிதனால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் நகர்வு அது.

மஇகா மேநாள் தலைவரான துன் ச.சாமிவேலுவால் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட பண்டிதன், தமிழ் நாட்டில் எம்ஜிஆரின் கட்சி சின்னமான இரட்டை இலையைப் போல இங்கு மூவிலையை தன் கட்சி சின்னமாகக் கொண்டு இந்திய மக்கள் முன்னணி (ஐபிஎ.ப்) என்னும் கட்சியைத் தொடங்கியதுடன் மலேசிய தமிழர்களின் புரட்சித் தலைவராகவும் தன்னை பிரகடம் செய்தார். அதற்கு முன், சாமிவேலுவிற்கு எதிராக போராட்டம் நடத்தியபோதுதான் அவர் கட்சி அலுவலகத்திற்கு பிணப் பெட்டியுடன் வந்தார்.



இவ்வாறாக, மலேசிய அரசியலில் அவ்வப்போது பிணப்பெட்டி தலைகாட்டிய நிலையில், தற்பொழுது கொரோனா பருவத்திலும் பிணப் பெட்டி தன் மூக்கை நுழைத்துள்ளது. உண்மையிலேயே, இது "கோவிட்-19 பிணப்பெட்டி"தான்.

கொரோனா ஆட்கொல்லி கிருமியின் பெரும்பரவலால் கடந்த 16 மாதங்களாக வேலை இழப்பையும் வருமான பாதிப்பையும் மக்கள் எதிர்கொண்டுள்ள நிலையில் வாழ்க்கை மிகவும் சுமையாக மாறிவிட்டது.

இதில், நலிந்த நிலையில் இருக்கும் இந்திய குடும்பங்களின் நிலைமை சொல்லி மாளாது. பணத்தை தாராளமாக எண்ணியெண்ணி செலவு நாளெல்லாம் போக, இப்போது இது முக்கியமா அல்லது அது அவசியமா என்று எண்ணுவதைவிட எது உடனடித் தேவை என்று எண்ணியெண்ணி நிதானித்து செலவுசெய்ய வேண்டிய காலக்கட்டத்தில் பல்லாயிரக் கணக்கான குடும்பங்கள் உள்ளன.



இப்படிப்பட்ட நேரத்தில் கொரோனாவினால் மரணம் ஏற்படுகின்ற குடும்பங்களின் உறுப்பினர்கள் பொருளாதார சிக்கலை எதிர்கொள்வது ஒருபுறம் இருக்க, பாசப் போராட்டத்தையும் மறுபக்கம் எதிர்நோக்குகின்றனர்.

மருத்துவ மனைக்கு சென்று பார்க்கமுடியவில்லை. இறந்தபின் முகத்தைக்கூட ஒரு முறை பார்த்துவிடலாம் என்றால் அதற்கும் வழியில்லை. ஒரு குடும்பத்தில் நான்கைந்து பேர் இருந்தாலும்கூட, ஒருவர் அல்லது இருவருக்கு மட்டும் அதுவும் இறந்த தங்கள் குடும்ப உறுப்பினரின் உடலை அடையாளம் காட்டுவதற்கு மட்டுமே வாய்ப்புண்டு.

இந்த நிலையில் இறந்தவர்களுக்கான இறுதி மரியாதை முதல் உடலை நல்லடக்கம் செய்வது அல்லது எரிப்பது வரை தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் ஒருங்கிணைந்து மேற்கொள்ளும் "அமரர் ஊர்தி" வைத்து தொழில் நடத்துவோர் விதிக்கும் கட்டணமும் அதிகரித்துள்ளது. அதற்கான, நியாயமும் அவர்களின் தரப்பில் சொல்லப்படுகிறது.

ஒரேக் குடும்பத்தில் ஒருவருக்கும் மேற்பட்டவர்கள் கொரோனா பாதிப்பினால் இறந்துவிட்டால், நிலைமை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இவற்றை யெல்லாம் கருத்தில் கொண்ட சிலாங்கூர் மாநில சட்டமன்ற (செந்தோசா தொகுதி) உறுப்பினர் ஜி. குணராஜ், ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கொவிட்-19 தாக்கத்தினால் இறந்துவிட்டால், அவருக்காக இலவசமாக பிணப்பெட்டியை வழங்குவது பற்றி மாநில மந்திரி பெசார் (முதல்வர்) டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டு அவருக்கு கோரிக்கை வைத்துள்ளார்.



இது நியாயமான கோரிக்கையாகவும் தெரிகிறது. அடுத்தடுத்த நாட்களில் என்ன நிகழப் போகிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**நக்கீரன்** - Nakkeeran 013-244 36 24


*(சென்ற வார தொடர்ச்சி...)* *(அத்தியாயம் 21)*

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் பழையாற்றுப் பயணம்

அதை பார்த்த பார்த்திவேந்திரன் கதிகலங்கி நின்றான். அவ்வேளை மலையமான் பாறையில் இருந்து எழுந்து அரண்மனை நோக்கி நடந்தார். கரிகாலனும், பார்த்திவேந்திரனும் பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுது 'என் தலைவா! நீர் என்னை உம் அன்பு நண்பன் என்று ஏற்றுக் கொண்டுள்ளீர். ஆனால் உம் மனதில் ஏற்படும் சஞ்சலம், கோபம், வேதனை ஒன்றிற்கும் அர்த்தம் எனக்குப் பரியவில்லை. பழுவூர் இளையராணி பற்றியதாக இருக்கிறது போல் எனக்குத் தோன்றுகிறது. தன் உள்ளத்தை வெளிப்படுத்தி என்னுடன் பகிர்ந்து கொள்ளக் கூடாதா? அதற்கு ஏதும் பரிகாரம் செய்யலாமே' என்று தாழ்ந்த குரலில் கேட்டான் பார்த்திபேந்திரன். ஆதித்த கரிகாலன் பெருமூச்சோடு, 'அதற்கு பரிகாரம் செய்து பலன் கிட்டப் போவதில்லை. என் வேதனைக்கு மருந்து உயிரோடு மடிவதுதான். இப்பொழுது தாத்தா தனியாகப் போகிறார் அவருக்குத் துணையாக போவோம் பின்பு சொல்லுகிறேன்' என்றான். மாமல்ல புரத்தில் பல்லவ சக்கரவர்த்திகளின் மாளிகை ஒன்றில் தங்கி, இரவு உணவை முடித்துக் கொண்டு மலையமான் அரவான் கதை கேட்கப் போய்விடடடார். அரவான் கதையாவது, குருஷேத்திர யுத்தத்தில் பாண்டவர்கள் பக்கம் வெற்றி பெற மனித பலி முதலில் பலியாக வேண்டும் என் ஆருடம் சொல்ல, சாமுத்திரிகா லட்சணம் பொருந்திய அர்ஜீனன் மகன் அரவான் பலியாக்கப்பட்டான். தன் குலத்தின் வெற்றிக்கு தன்னைக் கொடுத்தான். அவன் கதையை மீண்டும் மீண்டும் கேட்பதில் மலையமானிற்கு அத்தனை ஆர்வம். அப்பொழுதில் பார்த்திபேந்திரனும், கரிகாலனும் இரவின் அழகுக் கோலத்தில் மாமல்லபுரத்தின் விசித்திரத்தை கண்டு கொண்டு மேல் மாடியில் நின்றார்கள். அப்பொழுது கரிகாலன் பழைய காலத்தில் எம்மவர்கள் செய்த பெருமைகளை நினைத்து நினைத்து பெருமை கொண்டான். இவர்களின் தியாகத்தால் கிடைத்த பெருமைகளால் நாம் சுகம் கொள்கிறோம். எம் வருங்கால சந்ததியருக்கு நாம் என்ன சுகத்தை தேடி வைத்துச் செல்லப் போகிறோம் என்று அலுத்துக் கொண்டான். பார்த்திபேந்திரன் 'என்ன நண்பா காவியத்திலோ, சரித்திரத்திலோ உங்களைப் போல் சின்னஞ்சிறு வயதில் சாதனை படைத்தவன் யார் இதைவிடவா தாங்கள் செய்ய வேண்டியிருக்கிறது' என்றான். அதற்கு கரிகாலன், 'ஒருவனுக்கு முகஸ்துதி செய்வது அவனை படுகுழியில் தள்ளுவது போல்' என்றான். 'உண்மைகளை எடுத்துச் சொல்வது முகஸ்துதி அல்ல. பொய்யா புகழ்ந்துரைப்பதுதான் முகஸ்துதி. ஓருவரிடம் இல்லாததை இருப்பதாக சொல்லுவதும் செய்யாததை செய்ததாக புகழுவதும், சுயநலத்துடன் தன் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பிறிடம் பொய் பேசுவதும்தான் முகஸ்துதியன்றோ! உணமையை உண்மை என்று எடுத்துரைப்பது முகஸ்துதியல்ல. மனிதர்களிடம் குறைகள் இருப்பினும் நிறைகளால் அதை நிரப்பின் முகஸ்துதிக்கு உள்ளாவார்கள்தான். அவனவன் தன் ஆற்றலுக்கும், அறிவுக்கும் ஏற்ப தம் படைப்புக்களை படைப்பார்கள் கடமைகளை முடிப்பார்கள். வெற்றிகளைக் கொள்வார்கள். தன் ஆற்றலையும், அறிவையும், நேரத்தையும் வீணடித்து வெட்டிப் பேச்சு பேசுபவன் பிறக்காமல் இருப்பதே மேல். மன்னர்கள் வீரதீரச் செயல்கள் செய்தார்கள். புலவர்கள் அவர்களைப் புகழ்ந்து பாடினார்கள். சிற்பிகள் பலர் தங்கள் சிற்பக் கலையால் வரலாறு படைத்தார்கள். எழுத்து வன்மை படைத்தவர்கள் அதை பதிவு செய்தார்கள். அதனால்தான் அன்று நடந்தவைகள் இன்றைய வரலாறாக நாம் காணக்கூடியதாக இருக்கிறது. அவரவர் தங்கள் தங்கள் வேலைகளைச் செய்வது மேன்னை! உலகில் தம் பெயரை நிலைநிறுத்த செயல்களைச் செய்யாதிருப்பது மனிதனின் மகத்தான மேன்மையே. நண்பா உங்கள் மன வேதனையை கொஞ்சம் இறக்கி வையுங்கள். வேதனையுடன் வாழ்ந்தால் இன்பமான இனிய இளமை வாழ்வதனை புதைத்துவிட்டு பிணமாக நடமாடுவோம்' என்றான் பார்த்திபேந்திரன். 'நண்பனே என் இதயத்தை பிளந்து காட்டுகிறேன். எத்தனை எத்தனை அன்பு இதயங்கள் என் இதயத்துடன் ஊஞ்சலாட நிற்கின்றன. ஆனால் வஞ்ச வடிவமான இந்த பெண் மட்டும் அங்கு தங்கி விட்டாள். என் தடுமாற்றத்திற்கும், தளர்வுக்கும் அவள் தான் காரணம். அவள் தான் அந்நியப் பெண்களை அன்னையென கருதும் மரபில் பிறந்தவள். நான் மாற்றான் மனைவியை மனதில் நினைப்பது எத்தனை கேவலம் என்று எனக்குத் தெரிந்திருந்தது. முற்பிறப்பின் வினையோ, விதியின் பயனோ இறைவனின் திருவிளையாடலோ? என்னை இக்கதிக்கு ஆளாக்கிவிட்டது சொல்லுகிறேன் கேள் நண்பா' ---- என் பன்னிரண்டு வயதினில் அவளை நான் சந்தித்தேன். அவளின் மோகனப் பார்வை என்னில் விழுந்தது. அவளின் ஒளி வதனம் என்னுள் பதிந்தது. ஒரு நாள் பழையாறையில் எங்கள் அரண்மனையில் பின்புறமாக நானும், குந்தவையும் விளையாடிவிட்டு திரும்பிக் கொண்டிருந்தோம்.

அப்பொழுது எங்கள் பாட்டி செம்பியன் மாதேவியின் குரல் கேட்டு, அவர் இருந்த வீட்டிற்குள் புகுந்தோம். அங்கு இவள் தன் பெற்றோருடன் நின்றிருந்தாள். எங்கள் பாட்டியும், 'இவள் பெயர் நந்தினி இவர்கள் பாண்டிய தேசத்தில் இருந்து ஈசான சிவபட்டர் வீட்டுக்கு வந்திருக்கிறார்கள்' என்று அறிமுகம் செய்தார். பின்னர் நாங்கள் அரண்மனை திரும்பினோம். என் தந்தை பாண்டிய நாட்டு யுத்தத்திற்கு சென்ற போது நானும் சென்றேன். பாண்டிய சைதன்யத்தையும், பாண்டியனுக்கு ஆதரவு கொடுக்க இலங்கை மன்னன் அனுப்பிய சைதன்யத்தையும் நாம் முறியடித்தோம். வீரபாண்டியன் என்ன ஆனான் என்று எமக்குத் தெரியவில்லை. பாண்டிய மன்னனுக்கு உதவும் இலங்கை மண்ணிற்கு ஒரு பாடம் கற்பிக்க விரும்பினார் என் தந்தை. அதனால் கொடும்பனூர் சிறிய வேளாளரின் தலைமையில் ஒரு பெரிய படையை அனுப்ப தீர்மானித்தார். இதனால் அங்கு சிலகாலம் தங்க வேண்டியதாயிற்று. மீண்டும் பழையாறை வர இரண்டு வருடங்கள் சென்றன. அதனால் அந்தப் பெண்ணை நான் மறந்துவிட்டேன். இரண்டு வருடத்தில் எத்தனை மாற்றம். என் அக்காளும், நந்தினியும் முற்றாக உரு மாறிவிட்டார்கள். அவர்கள் நல்ல தோழமை கொண்டிருந்தார்கள். நந்தினி அழகான ஆடை ஆபரணங்கள் பூண்டு, அழகு தேவதையாக தென்பட்டாள். எனக்கு அவளுடன் பேசிப் பழக பெரும் ஆவல். அவளோ வெட்கம் மூடி நின்றாள். இருந்தும் அவளை கண்டு பழகி வந்தேன். நல்ல சுகம் கண்டேன். இதனால் என்னைச் சேர்ந்தவர்களுக்கு இது பிடிக்கவில்லை தடுத்தார்கள். என் அக்காள் என்னுடன் சண்டை செய்தாள். பாட்டி, 'நீ அரசகுமாரன் இப்படிப்பட்ட பெண்களுடன் பழகுவது முறையல்ல' என்று எச்சரித்தார். எதுவும் என் காதில் விழவில்லை அத்தனை மோகம் அவளிடம் என் மனம் அவளைச் சுற்றி சுற்றி வந்தது. ஆனால் திடீர் என்று அவள் தன் பெற்றோர்களுடன் பாண்டிய நாடு சென்றுவிட்டாள். இதனால் துக்கமும், கோபமும் கொண்டேன். என் சகோதரி பெயரில் கோபம் மூண்டது. இதே வேளை திருமுனைப்பாடியையும், தொண்டை மண்டலத்தையும் ஆக்கிரமித்த படைகளை விரட்டப் புறப்பட வேண்டிய சமயம் வந்தது. சோழ சைதன்யத்துடன் நானும் வந்தேன். அங்குதான் உன்னைச் சந்தித்தேன் நண்பர்களானோம். மலையமான் அரசருடைய உதவி கொண்டு இராட்சச படைகளை விரட்டி, காஞ்சியைக் கைப்பற்றினோம். இந்த மகிழ்ச்சியுடன்




எமக்கு கெட்ட சேதியும் இலங்கையில் இருந்து வந்தது. எம் படை அங்கு தோற்றது என்றும், கொடுமபனூர் சிறிய வேளாளர் இறந்த விடயமும்.

எனினும் இதனால் வீர பாண்டியன் வெளிப்பட்டு வந்து, படை திரட்டி மதுரையைக் கைப்பற்றி, தன் மீன் சின்னக் கொடியை ஏற்றினான் என்று நாம் கேட்டதும் வீராவேசம் கொண்டோம் அல்லவா? அந்த வேளையில் என் தந்தையார் தன் கால்கள் தளர்ந்து சுகயீனம் கொண்டிருந்தார். இருந்தும் போர்க்களம் புக எண்ணியிருந்தார். நாங்கள் அவரைத் தடுத்தோம் அல்லவா? வீர பாண்டியருடைய படையை முறியடிக்காது நாம் திரும்ப மாட்டோம் என்ற தைரியத்துடன் கொடும்பனூர் பூரிவிக்கிரம கேசரியின் தலைமையில் போர் செய்ய நாம் எம் தந்தையால் பணிக்கப்பட்டோம். நானும் நீயும் வீர தீரச் செயல்கள் செய்து, மீண்டும் மதுரையை கைப்பற்ற பாண்டிய நாட்டிற்கு படையெடுத்தோம். அவர்களை அடியோடு அழித்து ஒழித்தோம். ஆனாலும் வீர பாண்டியன் ஓடி ஒழிந்துவிட்டான். அவனைக் தேடி வைகை நதியின் இரு கரையும் நாங்கள் சென்றோம். நான் வைகை நதியில் இறங்கி நடந்து தெற்கே சென்றேன். அப்பொழுது அங்குள்ள ஒரு மனையில் குதிரையின் குளம்படியையும், இரத்தத்துளிகளையும் கண்டு அதைத் தொடர்ந்தேன். வைகை ஆற்றின் மத்தியில் ஒரு தீவு போல் இருந்த சோலையை அடைந்தேன். அங்கு நந்தினியைப் பார்த்தேன். அவள் ஆண்டாள் விக்கிரகத்தைப் போல் காட்சி தந்தாள். அவளிடம் விசாரித்தேன் அவள் கோலம் பற்றி. அதற்கு அவள் என்னைப் பிரிந்து வந்தபின் தான் மானிடர் யாரையும் மணப்பதில்லை ஆண்டாள் போல் கண்ணனை மணக்கப் போவதாக கூறினாள். அதற்கு நான் அவளுடன் வாதம் செய்யவில்லை. யுத்தம் முடிந்தபின் என் சபதம் நிறைவேறிய பின் என் தந்தையிடம் இதைப் பற்றி பேசலாம் என்று எண்ணியிருந்தேன். அதனால் அவளிடம் தமக்கு ஏதேனும் உதவி வேண்டுமா? எனக் கோரினேன். அவளும் அதற்கு, அவள் வயதானதாய் தந்தை இங்கே இருக்கிறார்கள். என் தமையன் ஆழ்வார்க்கடியான் திருப்பதி யாத்திரை போயிருக்கிறார். உங்கள் வீரர்கள் இங்கு வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றாள். நானும் அவ்வாறே வீரர்களுக்க கட்டளையிட்டேன். அடையாளங்களைப் பின் தொடர்ந்து சென்ற நான் தப்பிச் சென்ற வீரபாண்டியன் இங்கே தான் ஒழிந்திருக்க வேண்டும் என்று எண்ணி சாளரம் வழியாகப் பார்த்தேன். நான் கண்ட காட்சி என்னை ஆவேசம் கொள்ள வைத்தது. வீர பாண்டியன் காயங்களுடன் கட்டிலில் படுத்திருந்தான். அவனுக்கு நந்தினி தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்தாள். நான் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றேன். அவள் அவனுக்கு காயங்களுக்கு மருந்து கட்டிக் கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் விழுந்து வணங்கி வேண்டிக் கொண்டாள். 'ஐயா தாங்கள் என் பெயரில் ஒரு நாள் வைத்திருந்த அன்பில் ஆணையிட்டு வேண்டுகிறேன் இவரை ஒன்றும் செய்யாதீர்கள். படுகாயப்பட்டு கிடக்கும் இவரை உங்கள் கையால் கொல்ல வேண்டாம்' என்றாள். அதற்கு நான், 'உனக்கும் இந்த மனிதனுக்கும் என்ன சம்பந்தம்? எதற்காக இவன் உயிரைக் காப்பாற்றும் படி கேட்கிறாய்?' என்றேன். அதற்கு அவள் கூறிய பதில் ஆத்திரமும், ஆவேசமும் முட்டியது. 'இவர் என் காதலன் இவர் என்னை மணந்து கொள்ள சம்மதம் சொல்லியுள்ள தெய்வம்' என்றாள். இதனால் அவளிடம் மேலும் கோபம் மூண்டு பற்றியது. என்னை பழிவாங்கிய பாதகன் என்ற எண்ணத்துடன் ஒரே வீச்சில் அவன் தலையை வெட்டி எடுத்தேன். வெளியே வந்தேன் நந்தினியை திரும்பிப் பார்த்தேன். அவளின் பார்வையில் ஆறு உணர்வுகளும் உச்ச நிலையில் எரிந்துகொண்டிருந்தன. காம, குரோத, லோக, மோக, மத, ஆச்சரியம் என்ற உணர்வுகளே அவை. அவள் பார்வையின் அர்த்தம் புரியவில்லை. அதனால் மனதில் பாரம் குடி கொண்டது. அதன் பின் நடந்தவை நீ அறிந்ததே! என்னைத் தேடி நீயும் பலரும் அங்கு வந்தீர்கள். வெற்றியைக் கொண்டாடினோம். அதற்குள் பார்த்திபேந்திரன் குறுக்கிட்டு, 'அன்று தாங்கள் சந்தோசமாக இருக்கவில்லை. நானும் கவலைப்பட்டேன். உடலில் ஏதேனும் காயம் ஏற்பட்டுவிட்டதோ என்று. நான் உங்களிடம் கேட்டேன் நீங்கள் அது ஓன்றுமில்லை என்றீர்கள்' என்றான். 'ஆமாம் என் மனம் அமைதி அடையவில்லை மீண்டும் அங்கு சென்று அவளைச் சமாதானம் செய்து மன்னிப்புக் கேட்க எண்ணினேன். நீஙகள் யாவரும் படுத்து உறங்கிய பின் நான் குதிரையில் ஏறி அங்கு சென்றேன். அங்குள்ள குடிசைகள் யாவும் எரிந்துவிட்டது. நந்தினியின் தாய் தந்தை மட்டும் அங்கு அழுது கொண்டு இருந்தார்கள். தாங்கள் பக்கத்து ஊரிற்குப் போனார்களாம், நந்தினியை தனியே விட்டு விட்டு போனார்களாம். என்ன நடந்தது அவள் எங்கே போனாள்?' என்று தெரியவில்லை. ஆனால் ஒரு பெண்ணைக் கட்டி, எரியும் நெருப்பிலே போடக் கொண்டு செல்வதாக யாரோ ஒருவர் சொன்னார். எனக்கு ஒரு சந்தேகம் நந்தினியின் பிறப்பில் ஏதோ ரகசியம் உண்டு. இவர்கள் உண்மையான பெற்றோர்கள் போல் தெரியவில்லை. அவள் யாராக இருக்கலாம் என்று எண்ணினேன். அவள் யாராக இருந்தால் என்ன இதயத்தில் அமர்ந்துவிட்டாள்! என்றபடி திரும்பி வந்தேன். நான் போனதோ, வந்ததோ உங்கள் யாருக்கும் தெரியாது. மனிதர்க்கு எவ்வளவு இறுமாப்பு? எம்மால் செய்ய முடியாதத எது? வைராக்கியம் கொண்டு எம் செயல்களைச் செய்து வெற்றி கொள்கிறோம். மனித உயிரை எடுத்த பின் அதை திருப்பிக் கொடுக்க முடியவில்லை. உயிர்களை மதித்து காத்திடுவதே நல்ல பண்பு. போர் என்றும், பகை என்றும் உயிர்களைப் பழிவாங்குகிறோம். எத்தனை துட்டச் செயல் இது? என்று தன்னைத் தானே நொந்து கொண்டான். 'அரசே இது என்ன இத்தனை நாளாக இதைப் பற்றி கலக்கம் கொண்டிருக்கிறீர்களே! இது தகுமா?' என்றான் பார்த்திபேந்திரன்.

*(தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com

**தொகுப்பு, எழுத்தாக்கம்:**
**மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நிமலன**

---

# "மார்க்கம் பீச் கடற்கரையில் 27வது வருடமாக"

## கீரிமலை மாவிட்டபுரம் கந்தசாமி தீர்த்தம்

# ஆடி அமாவாசை விரதம்

**07.08.2021 சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் 2.00மணி வரை**

**தீர்த்தம், தர்ப்பணம், சிவலிங்க பூஜை, வழிபாடு,**
**மோட்ச அர்ச்சனை பிரார்த்தனை, பஜனை, மகேஸ்வர பூஜை**
**(ஆடி அமாவசை விரதச் சாப்பாடு)**

மிசிசாகா பிறம்ரன் ஸ்ரீ கணேசதுர்க்கா தேவஸ்த்தான பிரதம குரு சிவ ஸ்ரீ பஞ்சாட்சர கிருஸ்ணராஜ குருக்கள் அவர்களின் தலைமையில், பல அந்தண சிவாச்சாரியர்களும் கலந்து சிறப்பிக்கிறார்கள். 27வது வருடத்தில் மார்க்கம் பீச் (Markham Beach, Sibbald Point Provincial Park) கடற்கரையில் காலை 8.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை நடைபெறும். சென்ற வருடங்களைப் போல் இவ்வருடமும் ஆடி அமாவாசை தினத்தில் அனைத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

அடியார்களுக்கு தீர்த்தக் கடற்கரையிலேயே சிறப்பான சுத்தமான சைவ விரதச் சாப்பாடு தலை வாழை இலையில் வழங்கப்படும். அடியார்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

**முக்கிய குறிப்பு:-** மார்க்கம் பீச் கடற்கரையில் வழக்கமாக வருடா வருடம் வழமையாக நடைபெறுவது போன்று இம்முறையும் ஆடி அமாவாசை விரதத்திற்காக அனைத்தும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. ஆகவே அனைத்து விரதகார அன்பர்களும் கலந்து கொண்டு வாழ்வில் வளம் பெறுக.

**தீர்த்தக்கரையில் சங்கர்ப்பம் செய்து அனைவரும் தீர்த்தமாடி தர்ப்பணம் செய்யும் வசதியும் தலை வாழை இலை அறுசுவை விரதச் சாப்பாடும் மார்க்கம் பீச் கடற்கரையில் மட்டுமே உண்டு.**






**மேலதிக தொடர்புகளுக்கு**
**சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜக் குருக்கள்**
**905-501-0011 | 905-405-001 | 416-271-2181**
**ஸ்காபரோ-திரு.சின்னத்தம்பி கனகலிங்கம் 416-844-0565**
**திரு-சோமசச்சிதானந்தம் 647-202-3234**

# 24ம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். விநாயகமூர்த்தி ஆனந்தராஜா

(நவக்கிரி, புத்தூர்)




விடுதலை வேங்கையோடு வீரமிகு போராளியாய்
விண்ணில் மறைந்த மாவீரனே!
மண்ணில் நீர் வாழ்ந்த காலம் குறைவே – ஆனாலும்
சோதனைகளையும் வேதனைகளையும்
சாதனைகளாக்கி அந்த சாதனைகளின்
சாம்ராச்சியத்தின் சரித்திரம் – நீர்
தேசத்தின் வளர்ச்சிக்கு வித்திட்டவன் நீர்
வித்திட்டவன் வித்தாகி போன
விந்தைதான் என்ன!
மண்ணுக்காய் மாண்டவர் என்பதனால் நிறைவு எமக்கு
மீண்டும் வருவீர் என நாம் ஏங்குகின்றோம்
ஈரவிழிகளுடன் பதினெட்டு ஆண்டாய்....

**தோற்றம்** 29-12-1972

**மறைவு** 19-07-1997

**ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும் குடும்பத்தினர்**

(416) 888-1128, (905) 205-1070

# Amma Pawn Broker

## அம்மா தங்கநகை அடைவு மாடம்

கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு
அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

**1.0%** முதல் **1.5%** வரை

**அதிரடி சிறப்பு வட்டி வீதம்**

உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்
இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்
உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



**அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!**

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com

416-757-0034
416-994-3861

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி. சிவசுப்பிரமணியம் குணபூஷணியம்மா (தங்கக்கட்டி)

(பருத்தித்துறை)



பெற்றோர்க்கு நல்ல மகளாகவும்
உடன் பிறந்தோருக்கு பாசமிகு சகோதரியாகவும்
கட்டிய கணவருக்கு அன்பான மனைவியாகவும்
உற்றார் உறவினர்க்கு நெருங்கிய தோழியாகவும்
விருந்தோம்பலில் சிறப்பு மிக்கவராகவும்
எமது குடும்பத்தின் தலைவியாகவும்
பெற்ற பிள்ளைகளுக்கு பாசமுள்ள தாயாகவும்
மாவீரன் கப்டன் ஜேம்ஸ் அவர்களைப் பெற்ற அன்னையாகவும்
சிறந்ததொரு மாமியாராகவும்
பேரப்பிள்ளைகளுக்கு உற்றதொரு பாட்டியாகவும்
தங்கம் போன்ற மேனியை உடையவர் என்பதால்
செல்லமாக 'தங்கக்கட்டி' என்று அழைக்கப்பெற்றவருமான தங்களை
காலன் கவர்ந்து சென்று ஆண்டு ஒன்று ஓடி மறைந்தது செல்வமே!
ஆனாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு என்றும் நீங்காது!

இங்ஙனம் கணவர், பிள்ளகைள், மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்.

தகவல்: மணியம் மாஸ்ரர் (கணவர்)
(647) 545-9905

**அன்னையின் மடியில்:** 27-08-1948

**ஆண்டவன் நிழலில்:** 01-08-2020


# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com












25 வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய வாரத்திற்கு $40 மட்டுமே

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 416-752-1524

உதயம் 1320 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday July 23, 2021

# கனடாவில் ஒன்றாரியோவிற்கு வெளியே முதற் தடவையாக பொதுத்தேர்தல் வேட்பாளராகத் தெரிவாகியுள்ள தமிழ் பேசும் மருத்துவர்



கனடாவில் இதுவரை தமிழ் மக்கள் அதிகமாக வாழும் ஒன்றாரியோ மாகாணத்திலேயே அதிக அளவு தமிழ் பேசும் வேட்பாளர்கள் மத்திய அரசாங்கத்திற்கான பொதுத் தேர்தலிலும், மாகாண சபைத் தேர்தல்களிலும் மாநகர சபை மற்றும் கல்விச் சபைக்கான தேர்தல்களிலும் போட்டியிட்டும் வெற்றி பெற்றும் வந்துள்ளனர்.

இவ்வாறான கனடிய அரசியல் சூழலில் முதற் தடவையாக கனடாவின் சச்கச்சுவான் மாகாணத்தில் எதிர்வரும் கனடிய மத்திய பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில், லிபரல் கட்சின் வேட்பாளராக போட்டியிடுவதற்கு தெரிவாகியுள்ள வைத்திய கலாநிதி இருதய நோய் வைத்திய நிபுணர் டாக்டர் ரூபன் ராஜகுமார் அவர்களை 'கனடா உதயன்' பத்திரிகைக்காக கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று சந்தித்தோம்.

*(உள்ளே விபரமான செய்தி 12ம் பக்கத்தில்)*

# கனடாவின் பசுமைக் கட்சித் தலைவர் பதவியை அன்னமி போல் தொடர்ந்து வகிக்க உடன்பாடு காணப்பட்டது



கடந்த பல மாதங்களாக கனடாவின் பசுமைக் கட்சிக்குள் இடம்பெற்ற உள் முரண்பாடுகள் மற்றும் கசப்பான மோதல்களிலிருந்து தற்போது கட்சியும் அதன் தலைமைப் பீடமும் விடுபட்டுள்ளதாகவும் தற்போது அதன் தலைவி அன்னமி போல் அவர்களுக்கு ஏற்பட்ட இடையூறுகள் அனைத்தும் ஓய்ந்து விட்டதாகவும் கனடா உதயன் ஆசிரிய பீடத்திற்கு கட்சியின் உயர் மட்ட அலுவலர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் கட்சியின் தற்போதைய தலைவர் அன்னமி போல் அவர்களது தலைமைப் பதவியானது, பாதுகாப்பானது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்றும் மேலும் அவரது பதவிக்கு அச்சுறுத்தல்கள் தடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். கடந்த ஆண்டின் தலைமைப் போட்டியில் அன்னமி போல் அவர்களோடு எதிர்த்துப் போட்டியிட்ட பிரதான போட்டியாளரின் தொந்தரவுகளும் குழப்பங்களுமே இந்த முரண்பாடுகளுக்கு காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. *(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)*

# தம்பிலுவில் கிராமத்தில் வறிய குடும்பங்களுக்கு கனடா சமூகத் தொண்டர் விசு கணபதிப்பிள்ளையின் நிவாரண உதவி



இலங்கையில், அம்பாறை மாவட்டத்தில் உள்ள தம்பிலுவில் கிராமத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு கனடா வாழ் சமூகத் தொண்டர் விசு கணபதிப்பிள்ளை அவர்களின் நிதி அன்பளிப்பில் நிவாரண உதவிகள் அண்மையில் வழங்கப்பெற்றன. *(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)*

# பல்கலைக் கழக பொறியியல் துறைக்கு தேர்வாகியுள்ள மூதூர் பிரதேச மாணவருக்கு கனடாவிலிருந்து நிதி உதவி



இலங்கையில் மூதூர் பிரதேசத்தில் கட்டைபறிச்சான் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மாணவன் கருணாகரன் ஷதுர்ஜன் பல்கலைக் கழக பொறியியல் துறைக்கு தேர்வாகியுள்ள நிலையில் தந்தையை இழந்த அவருக்கு பொருளாதார உதவிகள் தேவைப்பட்டன.

இந்த விபரத்தை கனடா ரொரன்ரொ மனித நேயக்குரல் அமைப்பினரின் கவனத்திற்கு ஆசிரியர் திரு. தரூன் கொண்டு வந்தார். இந்த மாணவருக்கான முதற்கட்ட உதவியாக இருபதாயிரம் ரூபாய்கள் அங்கு அனுப்பிவைக்கப்பெற்று, சில நாட்களுக்கு முன்னர் மாணவரது தாயாரிடம் கையளிக்கப்பட்டது. தொடர்ந்து இந்த மாணவனுக்கு இரண்டாம் கட்ட நிதி உதவி வழங்கப்படும் என்று ரொரன்ரோ மனித நேயக்குரல் அமைப்பின் இயக்குனர் சபை தீர்மானித்துள்ளது.

முதற்கட்ட நிதிக்கான பங்களிப்பை வழங்கிய கனடா வீடு விற்பனை முகவர் ராஜ் பேரம்பலம் அவர்களுக்கு ரொரன்ரோ மனித நேயக் குரல் அமைப்பு நன்றியைத் தெரிவிக்கின்றது.

# AGA Beauty Learning Academy அழகுக் கலை நிறுவனத்தின் மூன்றாவது கிளை திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது




ஸ்காபுறோ நகரில் கடந்த பல வருடங்களாக அழகுக் கலை மற்றும் அதன் கற்பித்தல் நடவடிக்கள் மற்றும் ஆகிய போட்டிகள் தொடர்பான விழாக்களை திறம்படி நடத்திய அனுபவம் கொண்ட திரு திருமதி நரேந்திரா-சகிகலா தம்பதியினர் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபு-றோ நகரில் உள்ள தமிழர் வர்த்தக அங்காடியான **MEJESTIC CITY SHOPPING CENTRE FOR TAM-ILS** இன் உள்ளே தங்கள் மூன்றாவது கிளையை கோலாகலமாக திறந்து வைத்தார்கள். *(உள்ளே விபரமான செய்தி 12ம் பக்கத்தில்)*




# தமிழக சட்டபேரவையில் கலைஞர் கருணாநிதியின் படத்தைத் இந்திய குடியரசு தலைவர் திறந்து வைக்கிறார்



முன்னாள் தமிழக முதல்வர் மறைந்த கலைஞர் கருணாநிதியின் உருவப்படத்தை திறந்து வைக்க ஆகஸ்ட் முதல் வாரத்தில் குடியரசு தலைவர் தமிழகம் வருகை தரவுள்ளார். தமிழக சட்டப்பேரவையில் அவரது உருவப்படத்தை திறந்து வைக்க ஆகஸ்ட் முதல் வாரத்தில் குடியரசு த-லைவர் ராம்நாத் கோவிந்த் தமிழகம் வர உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. சட்டப்பேரவை மண்டபத்தில் கருணாநிதி உருவப்படத்தை குடியரசு தலைவர் திறந்து வைக்க உள்ளார் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பை ஏற்றுக் கொண்டே குடியரசு தலைவர் தமிழ்நாட்டிற்கு வருகை தர உள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.